ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை | உள்நாடு 1 அணா
வெளிநாடு 1½ அணா

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா முன்பணம் — | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, — | ,, 1 12 |
| வெளிநாட்டிற்கு ,, — | ,, 4—0 |

வாரப்பதிப்பு

ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம்: அங். 1க்கு ரூ. 1
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 5 | சென்னை, சுக்கில௵ புரட்டாசி௴ 21௳ (6—10—29) ஞாயிற்றுக்கிழமை | மலர் 22

இந்தியாவிலும் இலங்கையிலும் நடைபெற்ற அநேக வைத்திய மகாநாடுகளிலும், மருந்து கண் காட்சிகளிலும் முதல்தரமான மருந்துகளென்று அநேக தங்கபதக்கங்கள் பரிசு பெற்றவரும், வைத்திய சிம்ஹம், வைத்திய பூபதி, வைத்திய ஆசிரியர், ஸ்பெஷலிஸ்ட் என்ற பல பட்டங்களைப் பெற்றவருமாகிய,

## டாக்டர் டி. சி. சிங்காரம்

அவர்களால் தயார் செய்யப்படும் பிரசித்தி பெற்ற மருந்துகள்.

(ஓர் யோகீஸ்வரரின் அநுபவமுறைப்படி தயார் செய்யப்படுவது.)

### ஆச்சரியமாய் அநேக நோய்களை குணம் செய்கிறது.

### மஹா சந்தனாதி தயிலம்

உலகப் பிரசித்தி பெற்றது

கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இத்தயிலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

இத்தயிலத்தால் குணமாகும் நோய்கள்

| | |
|---|---|
| கண் எரிச்சல் | வெட்டை சூடு |
| கண் சிகப்பு | காது நோய் |
| கண்ணில் நீர் வடிதல் | மண்டை இடி |
| கண் அரிப்பு | பீனிசம் |
| கண் பார்வைக்குறைவு | தலைமயக்கம் |
| கண் கூச்சம் | தலைப்பொடுகு |
| கண்ணில் பீளைசாருதல் | சொரி சிரங்கு |
| மேகநீர், வெள்ளெழுத்து | தலைமயிர் உதிர்தல் |
| ஒருத்தலை நோய் | நாள்பட்ட தலைநோய் |
| கைகால் எரிச்சல் | முதலிய பல வியாதிகளை |
| மூலச்சூடு | ஆச்சரியமாய் குணம் செய்யும் |
| அஸ்திகாங்கை | |

### சாலாமிசிரி லேகியம்

சிறந்த தாதுபுஷ்டி மருந்து!

மிகுந்த பலத்தையும் வீரிய விருத்தியையும் உண்டாக்கும்.

இந்த லேகியத்தை சாப்பிட்டு வந்தால் கைகால் அசதி, இடுப்பு வலி, பலக்குறைவு, ஆயாசம், நரம்புத்தளர்ச்சி, சொப்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரிதஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளைப்போக்கி குறைந்த ஆண் தன்மையை அதிகரிக்கச்செய்து, தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி, வீரியத்தை விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும், சுரு சுருப்பையும் கொடுக்கும். எவ்வளவு கடின வேலை செய்தாலும் யாதொரு களைப்பும் உண்டாகாது. சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச்செய்யும். சாப்பிட மதுரமுள்ளது. பத்தியமில்லை.

ஒருசேர் டப்பி விலை ரூ. 2—8—0

சரீரத்திலுள்ள எவ்வித உஷ்ணத்தையும் நீக்கி குளிர்ச்சியைக்கொடுக்கும். ஒரு முறை இத்தயிலத்தை உபயோகித்தவர்கள், அவர்களே மற்றவர்களுக்கும் சிபார்சு செய்து வருகிறார்கள். இதன் உண்மையை நீங்களும் ஒரு முறை பரிக்ஷித்துப்பார்க்கவும். ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம்.

24 அவுன்ஸ் டின் விலை ரூ. 4—0—0 12 அவுன்ஸ் டின் விலை ரூ. 2—2—0.

பாக்கிங், தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும்.

## டி. சி. சிங்காரம் அண்டு கோ.,

(38) தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

### பகுத்தறிவு

கூடிய விரைவில் "குடிஅரசு" பதிப்பகத்தாரால் வெளிவரப் போகும் மாதப்பத்திரிகை.

இதில் பகுத்தறிவில் சிறந்த பல அறிஞர்களின் கட்டுரைகளும் 'சித்திரபுத்திரன்' வேடிக்கை, சம்பாஷணைகளும் ஏராளமாக வெளி வரும். இப்பொழுதே ஆயிரத்துக்கு மேற்பட்ட சந்தாதாரர்கள் முன் பணம் அனுப்பித் தங்கள்பெயரைப் பதிவு செய்திருக்கின்றனர். வருடசந்தா அணா 0—8—0 எட்டே. வெளிநாடுகளுக்கு 0 12 0.

(எப்) விலாசம்:— "பகுத்தறிவு" காரியாலயம், 14, மவுண்ட்ரோட், சென்னை

### திருப்பூர் பனியன்கள்!

முதல்தரம் கார்டிகன் 32 இஞ்சு டஜன் 1-க்கு 6-8-0. வேண்டியவர்கள் உடனே ஆர்டர் செய்யவும்.

The General Knitting Factory,
TIRUPUR
(6)

# பூவுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத சிங்கபலத்தைத் தருவதெது?

# அமிர்த சஞ்சீவி லேகியமும் அயக்காந்த செந்தூரமுமே

முறையாய்ச் செய்த அயக்காந்த செந்தூரத்தைக் காட்டிலும் தேகபலத்தைத் தரும் ஔடதம் வேறொன்று மில்லை

விளம்பரம்
இதைக் கண்ணுறும் கனவான்களே!



இந்த லேகிய செந்தூரங்கள் சாமான்யமானவையல்ல. அபாரமான பலத்தைத் தரக்கூடிய சக்தி அமைந்துள்ளவை. உறுதியாய் இவற்றை நம்பி வாங்கிச் சாப்பிட்டால் ஒரே தடவையிலேயே இவற்றின் விசேடகுணம் நன்கு விளங்கும்.

## இந்த லேகிய செந்தூரங்களால்

### நிவர்த்தியாகும் முக்கிய வியாதிகளாவன:

தற்காலத்தில் மனிதரின் பால்ய சேஷ்டையாலும், இரத்தப் போக்காலும் அவர்க்கு உண்டான 20 வகை மேகரோகங்கள், குஷ்ட ரோகம், குன்மரோகம், பித்தப்பாண்டு, கைகால் முடக்கு, ஓவொய்வு, பித்த எப்பம், நெஞ்சு தொண்டை எரிச்சல், வயிற்றுப்பிசம், அஜீரணம், பசியில்லாமை, தாதுஹீனம், தேக உளைச்சல், கண்ணில் நீர்வடிதல், சோம்பல், நித்திரையில்லாமை, தலை சுழற்றல், நீர் இறங்கும் போது பொறுக்கமுடியாத பாதையைத்தரும் தந்திமேகம் முதலியவைகள் ஆச்சரியப்படத்தக்க விதமாய் நீங்கிவிடும். பயங்கரமான மேக சம்பந்த வியாதிகளைப் பத்தே வேளையில் போக்கி சப்த நாம்புகளுக்கும் முறுக்கேற்றி அபரிமிதமான இரத்த விருத்தியைப் பெருக்கி பலத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின இலேகிய பஸ்பம் வேறெங்குமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதல்லாமல் தேகத்தைப் புஷ்டியாக்கித் தேகத்தடிப்பு, நகக்கண் வெளுத்திருத்தல் முதலிய வியாதிகளைக் கண்டித்து, தினந்தோறும் மலத்தைத் தாராளமாய்ப் போக்குவதில் இந்த லேகிய செந்தூரங்களே முதன்மையானவை யென்பதை நாம் எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். நீற்க, இந்த லேகிய செந்தூரங்கள், மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்திக்குமா என்னும் சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாளாவது வாங்கி புண்டால் இவற்றின் அபார குணம் தெரியவரும் தவிர யாங்கள் இம்மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரங்களை எவ்வளவு சிறப்பித்துக் கூறியபோதிலும் அது தகும். மேலும் இவற்றை நோய் உள்ளவரேதாம் சாப்பிடவேண்டும் என்ற அவசியமில்லை; யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களைவிட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் இந்த லேகிய செந்தூரங்களை யாதும் பத்தியமின்றிச் சாப்பிட அவர்க்கு நல்ல பலம் ஏற்படும். இது தவறாது. இவற்றைத் தருவித்து நண்பர் எண்ணிக்கையாகச் சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் இல்லாவிடில் உடனே தெரியப்படுத்தினால் கட்டாயம் இவற்றிற்கு வாங்கிய பணம் வாபீஸ் செய்யப்படும். தவிர மேற்காட்டிய நோய்கள் உடையோர் 48-நாட்கள் சாப்பிடுவார்களேயானால் அவை முழுதும் நீங்கிவிடும். அப்படி நீங்கிக் குணம் ஏற்படாவிடில் நாங்கள் அதற்கு உத்திரவாதிகளாவோம். யாங்கள் இவ்வளவு அருமையான லேகிய செந்தூரங்களை எவ்வளவோ சிரத்தையுடன் கஷ்டப்பட்டு முடித்துப் பரோபகாரார்த்தமாக வெளியிட்டோம். இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களுக்குப் பொன் மெடல், வெள்ளி மெடல் பெற்றதல்லாமல் ஆயிரக்கணக்கான யோக்கியதா பத்திரங்களும் பெற்றிருக்கின்றோம். ஆதலின் நமது லேகிய செந்தூரங்கள் யாம் சொன்னபடி குணத்தைக் கொடுக்கும் என்பதைப்பற்றி ஜவாப்தாரியாயிருக்கக் காத்துக்கொண்டிருக்கிறோம்; இது உண்மை. இவற்றை ஒரே தரம் தருவித்துப் பாருங்கள்; எமது உண்மை விளங்கும்.

வாதாதிக்க தோஷத்தினாலாவது, தாப்பியாசத்தினாலாவது, அதிக மனக்கவலையினாலாவது, அடிக்கடி உண்டாகும் நோயினாலாவது, மற்றெந்தக் காரணத்தினாலாவது பல மிழந்தவர்கள் எண்ணிக்கையாக மேற்படி லேகிய செந்தூரங்களைப் புசிப்பார்களானால் இவை தேகாரோக்கியம், வலிமை, அழகு முதலியவற்றை அவர்க்குக் கொடுத்து அவர்களைச் சந்தோஷிக்கச் செய்புமென்பதில் தடையில்லை. வெளியூர்க் கனவான்கள் இந்த லேகிய செந்தூரங்களில் முழு நம்பிக்கைவைத்து ஒரே ஒருதாம் இவற்றைப் பரீக்ஷிப்பார்களானால், அவர்கள் அவசியம் ஆனந்த மடைவார்கள்.

இந்த லேகிய செந்தூரங்களுக்குப் பத்தியமே கிடையாது. எந்தப் பண்டங்களையும் நீக்குதலின்றி சாப்பிடலாம். மருந்து சாப்பிடும்போது பசி அதிகமாய் எடுக்கும் ஆதலால் பச்சைப்பயற்றுக் குழம்பு, கறி, மார்க்கண்ட ரூப்பு. இவைகளை அதிகமாகப் பசியைத் தணிக்கக்கூடிய விதமாகத் தாமதம் செய்யாமல் சாப்பிட்டுவர வேண்டியது. இவற்றைப் புசிக்கும்போதெல்லாம் பலகாரா திகள் சாப்பிடல் வேண்டும். தயிர், பால், நெய் முதலியவைகள் எவைகளாயிருந்தாலும் சந்தேகமின்றிச் சாப்பிட்டுவரலாம்.

இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களை மட்டும் ஒருவர் தருவித்து எண்ணிக்கையாக 48 நாள் சாப்பிடுவாரேயானால் இவை தேகத்தில் ஊற ஊற, மேகமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி அவர் தேகமானது வலுத்துப் புதிய ரத்தம் பரவித் தன் வாழ்நாள் பரியந்தம் இளைக்காமலிருக்கும். இவற்றைப் புருஷன் பெண்ஜாதி இருவரும் ஏககாலத்தில் ஒற்றுமையாய்ச் சாப்பிட்டு வந்தார்களேயானால் அவர்க்கு உதிக்கும் மக்கள் மிகுந்த தேஜஸோடு தோன்றுவார்கள். இது உண்மை. இதை அதிகம் எழுதுதல் அனாவசியம்.

இந்தியா, பர்மா, ஸிலோன் ஆகிய உள் நாடுகளுக்கு 24 நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூ. 1 12 0. போஸ்டேஜ் அணு 6. ஒரே தடவை 48 நாள் மருந்து வாங்குவோருக்கு போஸ்டேஜ் உள்பட ரூ. 4.

பினாங்கு, சிங்கப்பூர், நெட்டால் முதலிய அயல்நாடுகளுக்கு 24 நாள் சாப்பிடக்கூடிய மருந்து விலை ரூபா 1 12 0 தபாற் கூலி ரூபா 1 4 0

48 நாள் மருந்து வாங்குவோருக்கு போஸ்டேஜ் உள்பட ரூபா 5—8—0. சிங்கப்பூர், பினாங், மலாக்கா முதலிய வெளி நாடுகளுக்கு வி. பி. ஆர்டர் இருந்தாலும் முன்பணம் அனுப்பாதவர்களுக்கு மருந்து அனுப்பப்படமாட்டாது.

(51) விலாசம்:— **கருணாநிதி டிப்போ,** 1/6 வெங்கடேசமேஸ்திரி தெரு, சென்னை.

# எங்கள் விளக்கமும் ஆராய்ச்சியும்

(கைவல்யம்)

திரு: கா. சுப்பிரமணிய பிள்ளையவர்களால் திருநான்மறை விளக்கமென்று செந்தமிழ்ச்செல்வியில் எழுதியிருந்ததையும், அதற்கு மறுப்பாக திரு. மா. சாம்பசிவம் பிள்ளையவர்கள் எழுதின திருநான்மறை ஆராய்ச்சியென்னும் புத்தகத்தையும், அப்புத்தகத்திற்கு அதில் பல வித்வப் பெரியார்கள் அபிப்பிராயமெழுதியிருந்ததையும் அநேகர் படித்திருப்பார்கள். திருநான்மறை யென்பது வடமொழி வேதமா? தென்மொழி வேதமா? என்பது அவர்கள் ஆராய்ச்சிக் குறிப்பு. இத்திருநான்மறை பற்றிய ஆராய்ச்சிக்கு விஷயமாயுள்ள நூல்கள் இவர்களுக்கு முக்கியமாக தமிழ் தேவார திருவாசகங்களும், கந்தபுராணம், திருவிளையாடல் புராணம் முதலியவைகளிலுள்ள சில செய்யுள்களுமாம்.

சமய நூல்களின் கருத்தில்நின்று விலகுவது சமய வாதிகளின் வழக்கல்ல வென்பதும், அவர்கள் நூல் வரம்பின்றி ஆராய்ச்சி செய்வது ஒழுங்கல்லவென்பதுமான சட்டம் அவர்களுக்குள் நிலைத்திருப்பதால் நமது நாட்டுப் பண்டிதர்கள் கல்வியெல்லாம் நிஷ்பிரயோஜனமாய் போய்விடுகிறது. மேனாடுகளிலும் ஜப்பான் முதலிய கீழ்நாடுகளிலும் மனுஷ்யருடைய புத்தியைப் பக்குவப்படுத்தி அவை ஜனங்களின் அறிவையும் குணத்தையும் விருத்தி செய்து நாடுகளைப் புதுமை செய்து கொண்டுவரும் இக்காலத்தில் நமது பண்டிதர்கள் சம்பாதிக்கும் அறிவை ஒன்றுக்கு முதவாமல் செய்து, எப்போதும் உயர்ந்த மதிக்குப் புறத்தே தன்னைத் தள்ளிவிடுவதால் நமது பாஷை நம் அறிவு முதிர்ச்சியுடன் தொடர்ந்து வளர இடமில்லாமல் போகிறது.

மறையளித்த சிவபெருமான் திருவாக்கால் தமிழில் அடியெடுத்தளிக்கப்பெற்ற திருத்தொண்டத் தொகை பொல்லாப் பிள்ளையார் சொன்ன நம்பியாண்டார் நம்பி அந்தாதி, உலகெலாம் என அடி யெடுத்தருளப் பெற்ற பெரிய புராணம், இவைகளை வைத்துக் கொண்டு இதிலேயே ஆராய்ச்சி செய்தால் விளையாட்டுப் பரபரப்பில் ஒரு குழந்தை தனது தாயைக்காட்டிலும் விளையாட்டுப் பண்டங்களிடம் தனக்கதிக அன்பிருப்பதாக நினைத்துக்கொள்ளுதல்போல் ஆகுமேயல்லாமல் நமது வித்வப்பெரியார்கள் தெய்வ விரோதமான குருட்டுக் கொள்கையை யெல்லாம் தைரியத்துடன் எதிர்த்துத் தள்ளி உலகப் பொதுவிதியான தெய்வ சம்மதத்தில் புகுந்து உலக சிருஷ்டியைத் தெரிந்து அதை நமக்கு உபயோகப்படுத்துவதற்கு மானுஷீகத்தை விரிந்த அறிவுபெறச் செய்ய முடியுமோ? எங்கள் படிப்பு மோக்ஷத்தை அளிப்பதற்கே என்று சொல்லுவார்களானால் மோக்ஷத்திற்காக கஷாயமுடுத்தும் மடாதிபதிகளும் கிளாஸ்கோ மல்லில் காவி முக்குளையில் வித்வப் பெரியார்களை சைனா பஜார் சந்தைக்குக் கூட்டிப்போய் பரிசோதிக்கவேண்டுமோ?

திருநான்மறை விளக்க ஆராய்ச்சி என்னும் புத்தகத்தைவிட அதற்கு அபிப்பிராயம் கூறின வித்வப்பெரியார்களில் சிலர் சொல்லியிருக்கும் அபிப்பிராயம் அவர்களுடைய சமயப் பற்றைக் காட்டினாலும் வித்வான் என்னும் அறிவின் தன்மைக்குப் பொருந்தவில்லை. அதிலும் சிலர் கோபமாகவும் இழிவாகவும் வித்வத் தன்மை யென்று நினைத்துக்கொண்டிருக்கும் இலக்கிய இலக்கண பதக் கோர்வையால் அக்கிரமமாக தங்கள் வரம்பையும் மீறி எழுதியிருக்கிறார்கள்.

திரு. மா. சாம்பசிவம் பிள்ளையின் திருநான்மறை ஆராய்ச்சி யென்னும் புத்தகமும், அதற்கு வித்வப் பெரியார்கள் அபிப்பிராயமும், வடமொழி வேதமும் அதையே சைவச் சமய ஆச்சாரிகள் சொன்னார்களென்றும் தீர்மானம் செய்திருக்கிறபடியே வைத்துக் கொள்ளுவோம். ஆனால், வேதசம்மத ஏற்பாட்டின்படி இத்தனை பேர்களும் சூத்திரர்கள்தானே. வேத விதிப்படி இப்பெரியார்கள் தம்மை மட்டும் சற் சூத்திரர்-என்று பெருமை கொள்ளவாமெனில் சூத்திரன் என்னும் சொல்லிற்குப் பொருள் மடமையுடையோன், பிறர்க்கு ஏவல் வேலை செய்வோன் என பனவாதல் அமரநிகண்டில் விளங்குவது இலக்கிய இலக்கணப் பெருமையுடைய பண்டிதர்களுக்குத் தெரியாதோ? வேத ஸ்மிருதியை நிச்சயம் பண்ண வந்த வித்வப் பெரியார்கள் ஸ்மிருதியில் சூத்திரனுக்கு விதித்திருக்கும் தருமத்தைப் படித்ததில்லையோ? சூத்திரனென்றால் ஒழுக்கம் கெட்டவன், ஆசாரமில்லாதவன், கண்டதைப் புசிப்பவன் என்று இதிகாச இலக்கியத்தில் விரித்திருப்பதை இவ்வித்வப்பெரியார்கள் படித்ததில்லையோ? தம்மை சற்சூத்திரர் என்று நினைப்போர் தம்மை நல்ல மடையர், நல்ல வேலைக்காரர், நல்ல ஒழுக்கம்கெட்டவர்கள், நல்ல ஆசாரமில்லாதவர்கள் என்று கூறி மகிழ்வாரை ஒத்திருக்காதோ?

அதுவுமல்லாமல், தமிழில் வேதங்களென்பதையும் அதைச் சொன்ன சமய ஆச்சாரிகளையும் சூத்திரர் எனக்கூறி அவர்கள் அருளிச் செய்த நூல்களைச் சூத்திரப் பண்டாரப் பாட்டென்று இகழ்ந்து சைவப் பெரியார்கள் நிறைந்துள்ள ஊர்களில்கூட சிவபிரான் திருக்கோவில்களில் ஓதுவார் பாடும் தேவாரத் திருவாசகங்களை வேதமறைப் பார்ப்பார்கள் செவிகொடுத்துக்கேட்டால் பார்ப்பாருக்குத் தீட்டுவந்து விடுமென்று கருதி ஓதுவார் அவற்றைப் பாடத் தொடங்கு முன்னரே நம்பியாரிடம் விடைபெற்றுக்கொண்டு கோவிலை விட்டு அகன்று போதலை, திருநான்மறை ஆராய்ச்சிக்கு அபிப்பிராயம் சொல்லவந்த வித்வப் பெரியார்கள் கண்ணில் பட்டதில்லையோ? அவை இன்றும் பார்த்துக் கொண்டிருக்கும் காட்சியல்லவா? தேவாரம் ஓதுவதற்குமுன் பார்ப்பாரப்பாட்டு ஓதும்படிக்கு ஏற்பாடு செய்து வைத்திருப்பதும் இவ்வித்துவப் பெரியாரின் ஆலோசனையற்ற அறிவைப் புத்திதானே; அந்தப் பார்ப்பாரப்பாட்டும் அப்பர் சுவாமிகளுக்கு பாடுவதில் ஆக்ஷேபனையும் அதிகப் பணம் கொடுத்தால் அப்பாட்டுப்பாடுவதும் யாருக்குத்தெரியாது.

திருவள்ளுவர் சொன்ன வேதத்தை காரியம் வந்த விடத்தில் பண்டிதர்களுக்கு முன்னால் பார்ப்பார்கள் தலையசைக்கிறார்களேயல்லாமல் திருவள்ளுவரைக் கொண்டாடுவதும் அவர் சந்நிதிக்கும் அவர் திருநாளிலும் வேதப்பார்ப்பார்கள் எத்தனை பேர்கள் கலந்துகொள்ளுகிறார்கள். அன்றியும் சிவனை ஆண் குறித்தெய்வமென்று பொருள்படும் 'சிசின தேவர்' என்று சொல்லி சிவலிங்கத்தை இழித்துரைத்திருப்பதோடு அதனை வழிபடும் தமிழ் மக்களை யெல்லாம் சூத்திரனென்று இழிவுபடுத்தியிருப்பது எந்த சைவப் பண்டிதருக்குத் தெரியாது.

கடவுளுக்குச் சூத்திரன், குருவிற்கு சூத்திரன், வேதத்திற்கு சூத்திரன், அதன் பிரிவுகளுக்குச் சூத்திரன், மோக்ஷத்திற்குச் சூத்திரன், ஜாதியில் சூத்திரன், புண்ணியத்தில் சூத்திரன், எழுத்தில் சூத்திரன், இலக்கணத்தில் சூத்திரன், இதிகாசத்தில் சூத்திரன், [illegible]த்துக்கிலீஸ் சட்டத்தில் சூத்திரன், கலியாணம் இழவு கல்லெடுப்பு கருமாந்திரம் முதலிய இத்தனையிலுமுள்ள மந்திரத்திலும் சூத்திரனாயிருக்கும் தமிழ் மக்கள் சைவத்திலே மூழ்கினாலும், சமயத்தில் நடந்தாலும், சுவாமிக்குக் கைங்கரியம் சாகும்வரையில் தொண்டோடு செய்தாலும், திரு. மா. சாம்பசிவம்பிள்ளையவர்களைப்போல் திருநான்மறை ஆராய்ச்சி செய்து பார்ப்பனனிடம் பரலோகச் சாவியை விலைக்குச்செய்து அவர்கள் மூலந்தனிலைப் பெற்றாலும், சத்திரம் கட்டி பார்ப்பனனுக்கே தருமம் செய்தாலும், ஆலயத்தில் அவர்கள் பிள்ளைகளுக்கே அன்னம் போட்டாலும், கோவில் கட்டி கும்பாபிஷேகம் செய்து தெய்வலோகத்திலிருக்கும் தெய்வத்தைக் கூட்டிக்கொண்டு வந்து பார்ப்பனர் கையிலேயே ஒப்படைத்தாலும், மடாதிபதிகளாகி சிவபெருமானின் கட்டளைச் செங்கோலைத் தாங்கியிருந்தாலும் சூத்திரப்பட்டமும் அதன் இழிவும் போவதில்லையே! வித்துவப்பெரியார்களே! இப்புதுமையைப் பார்த்தீர்களா? நாங்கள் உங்களை விட இலக்கிய இலக்கணத்திலும், சமய சாத்திரங்களைப் படிக்கும் முறையிலும் தேர்ந்தவர்களென்று சொல்லுவதில்லை. அவ்விகழ்ச்சியின் துன்பங்களை உங்கள் நெஞ்சம் நினைக்கவில்லையே என்பதை நினைக்கையில் உங்கள் படிப்பெல்லாம் தெய்வ விதியான பொதுலோக விதிக்கு உபயோகப்படுவதில்லையென்றே சொல்லுகிறோம். தெய்வத்தின்பெயர் சொல்லி மனிதனை மனிதன் அவமதிக்கக் கூடாதென்றும் சொல்லுகின்றோம்.

முனிவர்கள் வேதங்களை இடைவிடாது காண்கின்றனர்; ஸ்மிருதிகளை எப்பொழுதுஞ் சிந்திக்கின்றனர்; ஆதலால் சுருதி ஸ்மிருதிகளிரண்டும் அளக்கத் தக்க அளவைகளாகவும் உலகம் அளக்கப்பட்ட பொருளாகவும் இருக்கின்றன. இவ்விரண்டினையும் இவற்றிற்கு வேறாகிய தருக்கம் முதலிய கருவி நூலைக்கொண்டு அவமானம் செய்கின்ற ஒருவனை நாஸ்திகன் எனவும் வேத நிந்தகன் எனவும் ஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனதால் வேதத்தை நிலைநிறுத்த வந்த தமிழ் வித்வப் பெரியார்களெல்லாம் ஒன்றோ சூத்திரனாகவிருந்து தீரவேண்டும், அல்லது நாஸ்திகனென்னும் பேரைச் சுமந்து கொள்ளவேண்டும். இம்மோசடியான நிர்ப்பந்தத்தைத் தெரிந்த திரு: கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் எழுதிய திருநான்மறை விளக்கமென்பதற்கு மறுப்பும் அதற்கு வித்வப் பெரியார்கள் அபிப்பிராயமும் எழுதாவிட்டால் சைவத்திற்கு என்ன நஷ்டம் வந்துவிடும். சிவபெருமான் தமிழில் தான் மறைபச் சொன்னார் என்று சொன்னதினால் சிவபெருமானுக்குக் கோபம் வந்து விடுமோ? அவரல்லவோ, ஆம்; இல்லை என்று சொல்லவேண்டும். சிவ பெருமானுக்குக் கோபம்வந்து விடுமென்றோ சைவ உலகம் அழிந்துபோகுமென்றோ நினைப்பதைவிட சிவ துவேஷம் வேறுண்டா?

பார்ப்பானின் தாசி மக்களென்றும் அடிமைகளென்றும் அதிலும் எழுவித அடிமைகளென்றும், ஆசாரம் ஒழுக்கமிலாதவர்களென்றும் அப்படியே அநேக புத்தகங்களில் ஒரு தேசத்தார் முழுமையும் எழுதிவைத்துக்கொண்டிருக்கும் வேதத்தை எந்தக் கடவுள் எந்தமுகத்தில் எந்த பாஷையில் எந்த ஜனங்களுக்குச் சொன்னாலென்ன, எந்தப் பெரியவர்கள் ஆமோதித்தாலென்ன. அப்படிச் சொல்லும்படியான கடவுளும் அதை ஆமோதிக்கும் பெரியவர்களுமிருப்பார்களா என்பதை சற்று வித்துவப் பெரியவர்கள் ஆலோசித்துப் பார்க்கட்டும். இது எங்களுக்குப் படாததல்லவே என்று வித்வப் பெரியார்கள் சொல்லக்கூடும். குருக்கள்பண்டிதர்களும், பார்ப்பாரப்பண்டிதர்களும் தங்களினத்தின் லாபத்திற்கு தங்கள் நியாயத்தைப்பொருத்திச் சொல்லுவார்கள். அவர்கள் முகஸ்துதிக்கு நம்மவர்கள் போ

(தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க)

# இதிகாசங்கள்

## இராமாயணம்—கிட்கிந்தா காண்டம்

(கட்டுரை—7)

(திரு. சந்திரசேகரப் பாவலர்)

(சருக்கங்கள் 39 முதல் 47 முடிய)

தன்னை மார்போடணைத்துச் சீதையைத் தேடச் சொன்ன இராமனிடம் சுக்கிரீவன் சேனைகள் வருகின்றன என்று கூறினான். இராமன் அவனை மறுபடியும் அணைத்துக் கொண்டு "முன்பு புலோமனென்ற அசுரனுடைய பெண்ணான பௌலோமியை அனுக்லாதன் என்றதைத்தியனும் இந்திரனும் மணம்புரிய விரும்பினர். ஆனால், புலோமன் தன் மகளை அனுக்லாதனுடன் அனுப்பி விட்டான். அதுகண்டு இந்திரன் அவனைக்கொன்று அப்பெண்ணைத் தூக்கிப் போனான். அதுபோல இராவணன் சீதையை எடுத்துச்சென்றான். இந்திரன் அவளுடைய தந்தையாகிய புலோமனைக் கொன்றதைப்போல நான் இராவணனைக் கொல்வேன்" என்றான். அப்போதுவானரசேனைத் தலைவர்கள் வந்து மேலாடைகளை அரையில் கட்டிக்கொண்டு சுக்கிரீவனைப் பணிந்தனர்; சுக்கிரீவன் அவர்களை இராமனுக்குக் காட்டி "இவர்களை வேண்டுமாறு செய்யக்கட்டளையிடு" என்றான். இராமன் அவனை மறுபடியும் தழுவிக்கொண்டு, "நீயே தலைவனாதலின் கட்டளையிடு" என்றான்.

சுக்கிரீவன் விநதன்என்றசேனைத் தலைவனையழைத்து கிழக்குத்திசை சென்று இன்னின்னஇடங்களிலெல்லாம் தேடவேண்டுமென்று விவரமாகக் கூறினான். அங்கதன் அனுமான், சாம்பவன் முதலிய வீரர்களைத் தெற்கிலும், சுஷேணனை (தாரையின் தந்தை) வணங்கி மேற்கிலும், சதவலியை வடக்கிலும் தேடும்படி கட்டளையிட்டு, சுக்கிரீவன் இன்னின்ன இடங்களில் இவ்வாறு தேடவேண்டுமென அவர்களுக்கு அத்திசைகளைப்பற்றிய முழு விவரமும் கூறி அனுப்பி அவர்களை ஒரு மாதத்திற்குள் திரும்பிவரவேண்டுமென்றும் ஆணை தந்தான். அவன் தெற்கே செல்வோரிடம் தாமிரபரணியைத் தாண்டி முத்துக்கள் மலிந்த பாண்டிய மன்னரின் தங்கமயமான தலைநகரைக்கண்டு அதற்குத் தெற்கே உள்ள கடற்கரையில் மகேந்திர மலையைக் காணவேண்டுமென்றும் அதற்கு நூறு யோசனைக் கப்பால் இலங்கை இருந்ததென்றும் கூறினான். பின் அவன் அனுமானை யழைத்து புகழ்ந்து முயற்சியில் தளராதிருக்கக் கூறினான்.

இராமன் அனுமானை யழைத்துத் தன் மோதிரத்தைச் சீதைக்கு அடையாளமாகக் காட்டும்படி கொடுத்து, "இதனால் சீதை உன்னைத் தெரிந்து செய்தி சொல்லியனுப்புவாள். உன்னால் என் காரியம் நிறைவேறிற்றென்று எண்ணுகிறேன்" எனப்புகன்றான். எல்லோரும் விடைபெற்றுத் தேடப் புறப்பட்டுச் சென்றார்கள். சுக்கிரீவனுக்கு உலகமுழுவதுமுள்ள இடங்களெல்லாம் எப்படித் தெரியுமென இராமன் வினவினான். சுக்கிரீவன், "நான் வாலி நுழைந்திருந்த குகையை மூடிவிட்டு அரசேற்று தாரையையும் ருமையையும் பெற்று வாழும்போது வாலி வந்து என்னைத் துரத்தினான். அப்போது நான்உலகமெல்லாம் சுற்றிச் சுற்றி ஓடினேன், அதனால் எல்லாம்எனக்குத்தெரியும். கடைசியாக அனுமான் வாலி வரமுடியாத இம்மதங்க மலையில் நான் தங்கும்படி ஏற்பாடு செய்தான். நீ வரும் வரை அதில்தங்கியிருந்தேன்" என மறுமொழி கூறினான். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

இந்திரனை நாம் முன்னர் கொலைபாதகத்துக்கு அஞ்சாத பாவியென்றும் மிகவும் தீய ஒழுக்கமுடையவனென்றும் பல பல இடங்களில் விளக்கிக் காட்டினோம். இங்கு அவனைப் பற்றி இராமன் கூறும் வரலாற்றைப் பார்த்தால் அவன் மிகவும் கேவலமானவனாகக் காணப்படுகின்றான். பௌலோமியென்றபெண்ணைத் தனக்குக் கொடாமல் இருந்ததற்காக அப்பெண்ணின் தந்தையைக் கொன்றதோடு அப்பெண்ணை அவளுடைய தந்தை அனுமதிப்படி அழைத்தேகியவனையும் கொன்று அப்பெண்ணைத் தூக்கிப் போனானும் இந்திரன்! எத்தனை கொலைகள்? எத்தனை அழிவுகள்? இத்தீயவன் தேவர்கள் தலைவனாம்! அவனுக்குத் தெய்வங்களெல்லாம் உதவி செய்தனவாம்! இவ்விழிந்த கதைகளைப் பாராட்டிப் படிப்போர் சிந்தனை தான் கெடாமல் என் செயும்? இவைகளெல்லாம் புண்ணியந் தரக்கூடியவைகள்!

தீயவனாகிய இந்திரனைப் போல இராவணன் சீதையைத் தூக்கிப் போயினனாம்! இராவணன் தன்னுடைய தங்கையாகிய சூர்ப்பனகையை இராமன் சேடு செய்ததனாலேயே அவன் சீதையைத் தூக்கிப் போனான். ஆனால் இந்திரனுக்கு எவன் என்ன கேடு செய்தான்? பெண்ணைக் கொடுக்க மாட்டேனென்பது ஒரு கேடாகுமா?

இராமன்சுக்கிரீவனைஒருமுறையல்ல பலமுறை மார்போடு தழுவிக்கொள்ளுகிறான். இக்கட்டுரை வரலாற்றுப் பகுதியில் மட்டுமல்ல; ஏனைய இடங்களிலும் அவன் சுக்கிரீவனைஅவ்வாறு செய்தானென வால்மீகி பலமுறை கூறுகிறார். சுக்கிரீவன் உண்மையில் குரங்காயிருந்திருந்தால் இராமன் அவ்வாறுதழுவிகொள்வானா? மேலும் வானரப்படைகள் தங்கள் மேலாடையை அரையில் கட்டிக்கொண்டுசுக்கிரீவனை வந்து பணிந்தனவாம்! அவ்வாறாயின் குரங்குகளுக்கு மேலாடையேது? அவைகளுக்கு அரசனைக் காணவரும்போது அதை அரையில் கட்டிக்கொண்டு வரவேண்டுமென்ற ஒழுக்க அறிவுதான் ஏது? ஆதலின் இவர்களைக் குரங்கெனக் கூறியதெல்லாம் ஆரியர் வேண்டுமென இழிவுபடுத்தச் செய்த முயற்சியே என்பது புலனாகும். இவ்வுண்மையை நாம் முன்னரும் நிலை நாட்டினோம்.

சுக்கிரீவன் தன்னைக் குகையில் வைத்து அடைத்ததோடு தன் மனைவியையும் கைப்பற்றியதைக் கண்ட வாலி துரத்த சுக்கிரீவன் உலகமெல்லாம் அலைந்து தவித்தானாம்; அப்போது அனுமான் அவனை மதங்க மலையிலிருக்கச் சொன்னானாம். இந்த இடத்தில் மொழி பெயர்ப்பாளர் சினிவாசய்யங்கார் பக்கம் 155ல் "இந்த யோசனை அனுமானுக்கு முன்பு ஏன் தோன்றவில்லை?" எனக் குறித்திருக்கிறார். இது கவனிக்கத் தகுந்த குறிப்பே. இனி கம்பர் புரவியை ஆராய்வாம்.

இராமன் கூறுவதாக வால்மீகி கூறுகிற மிக இழிவான இந்திரனுடைய கொலைபாதகச் செயலைக் கம்பர் கூறவில்லை. அனுமான்சுக்கிரீவனுடனேயே வந்திருக்க அவனை சேனை சேர்க்கக் கிட்கிந்தையிலிருந்தனுக்கக் கூறிய கம்பர் அவனைப்பற்றி இராமன் சுக்கிரீவனிடம் வினவினனென்றும், அவன் பின்னர் சேனைகளோடு வந்து இராமனைக் கண்டனனென்றும் கூறினர். சுக்கிரீவன் இராமனைச் சென்று கண்ட அந்நாள் இரவு சுக்கிரீவனையும் அங்கதனையும் இராமன் அனுப்பிவிட்டு இலக்குவனோடு தனித்திருந்து அவன் கிட்கிந்தை சென்று மீண்ட வரலாற்றை முழுவதும் ஒன்றுவிடாமல் அவனிடம் வினவி யிருந்தனன் என்றும் கம்பர் புதுக்கதை புனைகிறார். கம்பர் கதை முழுதும் புதுக்கதைதானே! சேனைகள் வந்ததும் இராமன் தம்மோடும் சுக்கிரீவனோடும் ஒரு மலைச் சிகரத்தில் ஏறிக்கொண்டு அவைகளை நோக்கி நெடுநேரம் கண்டும் எல்லை காணாமல் சேனை முழுதும் பார்க்க நாள் பல செல்லும். ஆதலின் மேல் நடக்க வேண்டியவைகளைச் செய்வோம் எனப் புகன்றனனெனவும் அவர் கூறுகிறார்.

சுக்கிரீவன் தான் நாலு திசைகளிலும் அனுப்பிய வீரர்களுக்கு அவ்வத் திசைகளிலுள்ள விவரங்களையெல்லாம்மிக விரிவாகக் கூறினனென வால்மீகி கூற கம்பரோ அவன் தென்திசை விவரங்களை மட்டுமே விரித்துரைத்ததாகக் கூறுகிறார்.

வால்மீகி 40, 42, 43 ஆகிய மூன்று சருக்கங்களிலே முறையே கிழக்கு, மேற்கு, வடக்கு ஆகிய திசை விவரங்களை மிக விரிவாகக் கூறுகிறார். கம்பரோ அவைகளையெல்லாம் கூறாமல் விடுத்து ஒரே பாடலில் இன்னின்னாரை இன்னின்ன திசைகளுக்கு அனுப்பினான் என்று மட்டும் கூறி அமைகிறார். இராமன் சுக்கிரீவனை நோக்கி உனக்கு இத்திசை விவரங்களெல்லாம் எவ்வாறு தெரியுமென்று வினவியதையும் அதற்கு அவன் தன்னை வாலி துரத்தியபோது அங்கெல்லாம் ஓடிக் கண்டதை மொழிந்ததையும் கம்பர் கூறவில்லை. இராமன் அனுமானிடம் மோதிரம் தந்தபோது சொல்லிய மொழியெல்லாம், 'இதனால் சீதை உன்னைஇன்னாரென அறிந்துசெய்திசொல்லியனுப்புவாள். உன்னால் என்காரியம்முடிந்ததாகவே நினைக்கிறேன்" என்பது மட்டுமேயாக கம்பர் அனுமானிடம் இராமன் சீதையைக் கண்டுபிடிப்பதற்கு அவர்களுடைய அங்க அடையாளங்களையெல்லாம் மிகவும் விவரமாகக் கூறினனென ஒரு புதுக்கதை கட்டிக்கொண்டு சீதையை உள்ளங்கால் முதல் உச்சிவரை விவரித்துரைத்து மகிழ்கின்றார். ஒருபெண்ணைஇவ்வோருறுப்பாக வருணித்து மகிழவேண்டுமானால் அதற்குக் கம்பர் இவ்வாறு தான் சந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொள்ளவேண்டுமோ? அதற்காக அவர் ஒரு தனிநூல் எழுதி மகிழ்ந்திருக்கலாமே!

கம்பர் சீதையின் அங்கங்களைப் பற்றி விவரித்து முப்பத்து நான்கு பாடல்கள் பாடியிருக்கிறார். அந்த முப்பத்து நான்கு பாடல்களாலும் விவரித்த அங்க அடையாளங்களைக் கொண்டு அனுமான் சீதையைக் கண்டுபிடிக்க வேண்டுமாம்.

"மங்கையர் அவளை ஒப்பார்
மற்றுளர் இல்லர் என்னும்
சங்கையில் உள்ளம்தானே சான்
றெனக் கொண்டு சான்றோய்!
அங்கவள் நிலைமை எல்லாம்
அளந்தறிந்து அருகுசார்ந்து
திங்கள்வாள் முகத்தினாட்குச் செப்பு
எனப் பின்னும் செப்பும்."

சீதையினுடைய பாதம், புறஅடி, கணைக்கால், தோள், முன்கை, கை, நகம், கழுத்து, அதரம், பற்கள், மூக்கு, காது, கண்கள், புருவம், நெற்றி, முகம், கூந்தல், சொல், நடை நிறம் இவைகளையெல்லாம் மிகவும் விரிவாக விவரித்து அவளை அவ்வடையாளங்களால் கண்டு பிடிக்க வேண்டுமென்று இராமன் அனுமானிடம் சொல்லியனுப்புகின்றனன். இவைகளையாவது வெளியில்தோன்றும் உறுப்புக்களாதலின் அனுமான்

(தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க)

# புராண ஆபாசங்கள்

## மாறுவேடம் பூண்டு புராண ஆபாசத்தை வெளியாக்கும் இரு இளைஞர்கள்

(தரும பரீட்சை என்னும் பண்டைய ஓலைச்சுவடியிற் கண்டது)

[இடம்: பாடலீபுத்திரம் பிரம்மாலயம்]

[முதல் நாள்]

மனோவேகன், வாயுவேகன் என்னும் இரண்டு இளைஞர்கள் இந்துமத புராணங்களிலுள்ள ஆபாசப் புரட்டுகளை வெளியாக்கி பொதுஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கும் அஞ்ஞானத்தையும் பயத்தையும் பணச் செலவையும் நீக்கி நன்ஞான மார்க்கத்தில் திருப்பவேண்டி புல் சுமையை ஒருவனும், விறகுச்சுமையை ஒருவனுஞ் சுமந்துகொண்டு தங்களுக்குரிய இயற்கை சௌந்தர்யாலங்காரத்துடன் பாடலீபுத்திரம் பிரம்மாலயத்தின் கிழக்கு வாசற்படி வழியாய்ச்சென்று அவ்விடத்தில் கட்டப்பட்டிருக்கும் பேரிகையை அடித்துச் சிம்மாதனத்தில் வீற்றிருந்தார்கள். பேரிகை சப்தங்கேட்டு வேத பாராயணரும் சாஸ்திர சதுர்முகருமாகிய விப்பிர ஜனங்களும் பொதுஜனங்களும் ஓடி வந்து இவர்களுடைய ரூபலாவண்யத்தையும் சௌந்தரியத்தையுங் கண்டு இவர்கள் காரண புருஷர்களோ என்னமோவென்று ஆச்சர்ய முற்று, விப்ரர்கள், நீங்கள் யார்? எச்சாத்திரத்தில் சமர்த்தர்? வாதம்பண்ண வல்லவரோ என்று கேட்டனர். உடனே மனோகரன் எழுந்து நாங்கள் தேசங்கள் பார்க்க யாத்திரையாக வந்தவர்கள்; எங்களுக்குச் சாத்திரமோ வாதமோ ஒன்றுந் தெரியாது என்றனன். விப்பிரர்கள் கோபமாய், 'நீங்கள் பிழை செய்து விட்டீர்கள், சாத்திர வித்வன்னரும் எங்களுடன் வாதம் பண்ண வல்லவருமே இப்பேரிகையை அடித்துச் சிம்மாதனத்திலமர வேண்டும். யௌவனமும் அழகும் பலமும் நிறைந்திருந்தும் நீங்கள் இந்த நீசாசாரத்திலிருந்து கொண்டிருப்பதுமன்றி அஞ்ஞானத்தராகிய நீங்கள் இந்த பேரிகையைக் கொட்டலாமா! புல்லும் விறகுஞ் சுமக்கும் நீசர்களே இதற்குத் தக்க பதில் கூறிவிட்டு வெளியேறுங்கள்' என்றனர்.

உடனே மனோவேகன் எழுந்து ஆனால் உங்களுடன் வாதித்தே வெளியேறுகின்றோம்; எல்லாரும் அமருங்கள்என்றுகூறி 'ஐயா விப்பிரர்களே! எங்களைப்போன்ற உருவும் சாமர்த்தியமும் உள்ளவர்கள் நீசாசாரத்தில் வாழ்ந்தவர் உங்கள் மத புராணத்தில் யாருமில்லையா? கூறுங்கள்' என்றனன். விப்பிரர்கள் யாருமில்லை, யாருமில்லை என்று உரத்துக் கூவினர். மனோவேகன் மகிழ்வுடன், விப்ரர்களே! ஸ்ரீமகாலட்சுமிக்கு நாயகனும் புவனபாலகனும் கௌஸ்துபாபரணுமான மகாவிஷ்ணு கோகக்ஷனுக்கு புத்திரனுகி அடிமையாகி அர்ச்சுனனுக்கு சாரதியாகியும் தூதனுகியும் இன்னும் கணக்கிலாத ஈனத்தொழில்களையும்புரிந்திருக்கின்றானே! அது நீசாசாரமல்லவா? கேளும்; நித்யனென்றும், தேவாதிதேவனென்றும்; ஜனன மரண வர்ஜிதனென்றும், ஞான சொரூபனென்றும் புகழ்ந்ததற்கு மாருக பன்றியாகவும் மச்சமாகவும் பலதரம் பிறந்திருக்கின்றானே! ஞான சொரூபனென்றதற்கு மாறு தூதனுக துரியோதனனிடத்தில் போகும்போது வைவான் என்பதை யறியாமல் வாய் கொடுத்துவிட்டு அவமான பேச்சுகள் கேட்டுக்கொண்டு வந்தானே. இவைகள் நீசாசாரமல்லவா இவைகள் உங்கள் புராணத்தில் உண்டா? இல்லையா? என்றனன். எங்களை நீசாசார முடையார் அஞ்ஞானி யென்றீர்களே இதற்கு விடை கூறுங்கள் என்று தைரியமாய்க் கேட்டான். விப்பிர ஜனங்கள் மறுத்துக்கூற முடியாமல் வெட்கித் தலைகுனிந்தார்கள். ஜனங்கள் ஆச்சரிய முற்று இரு இளைஞர்களையும் போற்றிப் புகழ்ந்து ஜெயவாதிகளென்று பட்டமளித்து வீடுபோய்ச் சேர்ந்தார்கள். இருவரும் சந்தோஷ முகத்துடன் வெளி வந்துவிட்டார்கள். விப்பிரர்கள் 'இவர்கள் யாரோ நம் பிழைப்பைக் கெடுக்கவந்த பேர்வழிகள் இவ்வாறு நம்புராணங்களை இகழ்ந்து ஆபாசங்களை வெளியாக்கிவிட்டால் நம்மை மதித்து யார் வரப் போகிறார்கள்' என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு வருத்தத்துடன் வீடுபோய்ச் சேர்ந்தார்கள்.

### இரண்டாம் நாள்

மறுநாள் மனோவேகன் வாயுவேகனிருவரும் கையில் வில்லுந்தடியும் தாங்கி வில்லியர் போன்ற வேடத்துடன் பிரம்மாலயத்தின் வடகோபுர வழியாக உள்ளே சென்று பேரிகையடித்து சிம்மாதன மேறினார்கள். பழையபடியும் விப்பிரர்களும் ஜனங்களும் ஏராளமாய் வந்து கூடி விட்டார்கள். உடனே விப்ரர்கள் முதல் நாள் கேட்டபடி வாதத்துக்கழைக்க இருவரும் வாதம் பண்ணத்தெரியாதவரென்று மறுத்தார்கள். ஆனால், இவ்வாறு பேரிகை கொட்டவும் உட்காரவும் கூடாது என்று கண்டித்துவிட்டு நீங்கள் யார் இங்கு வந்த காரணம் என்ன என்று வினவினர். 'நாங்களிருவரும் காட்டில் வாழும் வில்லியர். இந்த வில்லையும் தடியையும் விற்பதற்கு இந்நகர் வந்தோம்' என்றனர். அங்குள்ளவர்களில் சிலர் அதன் கிரயத்தைக் கேட்டனர் 'இவ்விரண்டும் ஒரு குட்டி சண்டேலியின் எலும்பால் செய்யப்பட்டது. இவ்வில்லில் அம்பைத் தொடுத்து விட்டால் நூறு யோசனை தூரமானலும் போய்ச் சத்துருவைக் கொல்லும். இத் தடியால் எத்தகைய பெரிய பர்வதங்களையும் மெதுவாக அடித்தால் தூள் தூளாய் நொறுக்கி விடும். இவைகளின் விலை பன்னீராயிரம் வராகன். வரும் வழியில் எங்கள் கையிலுள்ள உணவுப் பொருள்களையும்; சொத்துக்களையும் கள்ளர் ஏமாற்றிப் பறித்துக் கொண்டபடியால் இவைகளை விற்றுவிட வந்தோம், என்றனர். எல்லா விப்பிரர்களும் ஜனங்களும் பெரு நகைப்பு நகைத்து இத்தகைய அபத்தம் சொல்லுவாருலகில் உங்களைப்போல் யாருமிரார் என்று ஏசினார்கள். உடனே மனோவேகன்விப் பிரர்களை பார்த்து 'உங்கள் மதபுராணத்தில் இத்தகைய அபத்தக்கதையில்லையோ என்றுகேட்டான் எங்கள் புராணத்தில் நம்பத்தகாத இத்தகைய பொய் கிடையவே கிடையாது, இருப்பின் கூறுங்கள், பார்க்கலாம். என்றனர். உடனே மனோவேகன் தைரியமாய் நின்று உங்கள் புராணத்திலுள்ள சதபலி சரித்திரம் சொல்ல ஆரம்பிக்கின்றேன் என்று நமஸ்கரித்துச் சொல்லுகிறான்:—

'சதபலி என்ற ஓர் அசுரமகிபதி தேவர்களைப் பிடித்துக் கட்டி தன்னுடைய ஆதீனத்தை தன் குமாரன் சகஸ்ரபலிக்குக் கொடுத்துத்தான்ஒரு பெரிய பர்வதத்தின் சிகையில் தபசு செய்யப்போய்விட்டான். இதையறிந்த தேவர்கள் சதபலியை இவ்வாறே விட்டு விட்டால் தபசினுலுயர்ந்து தன் மகனோடு இன்னும் நம்மை அதிக தொந்தரைக் குள்ளாக் குவானகையால் இப்பொழுதே கொன்றுவிட வேண்டும், தனியாக இருப்பதால் இதுவே தக்க சமயம் என்று எல்லா தேவர்களும் மலையை நோக்கிப் புறப்பட்டார்கள். அவ்வசுரன் தபசியாக இருப்பதால் தபசியை ஆயுதப் பிரயோகத்தால் இம்சித்துக் கொல்வது தருமமல்லவென்று அவனை பலவாறாக நிந்தித்து அவமான முண்டாக்க, அதனால் தபசியான சதபலி உயிர் துறந்தான். உடனே அவனுடைய சிர செலும்பு தேவேந்திரனுக்கு வஜ்ஜிராயுதமாகவும், மீதியான சிர செலும்பு விஷ்ணுவுக்குசக்ராயுதமாகவும் ஆயிற்று. அவனுடைய பிஷ்டார்த்த அஸ்திசல்வானுக்கு பினாகமென்கிற வில்லாயிற்று மற்றது பெரிதான காண்டீபமென்னும் வில்லாக்கி வருணனுக்குக் கொடுத்தார்கள். வருணன் பார்த்தீபனுக்குக் கொடுத்தான். சரீரத்திலிருந்த அஸ்தியெல்லாம் எல்லா தேவர்களுக்கும் வில்லாயிற்று. கை எலும்புகள் எழுநூறு தண்டுகளாயிற்று. அதில் நீலமுகம் கௌரக்ஷிபாலகனுக்கும், குதிமுகம் பீமனுக்கும், கொடுத்தபின் மீதியை தேவ சமூகங்களுக்குஆளுக்கொன்று கொடுத்தார்கள். இவ்வாறு ஒரு மனிதனுடைய உடலெலும்புகள் முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் ஆயுதங்களாகும்போது ஒரு சண்டேலியின் எலும்பு எங்களிருவருக்கும் ஒவ்வொரு ஆயுதமாகாதா? கூறுங்கள் இத்தகையக் கதை உங்கள் மத புராணத்திலிருக்கிறதா? இல்லையா? கூறுங்கள்!' என்று வாதித்தான். எல்லா ஜனங்களும் 'பிரசித்தமாயிருக்கிறது; நாங்கள் நேற்றுக் கூட படித்துக்கேட்டோம்' என்று கூச்சலிட்டனர்,

ஐயா, விப்பிர சிகாமணிகளே எங்களைப் பொய்ய ரென்றீர்களே! இதோ உங்கள் புராணச்சாயம் வெளுக்கிறதே! என்ன சொல்லப்போகிறீர்கள் என்றனன். விப்ரர்கள் மௌனமுற்றார்கள். ஜனங்கள் இருவருக்கு ஜெய பட்டம் அளித்தார்கள். இருவரும் மெதுவாக வெளியேறி விட்டார்கள்.

(தொடரும்)


வலியுள்ளவர்கள்!

சீக்கிரம் குணந்தரும் மருந்துக்கு ஆசைப்படுவார்கள் அதுதான்

தேகரக்ஷாமிர்தம்

தீரும் வியாதிகள்

| | | |
|---|---|---|
| தலைவலி | வீக்கம் | வண்டு கடி |
| பிடரிவலி | சுரம் | தேள் கடி |
| முதுகுவலி | சளி | மேக ஊரல் |
| இடுப்புவலி | இருமல் | தேமல் |
| குடைச்சல் | மூக்கடைப்பு | வெட்டுக்காயம் |
| கை கால் பிடிப்பு | மார்சளி | பல்வலி |
| நெஞ்சடைப்பு | ஜன்னி | செவி நோய் |

நிமிடத்தில் குணப்படுத்த ஒரு துளி அமிர்தம் போதுமானது.
ஒருமுறை பரிட்சிக்கவும்.

புட்டி 1க்கு விலை ரூ. 1—8. 0 (தபால் செலவு வேறு)

நல்ல கமிஷன்; ஏஜண்டுகள் தேவை:—

தேகரக்ஷாமிர்தம் கம்பெனி, அம்மாபேட்டை, சேலம் S. I.

## சுதந்தரம்

—0—

(எம். சுவாநந்தம்)

நம் முன்னோர்கள் சௌரியத்துக்கும் ஆண்மைக்கும் மரியாதை கொடுக்கவில்லை. எவனொருவன் அவர்களின் அபிப்பிராயத்துக்கு மாறான தன் கொள்கையை வாயில் வாங்கிக் கொள்ளவில்லையோ அவனுக்கு மன்னிப்பில்லை அவனின் பெருவிரலை விரல்இயந்திரத்தால் முழுதும் நசுக்கி அதனால் நேரும்கொடும்வேதனையைச் சுகமாக அனுபவிக்க நிசப்தமான ஓர் பாழும் நிலவறையில் தள்ளுவார்கள். இவைகளெல்லாம், அன்பின் பெயராலும், இரக்கத்தின் பெயராலும் செய்யப்பட்டன.

நாஸ்திகனுக்கு, இன்னும் எவ்வளவோ நினைத்தாலும் நடுங்கக் கூடிய இயந்திரங்கள் செய்து வைக்கப்பட்டிருந்தன. ஐயோ! ஜனங்கள் அனுபவிக்க நேர்ந்த கஷ்ட நிஷ்டூரங்களை எண்ணினாலும் நடுக்கம் ஏறுகிறது.

நியாயம், சுதந்தரம், உண்மை அறிவின் முன்னேற்றம் ஆகிய இவைகளே நமக்கு வேண்டிய இன்றியமையாத சாதனங்கள். மனிதன் முதலிலிருந்து உண்டாக்கின ஒவ்வொரு வஸ்துக்களையும் சிறிது காலத்துக்கு முன் நான்பார்வையிட்டேன். முதன்மையாக நீர் கருவிகளையெல்லாம் பார்த்தேன். நம் மூதாதையான ஒரு நிர்வாண மிலேச்சன் - பல் இரண்டங்குலம் நீட்டிக் கொண்டு தன் தலையின் பின் பக்கத்தில் ஒர கரண்டியளவுள்ள மூளையோடு கூடிய ஓர் காட்டு மிராண்டி-செய்து நிர்மாணித்த முரட்டு ஓடத்திலிருந்து 100 பீரங்கிகளையும் எத்தனையோ மைல் நீளமுள்ள கான்வஸ் துணிகளையும் சுமந்து கொண்டு பெருந்தன்மையாய் மிதக்கும் பெரும் சண்டை கப்பல் வரை பார்த்தேன் கீழ்தரமான சிறு ஓடத்திலிருந்து, நியூயார்க் துறைமுகத்திலிருந்து புறப்பட்டு, தன் பெரும் முன்னணியை திருப்பிக் கொண்டு, திசையறிவிக்கும் கருவி என்னும் மனசாட்சியோடு பின் வலிமையான எக்கு இருதயம் கொஞ்சமும் விடாமல் ஒரே தேரணையாக அடிக்க, நிற்காமல் ஒரே மூச்சாக 3000 மைல் பிரயாணம் செய்யும் நீராவி கப்பல் வரை பார்த்தேன்.

அதே சமயத்தில் மனிதன் செய்த ஒவ்வொரு ஆயுதத்தையும் பார்வையிட்டேன். ஒரு வெறும் முரடான கொம்பிலிருந்து - தன் இரைக்காக ஓர் பாம்பைத்தேடி தன் குகையிலிருந்து, தாழ்ந்து தவழ்ந்து போன காட்டுமிராண்டியின் ஒரே ஆயுதமான கொம்பிலிருந்து அவர்கள் உபயோகித்த வளைந்த கழியையும், கத்திகளையும், அம்பு வில்களையும், முரடான பெருந் துப்பாக்கிகளையும், சக்கிமுக்கி கல்லையும், ஊசிதுப்பாக்கிகளையும்இன்னும் 2000 பவுண்டு நிறையுள்ள ஓர் உருக்கின எஃகு பந்தை18 அங்குலகடின எஃகின் வழியால் அதிவேகமாய் தாக்கி எறியக்கூடிய, குரூப் தொழிற்சாலையில் உருக்கி வார்க்கப்பட்ட பெரும் பீரங்கி வரையில் மனிதன் வரிசையாக செய்துவந்த ஒவ்வொன்றையும் நான் பார்வையிட்டேன்.

கவசங்களையும் நான் பார்த்தேன். ஒரு ஆமை ஓடிலிருந்து - நம் தைரியமுள்ள முன்னோர்கள் தங்கள் தேசத்திற்காக சண்டையிடும்போது மார்பிலணியும் அந்த ஆமை ஓடிலிருந்து —முள்ளம் பன்றி தோலையும் அதன் பிறகு மத்தியகாலங்களில் செய்யப்பட்ட எஃகு கவசங்களையும், வாளினுடைய கூரான ஓரத்தையும் ஈட்டி முனையையும் பார்த்து கேலிசெய்யும் எஃகு கவசங்களையும், கடைசியாக எந்த பீரங்கி குண்டுகளுக்கும் அசையாதபடி யுத்த கப்பல்களும், மோட்டார்களும், டாங்கிகளும் கர்வமாக யுத்த களத்தில் திரியும் சக்தியை கொடுக்கும் உயர்ந்த கவசங்கள் வரையிலும் நான் பார்த்தேன்.

அதே காலத்தில் அவர்களின் சங்கீதக் கருவிகளையும் பார்த்தேன்! அவர்களின் டாம் டாமிலிருந்து அநாகரீக முரட்டு பச்சை பதம் செய்யா தோலினால் செய்யப்பட்ட அந்த டாம் டாமிலிருந்து—சாதாரணக் காற்றை முழுதும் சுசுரமாகவும், மனதுக்கு ரம்மியமாகவும் க்ஷண நேரத்தில் நிரப்பவல்ல, இப்போது நாமடைந்திருக்கும் மேலான சங்கீதக் கருவிகள் வரை பார்வையிட்டேன். அவர்களின் சித்திரமும், ஜீவியமும் நான் பார்த்தேன் அவர்களின் மஞ்சள் மண்ணின் மேல் கொடுக்கப்பட்ட சொர சொரப்பான வர்ணமுள்ள படங்களிலிருந்து இப்போது உலகத்தின் சித்திர சாலைகளை பெருமைப் படுத்தி பிரகாசிக்கச் செய்கின்ற உயர்ந்த சித்திரங்கள்வரை பார்வையிட்டேன். அவர்களின்உருவச்சிலைகளையும் நான் கவனித்தேன். அரைடஜன் கைகளுடையவும், நாலு கால்களுடையவும், அநேக மூக்குகளும் 2 அல்லது 3 வரிசை காதுகளுமுடைய அவர்களுடைய கடவுள்களை நான் பார்த்தேன். அதோடு அந்த கடவுளின் மூளையில்லாத சிறுவிகாரமான தலையையும் கவனித்தேன். இப்போது உயர்ந்த சிற்பிகளால் செய்து நிர்மாணிக்கப்பட்ட மேன்மையான உருவங்களையும்— அறிமுகமில்லாமல் எப்படி அவைகளை அணுகித்தொடுகின்றது என்று அஞ்சக்கூடிய அவ்வளவு பரிபூரணமாக முடிவுற்ற உருவங்களையும்— நான் பார்வையிட்டேன்.

முதன் முதல் அவர்களால் செய்யப்பட்ட புத்தகங்களையும், மிருகங்களின் தோலிலும் மரங்களின் பட்டைகளிலும் எழுதி வைத்த புத்தகங்களை—நான் பார்த்தேன். இப்போது நம் புத்தகசாலைகளைப்பெருமைபடுத்தும்உன்னதமான கிரந்தங்களையும் நான் பார்த்தேன் புத்தகசாலைகளைப்பற்றிபேசும்போது தத்வ ஞானியாகிய பிளேடோவின் குறிப்பொன்று ஞாபகத்துக்கு வருகிறது. அது "புத்தகசாலையில்லா ஒரு வீடு ஆத்மாவில்லா ஓர் சரீரத்திற்கொப்பாகும்"

அவர்களின் உழு கருவிகளையும் பார்வையிட்டேன். எருதின்கொம்பினில் வைக்கோலினால் பிணைக்கப்பட்ட ஓர் கோணக்கொம்பிலிருந்து ஒவ்வொரு தலைமுறையிலும்உண்டாக்கப்பட்ட கருவிகளையும்கடைசியாக இப்போது உபயோகத்திலிருக்கும் கருவிகளையும் தன் சத்வத வெளியே கக்கும்படி பூமியை கட்டாயப் படுத்தக் கூடிய கருவிகளையும் நான் கவனித்தேன்.

இவைகள் யாவையும் கவனித்த போது, மனிதன் தன் எண்ணத்தையும் முயற்சியையும் ஒருங்கே சேர்த்தும் உபயோகப்படுத்தும்போது தான் இயற்கையின் அளவிலா சக்திகளை தன் பங்குகாரனாக சேர்த்துக் கொள்ளும்போது தான், தன் சுற்றுப் பக்கங்களிலிருக்கின்றதை எனக்கு சாதகமாக செய்து கொள்ளும் போதுதான், தன்னை தானே நம்ப ஆரம்பிக்கும்போது தான், மனிதன் முன்னேறுகிறான். மேலே சொன்ன மனிதன் ஒவ்வொரு காரியங்களையும் பார்த்த பிறகு இந்த முடிவுக்குத் தான் வந்தேன்.

அதே சமயத்தில் மனிதனின் மண்டை ஓடுகளையும்வரிசையாகக் கவனித்தேன். கீழ்தர காட்டுமிராண்டியின் மண்டைஓடும்,மத்திய ஆப்பிரிக்காவிலிருந்து கிடைத்தமண்டைஓடும், ஆஸ்ட்ரேலியா காட்டுவாசிகளின் மண்டை ஓடும், பசுபிக் மகா சமுத்திர தீவுகளில் வசிக்கிறவர்களுடைய மண்டை ஓடும், இவைகளையும் கடைசி தலைமுறையாக வாழ்ந்த உயர்ந்த ஞானிகளின் மண்டை ஓடுகளும் ஒவ்வொன்றையும் வரிசையாகப் பார்த்தேன். இவைகளைபார்த்து நான் எனக்குள் சொல்லிக்கொண்டதாவது: —"அடாடா, இவைகளெல்லாம் கடைசியாக அறிவு சம்பந்தமான பிரசனையே யொழிய வேறல்ல. முரட்டு ஓடத்திற்கும் பெரும் யுத்தக் கப்பலுக்கும், கோணலான பெருங் கொம்பிற்கும் குரூப தொழிற்சாலையின் சக்திவாய்ந்த பீரங்கிக்கும், மஞ்சள் மண்ணின்மேல் பூசினவர்ணத்துக்கும், மைகல் ஆஞ்சிலோ எழுதின சித்திரத்துக்கும், அநாகரீகமான டாம்டாமிற்கும், பீவெடீ என்பவரால் போதிக்கப்படும் சங்கீதகச்சேரிக்கும், எவ்வளவு வித்யாசம் காணப்படுகிறதோ அவ்வளவு வித்யாசம் தான் கீழ்தர மிலேச்சனின் மண்டை ஓட்டிற்கும் இப்போது 20-வது நூற்றாண்டிலிருக்கும் பெரிய ஞானியின் மண்டை ஓட்டிற்குமிருக்கிறது.

முதன் முதல் உண்டானதும் மிகவும் கீழ்தரமானதுமான மண்டை ஓடுதான், அற்பத்தனமும், கொடுமையும் குடிகொண்டிருந்த பயங்கரமானதாக. கடைசியாக தோன்றின மண்டை ஓடு சந்தோஷம், சுதந்தரம், அன்பு இவைகள் நிறைந்த உன்னதமான கோயிலாகும்.

இதெல்லாம்மனிதனுடையமூளை, மனிதனுடைய அறிவு இதை பொறுத்தது.

நம்முன்னோர்களைவிட நாம் ஏன் அதிக சுதந்தர மனுபவிக்கிறோமெனில், அவர்களைவிட சராசரி நமக்கு அதிக மூளை இருக்கிறதனால் தான்.

(தொடரும்)

"ரஸ்மக்"

முகப்பருக்களுக்கு
ஆச்சரியமான மருந்து
டப்பி விலை 12 அணா.
விலாசம்:—
கேஷலேன் கம்பெனி,
வேலூர், (வட ஆற்காடு)
(33)

## கர்ப்பாட்சி

அல்லது
சுவாதீன கர்ப்பம்

ஸ்திரீகள் கருத்தரிப்பதை நம் இஷ்டம்போல் ஆட்சி செய்து கொள்வது அதாவது அனுபவித்தி செய்து கொள்வது-இதனாலேயேஇந்நூலுக்கு கர்ப்பாட்சி எனப் பெயர் வந்தது.

இந்நூலுள் காணப்படும்
விஷயங்கள்:—

கர்ப்பம் எப்படி உண்டாகின்றது? அதிக பிள்ளைகளைப் பெறுவதினால் உண்டாகும்கஷ்ட நஷ்டங்களென்ன? ஸ்திரீ புருஷர்கள் தங்களுடைய இன்ப சுகத்திற்கு இடையூறில்லாமல் போதுமான பிள்ளைகளைப் பெறுவதெப்படி? பிள்ளை வேண்டாம் என்று எண்ணுகிற காலம் வரையில் கர்ப்பம் வாராமலே தடுத்து வைத்துக் கொள்ளுவதெப்படி? மறுபடியும் வேண்டும்போது கர்ப்பம் அடைவதெப்படி? என்றிவைபோன்ற மிக நுண்மையான ரகசிய ஆராய்ச்சி முறைகளும் கர்ப்பந்தடுக்கும் கருவிகளின் உபயோகங்களும் அநேக ரகசிய சித்திரப் படங்களுடன் இந்நூலுள் செவ்வனே விளக்கப்பட்டிருப் பட்டிருப்பதால் ஒவ்வொரு குடும்பத்திலும் இந்நூல் அவசியமாக இருக்க வேண்டியதாகும்.

டை நூலின் விலை அணா 0 8 0
சம்போக காலத்தில் ஆண்கள் அணிந்துகொள்ளும் ரப்பர் பேஸாரி விலை ரூ. 1—0—0
பெண்பேசாரி விலை ரூ. 2—8—0

வாஸன புஸ்தக சாலை,
244, தங்கசாலை வீதி, மதராஸ்,

## காவியம் புகலும் கல்யாணசுந்தரர்!

(சிங்கப்பூர் பு. அ. சொக்கலிங்கம் எழுதுவது)

திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரவர்கள்தான் தலைமை வகிக்க சந்தர்ப்பம் வாய்க்கும் மகாநாடுகளிலெல்லாம் தான் எந்த விஷயத்தைப்பற்றி பேசவேண்டி இருந்தாலும் தன் பண்டிதத் திறமையை செலுத்தி எவ்வாறேனும் பாட்டோடு பாடாய் புராண இதிகாசங்களைப் புகுத்தி "காவிய ஓவியங்களைப் பாருங்கள்; அதில் இயற்கை வர்ணனைகளின் அழகு செறிந்து கிடக்கிறது; கம்பனின் காவியமென்ன; அவன் பாடிய செய்யுள்களின் அமைப்பின் அழகென்ன" எனச் சொல்லிக்கொண்டே கம்பனின் காவியத்தில் அப்படியே கரைந்து விடுகிறார்! அரசியல் மகாநாடாய் இருந்தால்கூட புராண காவியங்களை மக்களிடை பரப்புவதில்தான் நாட்டுக்கு விடுதலையும் விமோசனமும் உண்டென்கிறார்! அதோடு கடவுளைப்பற்றிக் கவலைப்படாத நாத்திகப் பிரசாரத்துக்கு காது கொடுக்க வேண்டாமென்கிறார். கடவுளைக் காப்பாற்றும் அவதார புருஷர்களின் வருகைக்கு காழியூரை நோக்கித் தவங்கிடக்க வேண்டும் என்கிறார்! அறப்போர் நிகழ்த்தவேண்டும் என்கிறார்! ஆனால், சாலிகள் வாயிலாக யாதொன்றும் செய்யற்க என்றும் கேட்டுக் கொள்ளுகிறார்! அம்மட்டோ? பண்டிதரைக் கண்டால் பரவச மடையும் சோணகிரிகளின் தலையில் தான் "யாத்த" புத்தகங்களைக் கட்டி சட்டைப்பைக்குள் இருக்கும் பணத்தோடு பெட்டியில் இருந்தும் எடுத்துக் கொடுக்க பழம் நழுவப்பேசியும் எழுதியும் பறித்துக் கொள்ளுகிறார். அறப்போர் நிகழ்த்த வேண்டுமென்கிறாரே யொழிய செய்கையில் காட்டமாத்திரம் நெருங்குவது கிடையாது. இதுவரையில் நைல்யல்யசாமி அவர்களாலும் இன்னும் பலராலும் எத்தனையோ கட்டுரைகளால் நேரே பகிரங்கமாயும் இவரைப்போன்ற பண்டிதர்களைச் சுட்டியும் கேட்ட கேள்விகளுக்கு அறிவுடைய தமிழுலகமும் ஒப்பக்கூடிய முறையில் யாதொரு சமாதானமும் சொன்னவரல்ல. தன்னை மதித்து நம்பி இருக்கும் ஆடுகளின் கண்களைத் துடைக்க மாத்திரம் பக்குவமாய் நாஸ்திக இயக்கமென்றும் அது மகா பாதகமென்றும் சொல்லியோ எழுதியோ உண்மையை உணர விழையும் பாமரமக்களின் மனத்தை மழுப்பி விடுகிறார். மேலும் சுயமரியாதை இயக்கத்தைக் கண்டு, இந்த ஜாதியான குதிரை மீது இதுவரையில் ஏறிசவாரி செய்த பார்ப்பனருக்கும் அவர் கண் கூலிகளான புராணப்பண்டிதர்களுக்கும் சோறு போட்டுவந்த கடவுளைக் காப்பாற்ற சக்தியற்றவராய் பீதி கொண்டு வயிற்றில் அடித்துக் கொள்ளுகிறார்! நிடசித்தமற்ற நம் முதலியாரின் ஆத்மாவும் அறிவும் தன் கூட்டை விட்டு அடிக்கடி கம்பன் எழுதிய ஏட்டில் பாய்ந்து விடுகிறது. புராணக்காரி பூசண்டு வெளியாகும் அவரின் எத்தகைய அபிப்பிராயமும், மனிதத் தன்மையை அடைந்து "நாங்கள் மனிதர்; மதமானது எங்களுக்கு நன்மை செய்வதொன்றையே குறியாகக் கொண்டு எங்களால் அனுமதிக்கப்பட்ட எங்களின் அடிமையான பணியாளனே யன்றி எங்கள் வேலைக்காரனான மதத்துக்கு நாங்கள் அடிமையல்ல. எனவே உயிருக்குச் சமதியான இந்த உண்மையைக்கூட யாங்கள் அறியவொட்டாமல் எங்களை மயக்கச்செய்து எங்களை உள்ளிட்ட இருண்ட கோட்டையாய் வியாபித்து நிற்பதைத் தகர்த் தெறிந்து தரைமட்டமாக்கி மதம் என்ற சொல்லைக் கூட மண்ணில் புதைப்போம்" என்று வீரகர்ஜனை செய்யும் சுயமரியாதைக் காரரின் எள்ளிய நகைப்பிற் கிலக்காகின்றது! பாவம் ஒருபக்கத்தில் கம்பன் காவியத்தில் உள்ள கவியழகான கர்ப்பம் இழுக்க மறுபக்கத்திலே உடல் சம்பந்தமான உலகாய மோகம் இழுக்க அடுத்த பக்கத்திலே கல்லும் மண்ணும் கட்டையும் செம்புமான கடவுளர்கள் எங்கள் கதிமோட்சமென்ன வெனக் கையைப் பிடித்திழுக்க அதன் எதிர் பக்கத்திலே தாங்கள் கட்டிய மோசநாச மதக்கோட்டைகள் எவ்வாறழிந்து போனாலும் கடவுளென் பதாவதொன்று உண்டென்பதை இந்தப் பேராபத்தில் சிலநிறுத்தி வைத்திருந்தால் அதைக் கொண்டு சமயம் வாய்க்கும்போது எப்படியாவது பயன்படுத்திக்கொள்ளலாமென்னும் முடிவோடு ஸ்தாபிக்கப்பட்ட ஆஸ்திக சங்கமும் அதை அப்படியே பிரதி பிம்பித்துக்காட்டும் சற்சூத்திரர்களின் (அதாவது பார்ப்பனர் கொள்ளும் பொருட்படி "அசலாய்க் கடைந்தெடுத்த அடி முட்டாள்களின்") சைவ சமாஜமும் இழுக்க இந்நிலையில் மதிமயங்கி நிற்கும் நம் முதலியாரின் வெற்றுடலைக்கான வருந்துகிறோம்! அவரை இத்தகைய அல்லல்களுக்காளாக்க அவரை ஒரு பிள்ளையாராய் பிடித்து வைத்த முட்டாள் தனமான பார்ப்பனரின் பாமரரின் சூட்சியையும் பாமரரின் அறியாமையையும் பலமாகக் கண்டிப்பதுந்தவிர அவர்களுடைய ஏமாற்றத்துக்காக இரங்குகிறோம், ஆஹா! படித்துப் படித்துக்கெட்டு விட்டோமென பிராமண சபை தீர்க்கதரிசிகள் பேசிக்கொண்டது நம் முதலியாரின் விஷயத்தில் பலித்தே விட்டது. இனி பார்த்திருப்பதில் பயனில்லை. அவரைக் குணப்படுத்த விரும்புவாராயின் நம் இயக்க அங்கங்களுள் ஒன்றாக்க வேண்டியது நம் கடமைகளின் ஓர் பாகமாகும். எனவே அவரைக் குணப்படுத்தவேண்டுமானால் உயிர் உடல் சம்பந்தமான வயித்தியம் வேண்டியதில்லை, அறிவு சிகிச்சையே தேவையானது." அறிவு சிகிச்சை செய்ய முற்பட்டாலும் அவர்களைக் கல்வி இன்னதென்றறியாக் கயவர்களென்றும், இலக்கண இலக்கியம் பயிலாதவர்களென்றும், தத்துவார்த்தம் யூகிக்கவோ புறப்பொருள் அகப்பொருள் பிரிக்கவோ தெரியாத அறிவிலிகளென்றும் எடுத்த எடுப்பில் சொல்லி விடுவார்; சொல்லட்டும். ஆனால் இதையேனும் தன் மனசாட்சியிலாவது உண்மையாய் சொல்லுகிறாரென்றெவ்வாறு நம்புகிறது? ஏனெனின் கல்வியானது மனிதவர்க்கத்தின் மனத்துள் இயற்கையாய் எழும் எண்ணங்களின் பரிணாமமென்பதை அறியாமலா இருப்பார்? அதுதான் போகட்டும்; சமீபகாலத்துக்கு முன் தன் பெயரைக் கூட சரியாய் எழுதத்தெரியாத ஒரு ராமகிருஷ்ணரின் எண்ணங்கள் எவ்வாறு கல்வியாய் மாற்றங்கொண்டு உலகத்தின் நாலா பக்கங்களிலும் பரப்பப்பட்டு தற்போது எத்தகைய ரூபத்தில் இருக்கிறதென்பதை பேனும் அறியாரன்றோ? எனவே அகப்பொருள் புறப்பொருள் என்று அணு அணுவாய்ப் பிரித்துப் பேசும் நம் முதலியாரின் மேற்கண்டவை போன்ற சமாதானத்தின் உட்பொருள் வேறு என்பதில் சந்தேகமில்லை. விஷயம் பூடகமாயின் பாவம் வீணே. என் சுயமரியாதை எதிர்ப்பின் தற்போதைய நேர் முகமான—மதமென்னும் கொள்ளைக் கப்பலின் மாலுமியான—பத்திராதிபர் என்ற பட்டானகாங்கிரஸ்புரட்டுக்குக் கைகாட்டியான ஸ்தானத்தில் இருக்கவேண்டும்! கற்ற காவியத்தை சிஞ்சித்து சங்கீதப் பயிற்சி இருந்தால் காலில் சிலங்கை அணிந்து கயவர் முன் ஆடிக் காலட்சேபம்செய்யும் புராணிகர் போல் கண்ணுக்கெட்டாத காட்டுப் புறங்களில் போய் உலகாயத வேட்டையாடலாமே. கூட்டம் கூட்டமாய் உட்கார்ந்து குடுமி அவிழ்வதைக்கூட உணராமல் மயங்கி சிரக்கம்பம் செய்து கூர்ந்து கேட்டுறைந்து போவார்கள். ஆனால் அதுகூட அவ்வளவு ஏற்றதல்ல ஏனெனின் அந்தத் தொழிலுக்கும் கூடிய சீக்கிரத்தில் மரணமணி அடிக்கப்படும் இத்தனை தொந்தரை எதற்கு? பேசாமல் இருந்த இடத்திலேயே கொஞ்சம் மாணவர்களுக்கு தான் கற்ற கல்வியிலிருந்து பாஷா ஞானத்தை மாத்திரம் ஜாக்கிரதையாகப் பிரித்து பயிற்சி செய்வித்துக் கொண்டே வருவாரானால், அவருக்கும் மனச்சாந்தி உண்டு. வருங்காலத் தமிழகமும் தற்போதைக் காட்டிலும் கொஞ்சம் வன்மையடையும். மேலும் இதுதான் அவர் சக்திக்குப் பிறந்த பூமிக்குச் செய்யும் உண்மைத் தொண்டாம். கோபுரத்தின் உச்சநிலை என்பதுடன், "என் கடன் பணி செய்து கிடப்பதே"; எனப் பேச்சிலும்எழுத்திலும் காட்டுவதை இந்த முறையைப்பற்றி செய்கையிற் காட்டுவாராக!

## சூலூரில் பார்ப்பனீயத்திற்குச் சாவுமணி

சூலூர் திராவிட வாலிப சங்கத்தார் தெரிவிப்பது:—

இவ்வூரில் திராவிட வாலிப சங்கம் ஏற்பட்டும், சுயமரியாதை புணர்ச்சி ஏற்பட்டும் சுமார் நான்கு மாதங்கள்தான் ஆகின்றது. அதற்குப்பின் இவ்வூரில் நடந்த சுமார் 15-கலியாணங்களில் 13-கலியாணங்கள் புரோகிதமின்றி வாலிப சங்கத்தாரின் பெரு முயற்சியாலும் போதனையாலும் நடத்தப்பட்டது. இவ்வூர் இருபிறப்பாளர்கள் இச்சங்கத்தைத் தொலைக்க பகீரதப் பிரயத்தனம் செய்தார்கள்; செய்கிறார்கள். ஆனால், நம் தலைவர் சொல்லுகிறபடி பந்து அடிக்க அடிக்க மேல் எழும்புவது போல் தினே தினே நமதியக்கம் ஓங்கி வளர்ந்துவருகிறது. ஊருக்குள் இவ்வியக்கம் காட்டுத் தீபோல் தீவிரமாய்ப் பரவிவருகிறது. ஆனாலும் எங்கும் இப்பார்ப்பனருக்கு நம் பார்ப்பனரல்லாத சோணகிரிகள் ஓர் இருவர் கிடைத்து விடுகின்றனர். ஆனால், இங்கு அவர்களுக்குக் கிடைத்திருக்கும் சோணகிரிகளால் இச்சங்கத்தை எட்டுணையும் அசைக்க முடியாது என்பது உறுதி. இன்னும் ஒரு வருடத்துக்குள் இவ்வூரில் சுயமரியாதை இயக்கக் கொள்கைகள் அனைத்தும் அமுலுக்கு வந்துவிடுமென்பதைத் திண்ணமாய்க் கூறலாம்.

மேலும் இன்றைய மாளயபட்ச அமாவாசை இவ்வூரில் புரோகிதரைக்கொண்டு வீடு தவறாமல் விசேடமாய்கொண்டாடுவது வழக்கம். இந்த ஒரு தினத்தில் இங்குள்ள புரோகிதப்பார்ப்பனர்களுக்கு சுமார் ரூபாய் 500 பெறுமான அரிசி பருப்பு முதலிய பொருள்களும் தாராளமாய்க் கிடைக்கும். அதாவது ஒவ்வொருவருடைய வீட்டுச் செலவுக்கே கிடைத்துவிடும். நம்மவர் போடும்கும்பிடும் காலில்விழுவதும்தான மிச்சம். இதை நிவர்த்தித்து நம்மக்களின் சுயமரியாதையைக் காப்பாற்ற 22-9-29ந் தேதி கூடிய சங்கக் கூட்டத்தின் தீர்மானப்படி, திதி எதற்காகச் செய்ய வேண்டும்? புரோகிதனுக்கு எதற்காகக் கொடுத்துக் காலில் விழவேண்டும் அவனுக்குக் கொடுப்பதை நம் ஏழைமக்களுக்கு தருமம் வஸ்திரம் கல்வி முதலியவைகளுக்கு உபயோகிக்கலாமே என்று விளக்கிக் கூறி பார்ப்பான் ஏமாற்றும் சூழ்ச்சி முதலிய விஷயங்களை விரிவாக அச்சு நோட்டீஸ்கள் நம் மாபெருந் தலைவர்கள் ஈ. வெ. இராமசாமியவர்கள், திரு. ஜே. எஸ். கண்ணப்பர் ஆகிய இவர்கள் படத்துடன் வெளியிடப் பட்டதுடன் சங்கத் தலைவர் திரு. எஸ். எல். சுப்பிரமணியம் அவர்களும் திரு. எஸ். ஆர். பழனியப்பத் தேவர் அவர்களும், மற்றும் முன்ன சங்க அங்கத்தினர்களும்

ஊருக்குள் வீடுவீடாகச் சென்று நோட்டீஸ்கள் கொடுத்தும் பிரசாரம் செய்துவந்தார்கள். அமாவாசை தினமாகிய 2-10-29ல் தேதிசுமார் 1மணிக்கு சுயமரியாதை பஜனை ஊர்வலமாக நம் தமிழ்நாட்டுத் தனிப்பெருந் தலைவர் திரு. ஈ. வே. இராமசாமியவர்கள் திரு உருவப்படத்துடன் சென்றது. படத்திற்கு சூடதீபாராதனை பூமாலை ஒன்றும் கிடையாது. பஜனையில் திரு. முத்தப்பா அவர்களும் மற்றும் சிலரும் சுயமரியாதைக் கீதங்கள் (கீதங்கள் நாம் தற்சமயம் இருக்கும் கேவலமான நிலையும் விடுதலைபெற வழியும் அடங்கியவை) கல்லான மனமும் கரைந்து உருகுமாறு பாடினார்கள். பஜனையைத்தொடர்ந்த கூட்டம்சொல்லத்தரமன்று. இன்னொரு முக்கிய விஷயம் என்னவென்றால் பெண்களுக்கு ஆண்களைவிட உணர்ச்சி அதிகம் ஏற்பட்டிருக்கிறது. சில பெண்கள் கீதங்களைக் கேட்டுக்கண்ணீரும் விட்டுவிட்டனர். சில பெண்கள் தங்கள் கணவர்களை சுயமரியாதைக் கொள்கைகளைப் பின்பற்றுமாறு உற்புறத்துகிறார்கள். இதன் பயனாய் இவ்வூர் பார்ப்பனரைக் கூப்பிடும் வழக்கமும் சாமியென்று அழைக்கும்வழக்கமும்ஒழிந்துதங்கள்கீழுள்ள ஆட்களை அன்பாய் நடத்தும் வழக்கமும் அவர்களுக்கு வேண்டிய உபகாரங்கள் செய்யும் வழக்கமும் பெரும்பான்மையாய் ஏற்பட்டுவிட்டன. அமாவாசையைச் சுமார் 500 வீட்டார் புரோகித மொழித்து நடத்தினார்கள்.

ஆகவே, ஒவ்வொரு சுயமரியாதை சங்கங்களும், வாலிப சங்கங்களும் ஆங்காங்கு துணிந்து இவ்வாறு செய்யவேண்டும் என்றும் சங்கங்களில்லாத இடங்களிலுள்ள பிரமுகர்கள் கூடிய சீக்கிரம் சங்கங்களை ஏற்படுத்தி இவ்வித முயற்சிகள் செய்யவேண்டு மென்றும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

---

## துணிகரமான

## சீர்திருத்தக்காரர்கள்

(திரு: லிங்கம் மொழி பெயர்த்தது)

விஞ்ஞான சாஸ்திர ஆதாரத்தின் பேரில் ஆண்பெண் தொடர்பைப் பற்றிய சீர்திருத்தங்களைச் செய்ய, கூடிய சீக்கிரத்தில் லண்டன்மாநகரத்தில் ஒரு உலக மகாநாடு கூட்டப்படும் என்று 'ட்ரூத் சீக்கர்' (உண்மை நாடுவோன்) என்னும் பத்திரிகைக்கு திரு: தியோடோர் ஸ்க்ரோடர் என்பவர் செய்தி அனுப்பியிருக்கின்றார்.

இம் மகாநாட்டின் லட்சியங்கள்:-

1. அரசியல், பொருளாதார இயல், பரம்பர நிலைமை, இவைகளில் ஆண் பெண் சமத்துவம் ஏற்படுத்தல்.

2. விவாகம், சிறப்பாய் விவாகரத்து, இவைகளை மதக்கொடுமையிலும் பரம்பர இணைக்கத்தாலும் அறிவு விளக்கமும், உடற்கட்டும் வாய்ந்த ஆண் பெண்களின் சுகபோகம் அவர்களது சொந்த பொறுப்பாக மட்டுமே கருதப்படவேண்டும். (அரசாங்கமோ சமூகமோ தலையிடக்கூடாது என்பதாம்)

3. கரு உற்பத்தியை இச்சைப் படிக்கையாளுதல்

4. உடற்கட்டின் பேரிலும் மற்றைய குணம், அங்கம் முதலிய அமைப்புக்களின் பேரிலுமே, ஏனைய கட்டுப்பாடுகளில்லாமல் ஆண்பெண் திடசரீரமுள்ள குழந்தைகளைப் பெறுமாறு மணவினை முடித்துக் கொள்ளுதல்.

5. மணவினை யில்லாமல் குழந்தைகளைப் பெற்றுக் கொண்ட தாய்களைப் பாதுகாத்தல்.

6 ஆண் பெண்ணையின்றியும், பெண் ஆணை யின்றியும் சிற்றின்பத்தை அநுபவித்துக்கொள்ளும் பழக்கத்தைப்பற்றி விஞ்ஞான சாஸ்திரம் கூறுவதைப் பிரசுரம் செய்து அறிவுறுத்தல்.

7. விபசாரத்தையும், மேகரோகம் பரவுதலையும் தடைபுரிதல்.

8. இயற்கைக்கு மாறான சிற்றின்ப நுகர்ச்சி ஒரு வகை நோயால் ஏற்படும் கேட்கையின் பயனே என்று கொள்ளவேண்டுமே யல்லாது, குற்றமென்றாவது பாவமென்றாவது கொள்ளல் ஆகாது.

9. பிறருக்கு தீங்கைவிளைவிக்காம விருந்தும், அரசாங்கக் கொடுமையி விருந்தும் விடுவித்தல்.

10. சகலருக்கும் பெண் ஆண் சம்பந்தத்தைப்பற்றிவிரிவானபயிற்சி அளித்தல்.

இச்சங்கத்தில் இலக்கிய உலகில் மிகப் பெயர் வாய்ந்த பெரிய நூலாசிரியர்கள் பலர் அங்கத்தினர்களாக விருக்கின்றனர். திருவாளர்கள் எச். ஜீ. உவேல்ஸ்; ஜார்ஜ் பர்னார்டு ஷா, பெர்ட்ராண்டு ரஸ்ஸல் ஆகியவர்களும் இதில் அங்கத்தினர்களாயிருக்கின்றனர். (பிரீ திங்கர்)


ரத்த விர்த்தி, தேக பலம், தாது புஷ்டிக்கு
தேத்தானவிதை லேகியம்

### தங்க பஸ்பம் சாப்பிடுங்கள்

பரீட்சைக்கும் பலனுக்கும் உத்தரவாத முள்ளது.

எப்படி? ஒரு தொட்டி கலங்கிய ஜலத்தில் ஒரு தேத்தான் விதையை உரைத்துக் கலக்கினால் உடனே அந்த ஜலம் பூராவும் தெளிந்து சுத்தமாகிவிடும். அதுபோல் உங்கள் ரத்தத்தையும் சுத்தம் செய்து நல்ல ரத்தத்தை ஏராளமாகப் பெருக்கி தேக பலம், தாது புஷ்டி உண்டு பண்ணும். சகலவித உஷ்ணம், வெள்ளை, வெட்டை, நீரழிவு, காசம், க்ஷயம், இருமல்களுக்கு ஒரு மண்டலம் சாப்பிட்டால் போதும் குழந்தை முதல் ஆண் பெண் யாவரும் சாப்பிடலாம். அதிக ருசியுள்ளது. 50 வேளை டின் ரூ. 2-8-0 வி. பி. வேறு. உயர்ந்த பலனை விரைவில அடையவேண்டுவோர் லேகியத்துடன் சேர்த்துச் சாப்பிட 50 வேளை தங்கபஸ்பம் ரூ. 10-0-0. 100 வேளை ரூ. 20-0-0. ஏஜண்டுகள் தேவை:—

(35) தெண்டபாணி வைத்தியசாலை, பழனி.



அசல்

### தாம்பர பஸ்பம்

மூன்றே வேளையில் குணம் தெரியும்.

குணமில்லாவிடில் பணம் வாபீஸ்.

கொடிய ரோகமாயிருந்தபோதிலும் சரியே நமது அசல் தாம்பர பஸ்பத்தை 12 நாள் சாப்பிட்டால் போதுமானது. மற்ற மருந்துகளைப்போல் நம்பிக்கையில்லாமல் நினைத்து தருவித்து சாப்பிடாமல் நோயால் கஷ்டப்படாதீர்கள். நம்பிக்கையுடன் தருவித்து சாப்பிட்டு குணத்தை அடையுங்கள். நிச்சயமாய் குணமுண்டாகும்.

சாப்பிடுங்கள்; கைகண்ட மருந்து.

குஷ்டம், குறை நோய், தடிப்பு, திமிர், மதமதப்பு, செம்மேகப் பற்று, கருமேகப் பற்று, கருங் குஷ்டம், வெண் குஷ்டம், அரிப்பு, நமைச்சல், கிரந்தி, ஆராத ரணங்கள், குழிப்புண்-புரை, கண்டமாலை, பவுத்திரம், கன்னப் புத்து, யோனிப் புத்து, குன்மம், சூலை முதலிய கொடிய வியாதிகளும், தீராதென கைவிடப்பட்ட இதர நோய்களும் அவசியம் குணமாகின்றன.

உங்கள் கவலை தீர்ந்துவிட்டது!

உங்களைப்போலிருந்து கவலை ஒழித்த மனிதன் கூறுவதைக் கவனியுங்கள்:—

நற்சாக்ஷி:— கோலாலம்பூர், கண்டக்கர்பு ரோட்டு, பஜனை மடம், ஸ்கூல்மாஸ்டர், எஸ். குழந்தைசாமி பிள்ளை 31-10-1928-ல் எழுதுவதை பாருங்கள்:—

ஐயா, தாங்களனுப்பிய தாம்பர பஸ்பத்தை 12 நாள் என் மகனுக்குக் கொடுத்ததில் மடங்கியிருந்த விரல்கள் நிமிர்ந்துவிட்டன. நெருப்புப் பட்ட போதிலும் தெரியாமல் சொரணையற்றிருந்த இடங்களில் சொரணையும் கை விரல்களில் நெட்டியும் உண்டாகிவிட்டது.

12 நாள் சாப்பிடக்கூடிய அனுபானம் உள்பட ரூ. 15—0-0.

அரண்மனை வைத்தியர் S. T. மாணிக்கம் பிள்ளை,

ஆயக்குடி போஸ்டு, (Via.) திண்டுக்கல் S. I. R.

குறிப்பு: - நம்மிடம் சகல வியாதிகளுக்கும் உயர்ந்த மருந்துகளிருக்கின்றன. மலாய் நாட்டுவாசிகள் மருந்துக்கு ஆர்டர் செய்யும் போது ரூபா 5 அட்வான்சு அனுப்பவேண்டும்.

(49)

# திருச்சி ஜில்லா தேவேந்திரகுல வேளாளர் மகாநாடு

29-9-29 காலை போட்மெயிலில் சென்னையிலிருந்து திருவாளர்கள் சென்னை அரசாங்கமுதல்மந்திரி கனம் டாக்டர் சுப்பராயன், திரு ஈ. வெ. ராமசாமி, ஜே. என். கண்ணப்பர் ஆகியோர்கள் திருச்சி ஜங்ஷன் ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்ததும் மகாநாட்டு வரவேற்புத் தலைவர் திரு. பாலகிருஷ்ணன், திருவாளர்கள் திருச்சி ஜில்லா போர்டு தலைவர் டி. எம். நாராயணசாமிபிள்ளை எம் எல். ஸி., முனிசிபல் சேர்மன் மகமது இப்ராஹிம், கி. ஆ. பெ. விஸ்வநாதம், வேதாசலம், பள்ளத்தூர் அருணாசலம் செட்டியார், வேணுகோபால் நாயுடு, டிப்டி கலெக்டர் ஆஷிம், ஜில்லா கலெக்டர் ராமராவ், ராகுணாதன், சுப்பிரமணியம் எம். எல். ஸி., முதலிய சுமார் நூறு கனவான்களும், மற்றும் மகாநாட்டுப் பிரதிநிதிகள் சுமார் நூற்றிற்கு மேற்பட்டவர்களுமாக மேடையில் வரவேற்று மாலையிட்டு நேரே சேர்மென் அவர்களின் ரேஸ் கோர்ஸ் பங்களாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிற்றுண்டி அளித்த பிறகு எட்டரை மணிக்கு புறப்பட்டு மணிக்கூண்டில் இருந்து ஊர்வலமாக பாண்டு வாத்தியங்களுடனும் யானைகள் குதிரைகள் தொண்டர்கள் மற்றும் சுமார் ஆயிரம் பேர்கள் தொடர ஜே! சப்தத்தோடு சுமார் 10, 15 மோட்டார் வண்டிகள் வரிசையாக வளைவுகளாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த தெருக்களாகிய பெரிய கடை வீதி வழியாகவும் மலைக்கோட்டை வாயில் கடைவீதி வழியாகவும் முனிசிபல் பப்ளிக் ஹால் கொட்டகைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். சுமார் பத்து மணிக்கு கொட்டகை சேர்ந்ததும் தலைவர்களைப் புகைப்படம் எடுக்கப்பட்டு திரு. கண்ணப்பரால் கொடி ஏற்றம் செய்யப்பட்டவுடன் கொட்டகைக்குள் கூட்டம் பிரவேசித்தது. கூட்டம் கொட்டகை பிடிக்காமல் நெருங்கிக் கொண்டிருந்தது.

மேடையில் திருவாளர்கள் ஜில்லா கலெக்டர் ராமராவ், டிவிஷனல் ஆபீசர் அஷீம், மீறும் பள்ளி ஜமீன்தார் வெங்கடாசலரெட்டியார், சர்வே டைரக்டர் செங்கோட்டயன், மந்திரியின் காரியதரிசியான டாக்டர் தாஜுடீன் எம். எல். ஸி. பிரபல கண்டிராக்டர் சாமிநாதப்பிள்ளை, எம். ஜி. நடேசய்யர், பென்ஷன் தாசில்தார் வீரபத்திர பிள்ளை, வக்கீல் கோபாலராவ், ஜேசுதாசன், எம். கே. அனிபா, அகிலாண்டம் பிள்ளை, திரவியம் பிள்ளை, மணப்பாறை நாராயணசாமி, என். பத்மநாப பிள்ளை, சிவபிச்சை, சுப்ரமணியம், தொழிலாளர் அடைக்கலசாமி. டி. வி. கே. நாயுடு, கோவிந்தசாமி, சீனிவாச முதலியார், கந்தசாமி, டி. எம். நாராயணசாமிபிள்ளை எம் எல். ஸி. இப்ராஹிம் ராவுத்தர் சேர்மென், உடையார்பாளையம் ஜமீன் சின்னசாமி உடையார், சிங்கம் அய்யங்கார், கைல்சேர்மென் ஷண்முகம்பிள்ளை, வக்கீல் வேதாசலம், சுயமரியாதை சங்கத்தலைவர் வேணுகோபால், கி. ஆ. பெ. விஸ்வநாதம், செல்வக்கணபதியார், பட்டுக்கோட்டை, தண்டபாணி, பண்டித திரு ஞானசம்பந்தம், விழுப்புரம் ஆதிதிராவிட சங்க காரியதரிசி எம். சாமிநாதன், பொன்னம்பலனார், கலியபெருமாள், அருணாசலம் செட்டியார், ராவண தாஸ் செங்கமலம் பிள்ளை மற்றும் கவுன்சிலர்கள், பிரபல வியாபாரிகள் உத்தியோகஸ்தர்கள் முதலிய அனேக கனவான்கள் உள்பட சுமார் 3,000 பேர்கள் வீற்றிருந்தார்கள்.

மகாநாடு கூடியதும் வரவேற்புக் கமிட்டியாராலும் பீமநகர் வாலிப சங்கத்தாராலும், சுயமரியாதை சங்கத்தாராலும் தனித்தனியாக டாக்டர் சுப்பராயனுக்கும் ஈ. வெ. ராமசாமிக்கும் கண்ணப்பருக்கும் உபசாரப் பத்திரங்கள் வாசித்துக்கொடுக்கப் பட்டன. தலைவர்கள் பத்திரங்களுக்கு முறையே பதில் அளித்தபிறகு வரவேற்புத்தலைவர் தனது வரவேற்பு பிரசங்கத்தைப் படித்தார். அது முடிந்தவுடன் திரு ஈ. வெ. ராமசாமியை தலைமைவகிக்க தலைவர் தேர்தல் நடந்ததும் திரு: ஈ. வெ. ராமசாமி தலைமைவகித்தார் உடனே திருவாளர் டபிள்யூ. பி. ஏ. சௌந்தர பாண்டியன் முதலியவர்கள் மகாநாட்டுக்கு வர சவுகரியப்படாததற்கு வருந்தியும் மகாநாடு செவ்வனே நடைபெற ஆசைப்பட்டும் அனுப்பிய தந்திகளும் கடிதங்களும் குறிப்பிடப்பட்டன. பிறகு தலைவர் ராமசாமி இரண்டொரு வார்த்தைகள் சொல்லிவிட்டு பகல் சாப்பாட்டிற்கு மேல் தனது தலைமை முகவுரையைச் சொல்லுவதாய்ச் சொல்லி மகாநாட்டை பகல் சாப்பாட்டிற்காக ஒத்தி வைத்தார். இடையில் ஒரு வேடிக்கை சம்பவம். அதாவது மேற்படி தேவேந்திரகுல வேளாள வகுப்பைச் சேர்ந்த சட்ட சபை அங்கத்தினர் திரு. சுப்பரமணிய மூப்பனார் தான் தனியாக ஒரு உபசாரப்பத்திரத்தை டாக்டர் சுப்பராயன் அவர்களுக்கு வாசிக்கவேண்டும் என்கிற ஆசையின்பேரில் ஒரு பத்திரத்தை தயார் செய்துகொண்டு தானாகவே மேடைக்கு வந்து வாசிக்கத் தொடங்கினார்.

மகாநாட்டைச் சேர்ந்தவர்கள் பிரதிநிதிகள் உள்பட வாசிக்கக் கூடாது என்று ஆட்சேபித்தார்கள். இதன் காரணம் என்னவென்று கேட்க அவ்வரவேற்புப் பத்திரத்தில் தங்கள் சமூகத்தைப் பற்றி இழிவுபடுத்தி எழுதிக்கொண்டிருப்பதாயும் அதாவது தங்கள் சமூகத்தை தேவேந்திரகுல வேளாளர் என்று அழைப்பதற்கு பதிலாக தேவேந்திரகுல பள்ளர் என்று அதில் குறிப்பிட்டிருப்பதாகவும் ஆதலால் கூடாது என்றும் சொன்னார்கள்.

திரு. சுப்ரமண்ய மூப்பனாரை பள்ளர் என்கின்ற வார்த்தையை எடுத்துவிடும்படி அங்குள்ள மற்றவர்கள் சொல்ல அதற்கு திரு. சுப்ரமனியம் தனக்கு பள்ளர் என்கின்ற முறையால்தான் சர்க்கார் எம். எல். ஸி. நியமனம் கிடைத்திருப்பதாகவும், தான் பள்ளர் அல்லவென்று சொன்னால் அடுத்தநியமனம் கிடைக்காமல் போய்விடுமென்றும், மற்றும் தங்கள் வேளாளர்கள் என்று சொல்லிக்கொண்டால் உயர்ந்தஜாதியார்கள் தொந்திரவு செய்வார்கள் என்றும் சொன்னார். கடைசியாக அங்குள்ள மற்றவர்கள் சொன்னதின் பேரில் பள்ளர் என்பதை எடுத்துவிடுவதாய் ஒப்புக்கொண்டு வாசித்தார். இந்தபத்திரத்திற்கு டாக்டர் சுப்பராயன் பதிலளிக்கையில் வேளாளர்கள் என்று போட்டுக்கொள்ளுவதில் தனக்கு ஆட்சேபனை இல்லையென்றும் தானும் வேளாளர்தான் என்றும் வேளாளர் என்பதற்கு விவசாயம் செய்கிறவர்கள் என்றுதான் அர்த்தமென்றும் இம்மகாநாட்டிற்கு பறக்கவிட்ட கொடிகள் மாடுகள் கட்டி ஏர் உழுவதுபோல் வரையப்பட்டிருப்பதால் விவசாயக்காரர்கள் எல்லோரும் தங்களை வேளாளர்கள் என்று சொல்லிக்கொள்வதில் தப்பிதம் இல்லையென்றும் சொன்னார். அதன் பேரில் இருவரும் ஒப்புக்கொண்டார்கள். பகல் சாப்பாடு கண்ட்ராக்டர் திரு சாமிநாதபிள்ளை வீட்டில் தலைவர்களுக்கும் மற்றும் கூட வந்தவர்களுக்கும் பலமான விருந்து சங்கீதக் கச்சேரி முதலியவைகள் நடந்தது. பிறகு 3-30 மணிக்கு மறுபடியும் மகாநாடு துவக்கப்பட்டதும் தலைவர் முகவுரையாக அரை மணி நேரம் பேசினார். பிறகு சுமார் 20 தீர்மானங்கள் வரை நிறைவேற்றப்பட்டன. முடிவில் திரு கண்ணப்பர் தீண்டாமையும் இந்து மதமும் என்பதுபற்றி ஒரு சொற்பொழிவாற்றினார். பிறகு சாமிநாதன், சேலம் வரதப்பன் முதலிய பலர் பேசிய பின்பு தலைவர் முடிவுரை கூறிய பின் திரு. விஸ்வநாதம் அவர்களால் வந்தனோபசாரம் சொல்லப்பட்டு எல்லோருக்கும் மாலையிட்ட பிறகு சுமார் இரவு எட்டு மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது. திருச்சி முனிசிபல் சேர்மென் ஜனாப் எம். கே. முகமது இப்ராஹிம் அவர்கள் வீட்டில் பலமான இராத்திரி விருந்து ஒன்று ஆங்கில முறையில் நடந்தது. பிறகு மந்திரி கனம் சுப்பராயன் அவர்கள் போட் மெயிலில் சென்னைக்குப் புறப்பட்டார்.

## மறுநாள்

மறுநாள் காலையில் பள்ளத்தூர் திரு. அருணாசலம் செட்டியார் அவர்கள் வீட்டில் சிற்றுண்டி நடந்ததும் நேராக சிரங்கத்திற்கு திருவாளர்கள் ராமசாமி, கண்ணப்பர் விஸ்வநாதம், பொன்னம்பலனார், பட்டுக்கோட்டை, தண்டபாணி, செல்வக்கணபதியார் முதலியவர்கள் அழைத்துச் செல்லப் பட்டார்கள். அங்கு போலீஸ்ஸ்டேஷன் முன் மண்டபத்தில் இருந்து வாத்தியங்களுடனும் இரண்டு யானைகளும், மற்றும் விருதுகளும் முன் செல்ல சிரங்கம் டவுன் ஹாலுக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப் பட்டார்கள் பிறகு அங்கு திரு. ஈ. வெ. ராமசாமி அக்கிராசனத்தில் பானகல் வாசகசாலை ஒன்று திரு. கண்ணப்பரால் திறந்து வைக்கப் பட்ட பிறகு, பானகலரசர் படம் ஒன்று பட்டுக்கோட்டை திரு. தண்டபாணியால் திறந்துவைக்கப்பட்டது. பிறகு திரு. விஸ்வநாதம், அருணாசலம் செட்டியார், திரு ஞானசம்பந்தம் முதலியவர்கள் பானகலரசரின் பெருமையைப்பற்றி பேசினார்கள். கடைசியாக அக்கிராசனர் திரு. ஈ. வெ. ராமசாமி முடிவுரையாக சிலவார்த்தைகள் சொன்னார்கள். பிறகு உடையார்பாளையம் ஜமீன் சின்ன உடையார் அவர்களால் மாலை சூட்டப்பட்டு கூட்டம் டவுன்ஹாலில் இருந்து பானகல் உருவப்படத்தை யானைமீது ஊர்வலமாக சிரங்கம் கூடத்தெரு மாணிக்கம்பிள்ளை கட்டிடமேல்மாடிக்கு கொண்டுவரப்பட்டு கல்கண்டு பழம் வினியோகித்து கூட்டம் கலைந்தது, பிறகு ரங்கன் செட்டியார் சத்திரத்தில் எல்லோருக்கும் பொதுவிருந்து நடந்தது. சுமார் 3 மணிக்கு சிரங்கம்விட்டு நேரே நாயுடு அவர்கள் வீட்டில் ஏற்பாடு செய்திருந்த டீபார்ட்டி சென்று அங்கிருந்து டவுன்ஹால் மைதானத்தில் ஏற்பாடு செய்திருந்த பொதுக் கூட்டத்திற்கு வந்தார்கள். அங்கு டவுன் ஹால் பார்க்கில் ஒரு புகைப் படம் எடுத்த பிறகு திரு. அருணாசலம் செட்டியார் தலைமையில் பொதுக் கூட்டம் ஆரம்பமாயிற்று. சுமார் 2,500 பேர்கள் வரை வந்திருந்தார்கள். கூட்டத்தில் திருவாளர்கள் பொன்னம்பலனார், கண்ணப்பர், திரு ஞானசம்மந்தம், பட்டுக்கோட்டை தண்டபாணி ஆகியோர்கள் பேசிய பின் கூட்டம் முடிவுபெற்று திரு. கண்ணப்பர் சென்னைக்கும், திரு. ராமசாமி ஈரோட்டுக்கும் பிரயாணமானார்கள்.

---

மதுரை வாலிப நாடார் சங்கம்:— 6-10-29ல் மாலை 4-மணிக்கு மதுரை கீழ மாசி வீதிமதுரை வாலிப நாடார் சங்கத்தின் 5வது வருடப் பூர்த்தி விழா நெல்லை திரு: கிரிதட சுந்திரம் அவர்கள் தலைமையில் நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது.

* * *

காந்தை:—தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி ஆண்டுவிழா புரட்டாசி 25, 26, 27ல் நடைபெறும். பிரபல அறிஞர்கள் தலைமைவகிக்க ஒப்புக்கொண்டிருக்கின்றனர் என்று தலைமை ஆசிரியர் திருவாளர் சிவ. குப்புசாமி அறிவிக்கின்றார்.



"அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே"

# குடி அரசு

சென்னை 1929 அக்டோபர் 6உ

## கதர் புரட்டு

கதர் துணியின் விலை விஷயமாகவும், கதர் போர்டார் அதிக விலை வைத்துக் கொள்ளை லாபம் சம்பாதிப்பதின் மூலமாகவும், 'தமிழ்நாடு' பத்திரிகையில் ஒரு கதர் தொண்டருக்கும், திரு. ஸி. ராஜகோபாலாச்சாரிக்கும் வாதம் நடந்து வருவதை ஒரு நண்பர் நமக்கு அனுப்பி நமது அபிப்பிராயத்தை கேட்டிருக்கின்றார். நமக்குத் தெரிந்தவரையில் மேற்படி இரு கனவான்கள் கணக்கிலும் பிசகு இருக்கின்றதென்பதே நமது அபிப்பிராயம். அதாவது இரண்டு பேர்களுக்கும் உண்மையான அசலுக்கு மேல் அதிகப்படுத்தி கணக்கு போடப்பட்டிருக்கின்றது. அதாவது பஞ்சு நூல் நூற்பதற்கு ராத்தல் ஒன்றுக்கு 5 அணாதான் கூலி கொடுக்கப்பட்டு வருகின்றது. சில இடங்களில் 4 அணாவும் கொடுக்கப்பட்டுவருகின்றது. நெய்வதற்கும் 54 இஞ்சுக்கு கெஜம் ஒன்றுக்கு 2¾ முதல் 3 அணாவே கொடுக்கப்பட்டு வருகின்றது. 2½ அணாவும் கொடுக்கப்பட்டு வருகின்றது. கெஜம் ஒன்றுக்கு 2½ அணா அல்லது 2¾ அணா வீதம் கொடுப்பதாயிருந்தால் இப்பொழுதும் ஈரோட்டைச் சுற்றிலும் கோபியைச் சுற்றிலும் சுமார் 1,000, 2,000 தறிகள் தறி ஒன்றுக்கு 5 ரூபாய் வீதம் அட்வான்ஸ் கட்டியிட்டு வருஷக் கணக்காக நெய்து கொடுக்க ஒப்பந்தம் பேசிக்கொள்ள காத்திருக்கின்றார்கள். இந்தப்படிக்கே சுமார் இரண்டு வருஷம் நெய்து கொண்டும் வந்தார்கள்.

கரூருக்கு பக்கத்தில் சில கிராமங்களில் ராத்தல் ஒன்றுக்கு 4 அணா வீதம் நூற்றுக் கொடுத்துக் கொண்டும் இருக்கிறார்கள். லாபம் அதிகமாய் வருவதை உத்தேசித்து நெசவுக்கு கூலி அதிகமாய் கொடுத்து வருகின்றார்கள். சாதாரணமாக 54 இஞ்சு கதர் 10 கெஜம்கொண்ட பீசு அதிக கஞ்சி இல்லாமல் கண்டிப்பாய் 4 ராத்தல் இடைக்கு மேல் இருக்கவே இருக்காது. இதற்கு ஆதாரமாக படியூர் புளியம்பட்டி, ஊத்துக்குளிமுதலிய இடங்களில் நெய்யப்படும் துணிகளை இன்றும் பார்க்கலாம்.

இன்றுகருங்கண்ணிசாதாரண பஞ்சு விலை அதாவது திருப்பூர் கதர் வியாபாரிகள் வாங்கும் விலை 520 ராத்தல் பாரம் 1 க்கு 215, 220-க்கு மேல் போவதே இல்லை. அப்படியானால் ராத்தல் ஒன்றுக்கு ரூ. விலை 0-6-8¼ அடக்கமாகும்.

எனவே 54 இஞ்சு 10 கெஜம் பீசுஒன்றுக்குபஞ்சுசேதாரம்உள்பட ராத்தல்4¼-க்குக் கிரயம் ரூ. 1-12-6. மேல்படி நூலுக்கு நூற்புக்கூலிராத்தல்ஒன்றுக்கு 5அணா ரூ. வீதம் 1-5-3. நெசவு கூலி கெஜம் 1-க்கு 2¾ 1-11-6. அணா வீதம் ஆக ரூ. 4-13-3. கெஜம் 1-க்கு 3 அணா கூலி வீதமானால் 1-14-0, எனவே 54 இஞ்சு அகலம் 10 கெஜம் பீசு ஒன்றுக்கு ரூ 4-13-3 அல்லது ரூ 4-15-9 அசலாகும். ஒருசமயம் ஆள் கூலி, கணக்கப்பிள்ளை கூலி, மற்றும் சில்லரைசெலவு போட்டாலும் கண்டிப்பாய் பீசு ஒன்றுக்கு ரூ. 5-4-0 மேல் அடங்குவதற்கு நியாயமே கிடையாது. ரூபாய்க்கு ஒரு அணா வீதம் செலவு போட்டு வெளி ஊர்களில் விற்பதானாலும் ரூ 5-9-0 அல்லது அதிக லாபம்வைத்தாலும் ரூ5-12-0க்கு மேல்விற்கவேண்டிய அவசியமே இல்லை. ஆனால், சென்ற வாரத்தில் நாம் ஈரோட்டில் கதர் இல்லாமல் சேலத்திற்கு சொல்லியனுப்பி கதர் வாங்கிக் கொண்டு வந்ததில் 54 இஞ்சு அகலம் 5 கெஜம் ஒரு ஜலத் வேஷ்டிக்கு சேலம் காங்கிரஸ் கதர் டிட்போவில் ரூ. 3-11-0 கொடுத்து வாங்கிவரவேண்டியதாயிற்று. அப்படியானால் 10 கெஜத்திற்கு ரூ. 7-6-0 வீதம் விற்கின்ற விலையாகின்றது. ரூ. 5-12-0-க்கு விற்க வேண்டிய வேஷ்டி ரூ 7-6-0 வீதம் விற்றால் ஒரு பீசுக்கு ரூ. 1-10-0க்கு மேல் மனதார அதிக லாபம் கொடுக்க வேண்டியதாக இருக்கின்றது. ஏற்கனவே மில் துணி 54 இஞ்சு கெஜம் 5 அணாவுக்கும் 6 அணாவுக்கும் தாராளமாய் கிடைக்கும்போதும் இந்தப்படி விற்றும் இந்திய மில் வியாபாரிகள் தங்கள் முதலுக்கு 100க்கு 20, 25 வீதம் லாபம் சம்பாதிக்கும்போதும் கதருக்கு ஊரார் பணங்களை 10, 20 லட்சக்கணக்காக வசூல் செய்து அவற்றிற்கு வட்டியில்லாமலும் அசலிலும் கதர்இலாகாநிர்வாகத்திற்கென்று வருஷம் ஒரு லக்ஷம் 50 ஆயிரம் ரூபாய்கள் என்று கைமுதல் நஷ்டமு மடைந்துகொண்டு மக்களை கெஜம் ஒன்றுக்கு 11 அணா 12 அணா வீதம் கிரயம்போட்டு வாங்கிக் கட்டும்படி சொல்வதென்றால் இதில் ஏதாவது பகுத்தறிவு இருக்கின்றதா என்று தான் கேட்கின்றோம். நூற்கின்றவர்களுக்கு கூலி கட்டவில்லை என்று ரூபித்தால் அப்போது "கூலிக்கு நூற்பதுவல்ல, கதர் திட்டம் ஒவ்வொருவரும் ஓய்ந்த நேரத்தில் சொந்தத்தில் நூற்க வேண்டும் என்றும் அந்த அர்த்தத்தில்தான் கதரில் சுயராச்சியம் இருக்கின்றது" என்றும் சொல்லுவதும், சொந்தத்தில் நூற்க முடிவதில்லை என்று ரூபித்தால் "ஒரு அணா கூலியாவதுகிடைப்பதற்கு வேறு வேலையில்லை ஆகையால் நடந்தவரை நடக்கட்டும்" என்பதும், இம்மாதிரி சமயத்திற்கேற்ற விதமாகப் பேசி மக்களை ஏமாற்றுவதாயிருக்கின்றதே ஒழியவேறில்லை. அன்றியும் திரு. காந்தியும் திரு. பஜாஜும் தென் இந்தியாவிற்கு வந்திருந்தபொழுது சில சோம்பேறிப் பார்ப்பனர்களை சாஸ்திரிகள் என்னும் பேரால் ஒன்று சேர்த்துக்கூட்டி திரு. காந்திமுன் உட்காரவைத்து அவர்களுக்கு சாஸ்திரி என்றும், கனபாடிகள் என்றும் பெயர்சொல்லி கையினால் துடையில் நூல் திரித்துக் காட்டி "சாஸ்திரிகள் எல்லாம் காந்தியின் கதர் திட்டத்தைப் பின்பற்றுகின்றார்கள்" என்று திரு. காந்தியையும் பஜாஜையும் நினைக்கும்படி செய்து வசூலான தொகைகளை இங்கேயே தட்டிப் பிடுங்கிக் கொண்டதல்லாமல் வேறு ஏதாவது அனுபோக சாத்தியமான காரியமோ யுக்திக்கு பொருத்தமான கருத்தோ இதில் இருக்கின்றதா என்று தான் கேட்கின்றோம். தவிர திரு. காந்தியவர்கள் இனியும் தனக்கு கதரிலும் ராட்டினத்திலும் நம்பிக்கை இருக்கின்றது, அதன் மூலம்தான் சுயராச்சியம் வரும் என்று சொல்லிக் கொண்டே இருப்பதைப் பார்த்தால் இனியும் இந்த மாதிரி எத்தனை நாளைக்கு மக்கள் 5 அணா துணிக்கு 12 அணா விலை கொடுத்து வாங்கிக் கட்டிக் கொண்டிருப்பது என்பது நமக்கு விளங்கவில்லை. தேசிய கோரமும், தேசிய பணமும், தேசிய ஊக்கமும் இந்த கதர் திட்டத்தினால் பாழாய்ப்போய்க்கொண்டிருப்பதை இனியும் எத்தனை நாளைக்கு பார்த்துக்கொண்டிருப்பது என்பதவும் நமக்கு விளங்கவில்லை. விலையில் 5 அணா துணிக்கு 11 அணாவும் துணி நயத்தில் 40 நெம்பருக்கு பதில் 10 நெம்பரும் உபயோகத்தில் 5 மாதம் வருவதற்கு பதில் 3 மாதத்தில் கிழியும் மாதிரியாகவும், சுமையில் ஒன்றுக்கு மூன்றாகவும், பிரயாணத்திற்கு பெருத்த அசௌகரியமாகவும் இருப்பதை ஆதரிப்பதுதான் தேசியம் என்றால் திரு. காந்தியைப் போலும் திரு. ராஜகோபாலாச்சாரியைப் போலும் உள்ள 'மகாத்மாக்களும் மகான்களும்' தவிர மற்றபடி வேறு யாராவது இந்த தேசியத்தை பின்பற்ற முடியுமா என்றும் கேட்கின்றோம். நம்மைப் பொருத்தவரைபழக்கத்தினாலும்உயர்ந்த வேஷ்டி வாங்கும்படி நேரிடுவதில் ஏற்படும் செலவினாலும் கதரை விடமுடியாத நிலைமையில் இருக்கின்றோம். ஆனாலும் நம்மைப் போன்ற மற்ற நடுத்தர மக்களுக்கும் மூன்றாந்தர மக்களுக்கும் இது சாத்தியமாகுமா? என்பதை யோசித்துப் பார்க்க விரும்புகின்றோம். இதில் உள்ள பொருளாதாரத் திட்டமும் வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கின்றது என்பதும் இந்த இலாகா நிர்வாகத்தில் கலந்திருக்கும் ஆசாமிகளுக்கு பொருளாதார வரவும்வேலை இல்லாத பார்ப்பனர்களுக்கு வேலைகிடைத்துத்தின்று கொழுப்பதுமல்லாமல் வேறு ஒன்றும் இல்லை என்பது நமது உறுதியான அபிப்பிராயமாகும் எனவே திரு. காந்தி அவர்களும் அவரது பிரதம சிஷ்ய கோடிகளும் கண்ணியமாய் இந்த மாதிரி கதர் இலாக்கவை மூடிவிட்டு இந்தப் பணச்செலவைக் கொண்டும் நேரச் செலவைக் கொண்டும் வேறு ஏதாவது பொது மக்களுக்கு நஷ்டமில்லாத கைத்தொழில் வளர்ச்சியில் ஈடுபடவோ அல்லது தீண்டாமை ஒழிவு, விதவைகள் துயரம்

ஒழிவு என்பது போன்ற துறைகளில் ஈடுபடவே செய்தால் நாட்டிற்கும், மனித சமூகத்திற்கும் நாணயத்திற்கும் நல்ல பயனை அளிக்கும். அப்படிக்கில்லாமல் எல்லா குற்றமும் பலவீனமும், கஷ்டமும் மனதாரத் தெரிந்தும் மேற்கொண்டும் அதையே செய்து கொண்டிருப்பதென்றால் இவ்வியக்கத்தை வேண்டுமென்றே செய்யும் வெறும் புரட்டு என்று சொல்லுவதுடன் கதர் இயக்கம் என்பதை சங்கராச்சாரி மடம் பண்டார சன்னதி மடம் என்றும் சோம்பேரி மடங்கள் போன்ற திரு காந்தி மடம் என்று தான் சொல்ல வேண்டும் என்றுசொல்லுவதற்கு வருந்துகின்றோம். ஏனெனில் 1922 முதல் 1925 முடிவு வரையில் கதரில் முழு நம்பிக்கை வைத்து திரு. காந்தி சொன்னவைகளையெல்லாம் அப்படியே நம்பி நாமும் சென்றவிடங்களுக்கெல்லாம ராட்டினத்தைத் தூக்கிக்கொண்டு இரவும்பகலுமாய் நூற்றதுடன் படுக்கைக்கு பக்கத்தில் இராட்டினத்தையும் மெழுகு திரி விளக்கையும் வைத்துக்கொண்டு மத்தியில் விளிப்பானால் மறுபடியும் தூக்கம் வரும் வரை நூற்றதுடன் நூல் சந்தாவையும் தவறாமல் அனுப்பிவந்ததோடு அதிகமாக நூற்றதால் கையில் ரத்தஓட்டம்கெட்டுவலியெடுத்து அதற்காக திரு. காந்தியவர்களுக்கெழுதி 2,3 மாதத்திற்கு நம்மை நூல்சந்தா மெம்பரிலிருந்து விதிவிலக்கு செய்யு படி கேட்டு அந்தப்படியே விதிவிலக்கும் வாங்கி சென்னைக்குச் சென்று டாக்டர் குருசாமியிடம் வைத்தியம் செய்து மறுபடியும் ஊரெல்லாம் சுற்றி சர்க்கா சங்கங்கள் ஏற்படுத்தி கதர் கடைகளும் ஏற்படுத்தி உற்பத்தி செண்டர்களும் கண்டுபிடித்து ஏற்படுத்தி, திருப்பூர் காங்கிரஸ் காதி வஸ்திராலயத்தையும் நாமே உண்டாக்கி நேரில் மேற்பார்வை பார்த்து மற்றும் புதுப்பாளையம் காந்தி ஆச்சிரமத்தையும் நமது கையாலேயே திறந்துவைத்து, அதற்கு வேண்டிய உதவியையும் கூடுமான அளவு செய்து, மற்றும் தனிப்பட்ட நபர்களுக்காக பல கதர் ஸ்தாபனங்களையும்கதர் கடைகளையும திறந்துவைத்து, ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களை எல்லாம் அதாவது பானகல் அரசர், ராமசாமி முதலியார், எம். டி. சுப்பிரமணியமுதலியார்முதலியவர்களையெல்லாம் கதர் கட்டச் செய்து,மற்றும்இதுபோன்றபல காரியங்களை கதருக்காக வென்றே செய்து கதர் விஷய பிரசாரத்தால் 124 ஏ. முதலிய பிரிவுகள்படி சர்க்காரால் வழக்கும் தொடரப்பட்டு மற்றும் எவ்வளவோ விதத்தில் மனதார உழைத்துப்பார்த்த பிறகே அதிலுள்ள பலனற்ற தன்மையையும் சிலர் தங்கள் சுயநலத்திற்காக அந்த ஸ்தாபனத்தை உபயோகித்துக் கொண்டிருப்பதுடன் பொதுவில் பார்ப்பனரல்லாத சமூகத்திற்கு நேர்விரோதமாக அந்த ஸ்தாபனத்தை உபயோகப்படுத்தப்பட்டு வருவதையும், இவ்வளவிற்கும் பெரும்பாலும் பார்ப்பனரல்லாதார் பணமே வீணாவதையும் மனதாரப்பார்த்த பிறகே கதர் புரட்டைப்பற்றி வெளியில் தைரியமாய் எடுத்துச்சொல்லத் துணிந்தோமே தவிர, மற்றபடி ஒன்றும் அறியாமலோ பிறர் சொல்வதைக் கேட்டுக்கொண்டோ அனுபவமில்லாமலோ ஒன்றும் சொல்லவரவில்லை என்பதையும் பொதுஜனங்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஆனால்,இதைப்பார்த்தவுடன் பார்ப்பனரல்லாத சில பிள்ளை தேசிய வாதிகள் ஆத்திரம் பொங்கி நம்மீது பாய்ந்தாலும் பாய்வார்கள் என்பது நமக்குத் தெரியும். ஆனாலும் அப்படிப்பட்டவர்கள் தங்கள் சுயபுத்தியைக் கொண்டு நடுநிலைமையிலிருந்து யோசித்துப் பார்க்கும் சந்தர்ப்பத்தை அடையும்போது நாம் சொன்னது சரி முற்றும் சரி என்பதை உணர்வார்கள் என்கின்ற தைரியம் நமக்கு உண்டு. எப்படியெனில் முதல் முதல் ஒத்துழையாமையை அழிக்க ஆரம்பித்த சுயராஜ்யக் கட்சியையும் அதற்காக பார்ப்பனர் கையாளாக இருந்த திரு சி. ஆர். தாசையும் மற்றும் சில பார்ப்பனர்களையும் நாம் தாக்கும்போது பலருக்கு வெகு ஆத்திரம்வந்ததானாலும் ஒருவருஷம் பொருத்து யோக்கியர் எல்லோரும் நாம்சொன்னது முற்றிலும்சரியென்று உணர்ந்தார்கள். பிறகு பெல்காம் காங்கிரசில் ஒத்துழையாமையை காங்கிரஸ் கைவிட்டதிலிருந்து காங்கிரசை தாக்க ஆரம்பித்தபோதும் "காங்கிரஸ் இருப்பதா? இறப்பதா?" என்று பெரிய எழுத்தில் விளம்பரம் செய்து பார்ப்பனர்கள் நம் மீது பாமர மக்களை ஏவி விட்டதும் பிறகு ஒரு வருஷகதிற்குள் முக்கியமான மனிதரெல்லாம் நாம் சொன்னது சரியென்று ஒப்புக்கொண்டு காங்கிரசை விட்டு ஓடிவிட்டார்கள். மற்றும் ஜஸ்டிஸ் கட்சியை நாம் ஆதரிக்கத் தொடங்கியபோதும் இதே மாதிரி நம்மை 'ஜஸ்டிஸ்' கட்சியில் தேசத் துரோகக் கட்சியில் சேர்ந்துவிட்டதாகத் தூற்றி கடைசியாக திருவாளர்கள் கலியாணசுந்திர முதலியார், வரதராஜுலு, சிதம்பரம் பிள்ளை போன்றவர்கள்எல்லாம் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்து விட்டதாக பொதுக் கூட்டத்தில் சொன்னதும் மற்றும் அநேகர் படல்படலாய் சேர்ந்துவருவதும் மற்றும் திரு: காந்தி தென்னாட்டில் வருணாச்சிரம பிரசாரம் செய்த காலத்தில் அவரைத் தாக்கின காலத்திலும் இதே மாதிரி நம்மீது பலர் குற்றம் சொல்லியதும் இப்போது வெகுபேர் நாம் சொன்னதை ஒப்புக் கொண்டதோடு தாங்களும் அதைப் போல் சொல்லி வருவதும் கடைசியாக மத விஷயத்திலும் இந்து மதம் என்பதின் புரட்டையும் அது சம்பந்தமான சாஸ்திரம் புராணம் இதிகாசம் ஆகிய புரட்டுகளையும் வெளியாக்கினபோதும் கடவுள் போச்சு, கடவுளைக் கண்டவர் போச்சு,மதம் போச்சு,மத ஆச்சாரிகள்போச்சு,சமயம்போச்சு, சமய ஆச்சாரிகள் போச்சு என்று கூப்பாடுபோட்டவர்கள் இப்போது வாய் திறவாமல் மூலையில் பதுங்கி இருப்பதும் லட்சக்கணக்கான மக்கள் அதையே சொல்லுவது வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தைப் பற்றி சொன்ன காலத்திலும் தேசம் போச்சுது தேசியம் போச்சுது ஒற்றுமை போச்சுது என்று கத்தினவர்கள் இப்போது வகுப்புவாரித் தொகுதிகளில் தேர்தலுக்கு நிற்க ஆசைப்படுவதும், உத்தியோகத்திலும் வகுப்பு விகித சுதந்திரத்தில் உத்தியோகம் பெறுவதும் அதுவே சர்க்கார் கொள்கையாயிருப்பதும் மற்றும் செங்கல்பட்டு மகாநாட்டைக்கண்டு பயந்தவர்கள் அம்மகாநாட்டுத் தீர்மானங்களில் பலவற்றை தாகள் தங்கள் சொந்த காரியங்களில் நடத்திவைக்க முயற்சிப்பதும் சிலவற்றை பிரசாரம் செய்வதும் சில சுதேச அரசாங்கங்கள் அவற்றிற்காக சட்டம் செய்யவேண்டும் என்று எதிர்பார்ப்பதும்செய்ததைப்பார்த்து பாராட்டுவதையும் பார்த்துவருகின்றோம்.

எனவே, இதுவரை நாம் சொல்லிவந்தவற்றையும் ஆரம்பத்தில் தப்பாய் கருதியிருக்கலாமானும் மொத்தத்தில் பொது மக்கள் ஆட்சேபித்ததாகவோ தள்ளிவிட்டதாகவோ எதிர்பிரசாரம் செய்து மக்களிடை நம் மீது வெறுப்பை உண்டாக்குவதில் வெற்றி பெற்றதாகவோ சொல்வதற்கில்லாமல் இருந்து வந்திருக்கின்றோம். ஆகவே இதே முறையில் கூடிய சீக்கிரத்தில் இந்த கதர் புரட்டையும் மக்கள் மனமார அறிந்து நாம் சொல்லுவதை ஒப்புக் கொள்ளுவதுடன் இதுவரை தாங்கள் ஏமாந்து இருந்ததற்கும் வருந்துவார்களென்றே நினைக்கின்றோம்.

# காந்தி ஜயந்தி புரட்டு

இவ்வாரம் 2-10-29 தேதி புதன்கிழமை தமிழ் நாட்டில் பல இடங்களில் திரு. காந்தியின் சஷ்டி பூர்த்தி தின திருவிழா என்னும் காந்தி ஜயந்தி புரட்டு ஒன்று பார்ப்பனர்களால் வெகு அக்கரை உள்ளவர்கள்போல் கொண்டாடப்பட்டது. அவைகளை ஒன்றுக்கு இரண்டுபத்து வீதம் பத்திரிக்கைகளில் விளம்பரமும் செய்யப்பட்டு இருக்கின்றது. இதன் இரகசியம் என்ன என்று பார்த்தால் சடுகளவு அறிவுள்ளவர்களுக்கும் உண்மை விளங்காமல் போகாது. அதாவது இந்தப் பார்ப்பனர்கள் காந்தி ஜயந்தியை திரு: காந்திமீது உள்ள அன்புக்கும் பக்திக்கும் மரியாதைக்கும் அறிகுறியாக கொண்டாடினார்களா அல்லது திரு: காந்தியின் பெயரைச் சொல்லிக்கொண்டு தங்கள் ஆதிக்கத்திற்கு ஆதாரமாக பார்ப்பன விஷயத்தை பாராட்டிக் கொண்டாடினார்களா என்பது விளங்காமல் போகாது தென்னாட்டு பார்ப்பனர்களுக்கு எப்போதாவது திரு. காந்தியிடம் மரியாதையோ பக்தியோ இருந்ததாக யாராவது சொல்ல முடியுமா? எந்தப்பார்ப்பனர் திரு: காந்தியைப் பிடித்து சிறையில் அடைக்கும்படிக்கும் அந்தப்படி அடைக்காவிட்டால் அராஜகம் பெருகி நாடும் சர்க்காரும் அழிந்துபோகும் என்று சர்க்காருக்குச்சொல்லி சர்க்காரிடம் மகாப் பட்டம் வாங்கினாரோ, அந்தப்பார்ப்பனராகிய திரு:சீனிசாஸ்திரியாரும், எந்தப்பார்ப்பனர், காந்தி அரசியலுக்கு லாயக்கில்லை என்று சொன்னாரோ அந்தப்பார்ப்பனராகிய திரு: சத்தியமூர்த்தியும், எந்தப் பார்ப்பனர் திரு. காந்தியை பயித்தியக்காரர் என்று சொன்னதோடு அவரது இயக்கம் சட்டவிரோதமானதென்று சர்க்காருக்கு யோசனை சொன்னாரோ அந்தப் பார்ப்பனராகிய திரு. சீனிவாசய்யங்காரின் உண்மை சிஷ்யராகிய திரு. முத்துரங்க

றும் திரு. காந்தியின் கொள்கையை ஒழிக்கப்புறப்பட்ட எதிரிகளுக்கு அடிமையாயிருந்தவரும் திரு. காந்திக்கு மண்டையில் மூளையில்லை என்று சொன்னவருமான திரு. வரதராஜுலுவும், மற்றும் இவர்களது சிஷ்ய கோஷ்டிகளும் முக்கியமாயிருந்து காந்தி ஜயந்தியை சென்னையில் கொண்டாடி இருப்பதுடன் வெளி இடங்களிலும் மேல்கண்ட கூட்டத்தைச் சேர்ந்த வக்கீல் பார்ப்பனர்களும் அவர்களது குமாஸ்தாக்கள் கட்சிக்காரர்களுமே முக்கியமாயிருந்திருக்கின்றார்கள். இந்தக் கூட்டத்திற்கு இப்போது திரு.காந்தியிடம் ஏற்பட்ட அபிமானத்திற்கும் பக்திக்கும் காரணம் என்ன என்பது வேடிக்கை விஷயமாகும்.

இவர்கள் ஒன்றாய் திரு. காந்தி செல்வாக்கில் இருந்த காலத்தில் அவர்களை உண்மையில் பின்பற்றினவர்களாகவாவது இருந்திருந்தாலும் அல்லது அவர் இப்போது மூலையில் அடங்கிவிட்டாலும் அவருடைய அப்போதைய கொள்கையையாவது அல்லது இப்போதைய கொள்கையையாவது பின்பற்றுகின்றவர்களாகவாவது இருந்தாலும் ஒருவிதத்தில் காந்தி ஜயந்தி கொண்டாட யோக்கியதை உடையவர்கள் என்று சொல்லலாம்.

அப்போதும் கீழ்ப்படியாமல் இப்போதும் ஏற்றுக்கொள்ளாமல் மூலையில் உட்காரவைத்து ஜயந்தி கொண்டாடுவது எதற்கு சமானம் என்று பார்க்கப்போனால் புத்தரை நாஸ்திகர் என்று பழி சுமத்தி அவர் கொள்கையை அடியோடு அழித்து நாட்டில் செல்வாக்கில்லாமல் செய்துவிட்டு புத்தர் "மகா விஷ்ணு"வின் பத்தாவது அவதாரம் என்று புராணங்கள் எழுதிவைத்து வணங்கி வந்ததைத்தான் சமானமாகச் சொல்லலாம். இந்த தமிழ் நாட்டில் ஒரு பார்ப்பனராவது திரு: காந்தி அபிப்பிராயத்தை ஒப்புக்கொள்ளுகின்றார் என்று யாராவது சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம். உதாரணமாக சாரதா மசோதாவுக்கு ஆதரவளித்ததில் பெண்களுக்கு 18 வயதும் ஆண்களுக்கு 24 வயதும் கல்யாண வயதாயிருக்கவேண்டும் என்று சொன்னதை எந்தப் பார்ப்பனர் ஒப்புக் கொண்டார் என்று கேட்கின்றோம். தீண்டாமை ஒழிந்தாலல்லாது நமக்கு சுயராச்சியம் கிடைக்காதென்றும் தீண்டாமையை அடியோடு ஒழிக்காவிட்டால் நாம் சுயராச்சியத்திற்கு அருகரல்லவென்றும் சொன்னதை எந்தப் பார்ப்பனராவது ஒப்புக்கொண்டு தீண்டாமையை ஒழிக்க முயற்சித்தாரா முயற்சிக்கிறாரா முயற்சிக்கப் போகிறாரா என்று கேட்கின்றோம். கோவில்களில் தீண்டப்படாதாரை விடாவிட்டால் அதுமிகவும் அக்கிரமம் என்று சொன்னாரே, அதை எந்தப்பார்ப்பனராவது ஒப்புக்கொண்டு கோயிலுக்குள் விட்டார்களா என்று கேட்கின்றோம். விதவைகளுக்கு மறுமணம் செய்யுங்கள் என்றும் மறுமணம், செய்யப்படாத விதவைகள் வீட்டை விட்டு ஓடிப்போய் யாரையாவது கல்யாணம் செய்து கொள்ளுங்கள் என்றும் சொன்னதை எந்தப் பார்ப்பனராவது கேட்டார்களா என்று கேட்கின்றோம்.

மற்றும் காங்கிரஸ் விளையாட்டுப் பிள்ளைகள் கூட்டம் என்றும், பூரண சுயேச்சை என்பது பயித்தியக்காரத்தனமென்றும் சொன்னதை யாராவது எந்தப் பார்ப்பனராவது மதித்தார்களா? அன்றியும் கோயில்களில் கடவுள்கள் இல்லை என்றும், கோயில்கள் விபசார விடுதிகள் என்றும் சொன்னதை யாராவது மதித்து எந்தக் கோயில்களையாவது இடித்தார்களா அல்லது அடைத்தார்களா என்று கேட்கின்றோம். அன்றியும் லாகூர் காங்கிரசில் ஒரு காரியமும் ஆகப்போவதில்லை; காங்கிரசிலும் ஒழுங்காயில்லை; ஆகலால் நான் காங்கிரஸ் தலைமை ஒப்புக்கொள்ளமாட்டேன் என்று சொன்னதற்கு யாராவது பதில் சொல்லவோ அல்லது காங்கிரசை விட்டு வெளிவரவோ அல்லது காங்கிரசின் கொள்கைகளைத் திருத்தவோ ஒப்புக்கொண்டார்களா என்று கேட்கின்றோம். கடைசியாக திரு. காந்தி இன்னமும் தனக்கு ஒத்துழையாமையில்தான் நம்பிக்கை இருக்கின்றது என்று அடிக்கடி சொல்லி வருகின்றாரே இதையாவது எந்தப் பார்ப்பனராவது கேட்டு உத்தியோகத்தை விடவோ சட்டசபையை விடவோ பட்டத்தை விடவோ பள்ளியை விடவோ வக்கீல் வேலையை விடவோ சம்மதித்தார்களா என்றும் கேட்கின்றோம். திரு: காந்தி சொல்வதில் ஒன்றைக்கூட கேட்காமல் அவரை பயித்தியக்காரரென்றும், முட்டாள் என்றும், மூளை இல்லை என்றும், அரசியலுக்கு லாயக்கில்லை என்றும், அராஜகன் என்றும் சட்ட விரோதி என்றும் மற்றும் அயோக்கியன் மடையன் போக்கிரி (கும்பகோணம் பம்பாய் முதலிய இடங்களில்) என்றும் சொல்லிவிட்டு அதவும் சென்ற வாரத்தில் சொல்லிவிட்டு இந்தவாரத்தில் அதே பார்ப்பனர்களும் அவர்களது அடிமைகளும் கூலிகளும் சேர்ந்து காந்தி ஜயந்தி கொண்டாடுவதென்றால் இதைப்போன்ற வஞ்சகமும் சூட்சியும் வேறு உண்டா என்றுதான் கேட்கின்றோம்.

ஒரு காரியத்திற்காக காந்தி ஜயந்தி கொண்டாடப்பட்டது என்றால் அதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். அதாவது தென் இந்தியாவில் வருணாச்சிரமப் பிரசாரம் செய்ததற்கும் இந்த ஜென்மத்தில் "சூத்திரன்" தனது வருண தர்மத்தைச் செய்தால் அடுத்த ஜன்மத்தில் "வைசிய"னாக அடுத்த ஜன்மத்தில் "க்ஷத்திரிய"னாக அடுத்த ஜன்மத்தில் "பிராமண"னாகலாம் என்று சொன்னதற்கும், மற்றும் ராமாயண பாரத பிரசாரம் செய்ததற்கும் கதரின் பேரால் லட்சக்கணக்காக பணம் பிடுங்கி பார்ப்பனுதிக்கத்திற்கு செலவுசெய்ய பார்ப்பனர்கட்கு இடம்கொடுத்துவிட்டுப்போனதற்கும் வேண்டுமானால் பார்ப்பனர்கள் காந்தி ஜயந்தி கொண்டாடலாம் என்பதை நாம் ஒப்புக்கொள்ளுகின்றோம். ஆனால் சுயமரியாதை உள்ள பார்ப்பனரல்லாதார்கள் அதில்கலந்துகொண்டதற்கு நாம் வெட்கப்படாமலிருக்கமுடியவில்லை. இன்றையதினமும் நமது நாட்டில் நடக்கும் அனேக ஜயந்திகளும் பண்டிகைகளும் திரு. நக்ஷத்திரங்களும் உற்சவங்களும் பார்ப்பனுதிக்கத்திற்கும் பார்ப்பனரல்லாதார் இழிவுக்கும் அறிகுறியாக நடத்தப்படுகின்றது என்பதை பலர் அறிந்தும் அவ்வித பண்டிகைகளையும் உற்சவங்களையும் இன்னமும் அறிவும் உணர்ச்சியுமற்ற பார்ப்பனரல்லாதார்கள் செய்து கொண்டுதான் வருகின்றார்கள். அதுபோலவே காந்தி ஜயந்தியும் கொண்டாடப்பட்டது என்றுதான் நாம் வருத்தத்துடன் சொல்ல வேண்டியிருக்கின்றது. எனவே இனியாவது பகுத்தறிவும் சுயமரியதை உணர்ச்சியும் உள்ள பார்ப்பனரல்லாதார்கள் இம்மாதிரியான பார்ப்பன சூட்சியிலும் வஞ்சகத்திலும் விழாமலிருக்க எச்சரிக்கை செய்கின்றோம்.

# பார்ப்பனரல்லாதார் மக்கட்கோர் வேண்டுகோள்

(திரு: ஜெயராம் நாயுடு)

பிராமணோத்தமர்களே!

வைதீகப் பார்ப்பனர்களே!!

இற்றைக்குச் சுமார் மூவாயிர வருடங்களுக்குமுன் வட இந்தியாவில் குடியேறிப் புனித திராவிட மக்களை வீணில் வதைத்துத் தென்னாட்டிலே துரத்தி இந்திய மன்னர்களை வஞ்சித்து மானிய நிலங்கள் பெற்று இதிகாச வேதாந்த புராணங்களைக் காலத்துக் கேற்றவாறு அமைத்து பிராமணர் பிர்மாவின் முகத்தினிடை பிறந்தவர்களென்றும், க்ஷத்திரியர் தோளினின்று பிறந்தவர்களென்றும், வைசியர் தொடையிலிருந்து பிறந்தவர்களென்றும், வேசிமகனான சூத்திரன் பாதத்தினின்று பிறந்தவர்களென்றும் ஆராய்ச்சிக்கும் மனோதத்துவத்துக்கும் இயற்கைக்கும் உலகத்துக்குமெஞ்ஞான்றும் ஒவ்வாத மொழிகளைப்பேசிக்கொண்டும், வேதம் ஈஸ்வரனால் சொல்லப்பட்டெழுதப்பட்டதென்றும், அதை பிராமணர் தவிர இதரர் வாசித்தால் நாக்கை அறுக்க வேண்டும், காதில் கேட்டால் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றவேண்டும் என்றெழுதிவைத்துக்கொண்டபித்தலாட்டமும், பரண்மேலேறிப் பலர் பார்க்கச்செய்துவந்த அசுவமேதயாகம், பௌண்டரீக யாகம் முதலியவைகளும், ஹோமம் எச்யம் யாகம் புரிந்தும் கோயிலில் திரிகால பூஜை ஆகமப்படி நடாத்தியும் வந்ததின் பலனாகத்தான் வேதமோதிய வேதியர்க்கோர் மழை, வேதியர் இன்றேல் வையகமில்லையெனப் பகன்ற காலம் தற்போது சுயமரியாதைத் தாண்டவ இயக்கம் மாபெரும் பெரியாரால் தோன்றி புராணம் பொய்க்களஞ்சியம் வேதம் மக்களை வேற்றுமைப்படுத்துவது. ஆதலின் வேதம்ஒழியில் பேதம் ஒழியும் வருணாச்சிரமம் வருத்தத்திற்கு இடம் தருகிறது; மதம் மாண்பைக் கெடுக்க வந்தது; மநுதர்மம் அதர்மமானது; பாரினில் பார்ப்பனர் பாவிகளே என்று பகன்று மூடப்பழக்க வழக்குச் சடங்குகளை அறவே ஓட்டி நாட்டுக்கு நலன் தரும் அன்பு, சமத்துவம், சகோதரத்துவம் முதலிய அரிய பெரிய குணங்களைப் போதித்து மக்களுக்கு ஞான ஒளியைப் பரப்பும் இக்காலத்தில் அனுவளவும் வஞ்சித்துப் பொருள் பறித்தலும் ஏமாற்றுதலும் செல்லாதென நன்குணர்ந்து நவீன முறைக்கேற்ப நாகரீகத்தை காட்டவல்ல ஆற்றல் கொண்டு வேதத்தைப் போன்ற ஆபாசங்களை மூட்டை கட்டி மறுபடியும் எழாவண்ணம் குழி தோண்டி ஆழப் புதைத்துவிட்டு காலத்துக் கேற்ப கோலம் போடுதல் தகுதியுடைத்தென எண்ணி இன்று முதல் கொண்டே சுயமரியாதைக் கொள்கைகளைச் சுயநலங் கருதாது கைக்கொண்டு பிராமண பிராமணரல்லாதார் இயக்கத்தை நாட்டினின்று வியக்க ஓட்டி ஒற்றுமைப்பட்டு ஒருமிக்கச் சேர்ந்து அடிமை வாழ்வு நீங்க சுயராச்சியம் கேட்போமானால் நாளையே அது அளிக்கப்படுமென நான் கூறுவது திண்ணம்; இதுவே என் மன எண்ணம். இவ்வுண்மைத் தத்துவத்தை இனியாகிலும் அறிவீர்களா! சட்டசபை பார்ப்பனர்களும் வேதத்தில் மூழ்கிய வைதீகர்களும் செய்யும் கொடுமையாலன்றோ குக்கிராமத்தில் உண்மை நெறி பூண்டொழுகும் பார்ப்பனனுக்கும் பற்பல இடையூறுகள் சம்பவிக்கின்றன. சாரதா மசோதா சட்டசபையிலும், அரசாங்க சபையிலும் பல எதிர்ப்புக்கிடையே வெற்றியுறுங்கால் உங்கள் வேதத்தின் மகிமை வேருடன் களையப்படவில்லையா? நாளை விதவா விவாக மசோதாவும் நிறைவேறப்போகின்றதே! அதற்கு என்ன சூழ்ச்சி செய்யப்போகிறீர்கள். ஏன் வீணில் பணத்தைக்காத்த பெரும் பூதங்களைபோலும் பிணத்தைக்காத்த பேய்களைபோலும் சட்டசபைகளிலும் இந்தியா சட்டசபையிலும் வீண் கூச்சல் போடுகிறீர்கள்! மேடைகளில் காலித்தனமான பிரசங்கங்கள் நிகழ்த்துவதேன்? இன்றே இச்சூழ்ச்சிகளை விடுங்கள். உங்கள் ஜெபம் பலிக்காது. ஆதலால் ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு, இன்றி வேறுபட்டாலனைவர்க்கும் தாழ்வே என்ற உண்மையை அறியாதிருப்

(தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க)

மனைவியின் கடமை



பாத்திரமறிந்து பிச்சை யிடு.



கோத்திரம் அறிந்து பெண்ணைக் கொடு



அன்புள்ள மனைவியும் அறிவில்லாப் புருஷனும்



பணம்வந்தவழியேசெல்லும்



பணம் பந்தியிலே குலம் குப்பையிலே



பாலாம்பாள் செய்த படு மோசம்



நவீன நாகரீகம்



புருஷனை ஆண்டியாக்கிய மனைவி



மாமியின் கொடுமை



தாய் செய்த நன்றி



அண்ணியின் கொடுமை அல்லது அடங்காப்பிடாரியின் ஆவேசம்



மருமகளின் கொடுமை



# குடும்ப விநோதக் கதைகள்

**800 பக்கம். பலசித்திரப்படத்துடன் விலை ரூபா 2.**

இதில் காட்டிய 26 கதைகளும் படிக்க விநோதமாயும், அடங்காசிரிப்பையும் உண்டாக்கும்.

இக்காலத்திற்கு இப்புத்தகம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அவசியம் இருக்கவேண்டும். :: ::

சித்தம் கலங்கிய சித்ராங்கி அல்லது கண்மறைக்கும்கமம்.



சகோதரத்துரோகி



மைத்துனன் கொடுமை



புருஷனைக்கொன்றமனைவி



மனைவியைக்கொன்றபுருஷன்



இரண்டு பெண்டாட்டிக்காரன் திண்டாட்டம்.



தந்தை செய்த நன்றி



ஆடம்பர நகையலங்காரி



நகைப் பைத்தியத்தால் நாசமடைந்த குமலம்.



திருட்டுச் சாமியாரும் குருட்டுக்கூத்தியாரும்



பெண்சிரித்தால்போச்சு



மதம் பிடித்த மாமனர்



மோசம்போன மாமனர்



பினங்கு, சிங்கபூர், மலாகா முதலான நாட்டிலுள்ளவர்கள் ரூபாய் 2-8-0 போஸ்டல் ஆர்டர் வாங்கியனுப்பினல் புத்தகம் அனுப்பப்படும், உள்நாட்டிற்கு வி. பி. யில் அனுப்பப்படும். தபால் செலவு அணு 8.

(30) **பிக்டோரியல் கம்பெனி 149, பிராட்வே, சென்னை,**

## சிதம்பரத்தில் சித்திரவதை

(உள்ளங்கசிந்து வரைவோன்)

8-9-29ந் தேதி காலை 10மணிக்கு சிதம்பரத்தில் சண்டாளர்களும் நீசர்களும் (அதாவது பெ ல்லாப் பார்ப்பனர்கள்) வாழும் புதுத்தெருவிற்கு அடுத்த தெருவில் ஓர் யாகம் நடைபெற்றது. இந்த யாகத்திற்காக ஒரு ஆட்டை பறைக்கப் பதைக்க அதன் பீஜத்தைப் பிசைந்துபிசைந்து சித்திரவதை செய்தார்கள். அந்தோ! பரிதாபம்! ஈரமிரக்கமற்ற, எழில் பெறும் பாவிகளாகிய புலால் உண்டு மகிழும் மாமிச பட்சணிகளாகிய கொடும் பஞ்சமா பாதகர்களாகிய சண்டாளப் பார்ப்பாரப் பேய்கள் யாகத்தின் பேரால் செய்த ஆட்டின் கொலையானது சித்திரவதையினும் மிகையேயாகும். இந்த சித்திரவதையை தடுப்பதற்கு ஓர் அரசாங்க சட்டமில்லையா? இந்த பரம சண்டாளர்களுடைய மூக்கையும் பீஜத்தையும் பிடித்து நசுக்கி பழிக்கு பழிவாங்க ஓர் அரசநீதி இல்லையா? இராம ராஜ்யத்தை தமக்கு வேண்டு மென்கிற (எதற்காக? வேள்வியின் பேரால் புலால் உண்டு மகிழ) இந்தப் பேய்களை அடக்க ஓர் அடக்குமுறைச் சட்டமில்லையா? இதை வரையும்பொழுது என்மனம் துடிக்கிறது; கை நடுக்குகிறது; அரசாங்க ஜீவகாருண்ய சட்டத்தை மீறி நடக்கும் கழுகுகளை ஏன் பழிக்கு பழிவாங்குதல் கூடாது? ஐயோ! அந்த திக்கற்ற ஆடு என்ன செய்யும்? யாரிடம் போய் சொல்லி அழும்? தன்னைக் கொல்லப்போகும் பாதகனையும் அவன் கொல்வதற்கு ஒரு க்ஷண நேரத்திற்கு முன்புகூட அவன் தன்னைக் கொல்லப் போகிறானென்று தெரியாமல் அவன் பக்கத்தில் நின்று கொண்டு அவன் கையிலிருக்கும் கத்திக்கடியில் தொங்குகிற தழைகளையும் தின்று கொண்டிருக்குமே! அந்தோ என்றுகூட அலறி விழுந்து சப்தம் செய்ய ஒட்டாமல் அவைகளின் மூக்கையும் வாயையும் இறுகப் பிடித்துக்கொண்டு அவைகளை கீழ்தள்ளி படுகொலை பார்ப்பன குண்டோதரன்கள் இரண்டு பேர் அதன்மேல் ஏறி உட்கார்ந்து கொண்டு மற்றொருவன் அவைகளின் பீஜத்தை பிடித்துக்கொண்டு பிசைந்து உயிரை நீக்கி விட்டானே! அவர்கள் கூறும் அந்த சண்டாளக் கடவுளர்கள் அவர்கள் கூறும் அவதார ரூபமாக அன்று வந்து அந்த ஆட்டை காப்பாற்றாமல் போனதினால் அந்தச் சண்டாளக் கடவுளர்களையும் அந்தச் சண்டாள வேதங்களையும் அழிக்கவேண்டியது நம்முடைய முதல் கடமையாகும்.

அவர்கள் அன்றுசெய்த அவ்வாட்டின் சித்திரவதையை எடுத்து வருணித்தல் என்றால் முடியாது. ஆனால் அந்தக் கூட்டத்திற்கு போன ஒரு சண்டாளப் பார்ப்பனன் அக்கூட்டத்திற்குப் போக சம்மதங் கொடாத ஒரு பார்ப்பனருக்கு எடுத்துச் சொல்ல அவர் எனக்கு எடுத்து உரைத்த சித்திரவதை வருணனையை சிறிது கூறுகிறேன்:-

யாகத்தை வளர்த்து விட்டு அவ்வாட்டை இரண்டு மூன்று பேர்வழிகள் பிடித்துக் கொண்டார்களாம்! அதில் ஒருவன் அதன் வாயை தருப்பைப் புலால் (சாஸ்திர சம்பிரதாயம் வழுவாமலிருக்க) இருக்கிக்கட்டி விட்டு நாசியின் துவாரங்களை சுவாசம் உள் போகாமல் வாயோடு சேர்த்து அழுத்தமாகப் பிடித்துக் கொண்டானாம்! (ஐயோ பரிதாபம் சுவாசம் அடைப்பதினால் அந்த ஆடு என்ன மரண அவஸ்தைப் பட்டதோ அந்த ஆடு இருந்த ஸ்திதியில் நாம் இருக்கிறதாக நினைத்துக் கொண்டு சற்று யோசித்துப் பார்ப்போமானால் அவ்வாட்டின் மனம் என்ன பாடுபட்டிருக்கும் என்பது யாவருக்கும் தெரியவரும்) இத்துடன்நிற்கவில்லை ஐயா அச்சித்திரவதைக்காரர்களின் செயல். (இவ்விதமான சித்திரவதையை ஒப்புக் கொள்ளும் அவ்வேதங்களையும் சாஸ்திரங்களையும் புராண இதிகாசங்களையும் ஏன் நாம் கொளுத்துதல் கூடாது?) இவ்விதமாக அந்த ஆடானது தத்தளித்துக் கொண்டிருக்கும்போது மற்றொருவன் அதன் பீஜத்தை தனது இரண்டு கைகளினாலும் இறுகப்பிடித்து தனது வலிமையைக் கொண்டு பிசைந்து பிசைந்து உயிரை நீக்கினானாம்! என்ன கொடுமை பாருங்கள்! இச்சித்திரவதை வகைகளைக் கற்றுக் கொடுக்கும் புத்தகங்கள் கடவுளால் எழுதப்பட்டவைகளாம்! கடவுளால் அங்கீகரிக்கப்பட்டவைகளாம். என்னே! இப்பார்ப்பன மாமிச பட்சணிகள் நமக்களை சாஸ்திரத்தின்பேரால் ஏமாற்றுகிறதின் கொடுமை! அது உயிர் துறக்கும் சமயத்தில் ஒருவன் கூர்மையான கத்தியைக் கொண்டு அதன் வயிற்றைக் கிழித்து ஈரலை வெளியில் எடுத்து முள்ளின்மேல் ஏந்தி வந்து நெய் ஊற்றி அவ்யாக அக்கினியில் வாட்டி எடுத்தார்களாம். பின்பு அவர்களுக்குள் ஐந்து பேர்களை அக்னி, வருணன் முதலிய ஐம்பெரும் தேவர்களாக நியமித்துக் கொண்டு அவ்வைந்துபேர்களும் அவ்யாகத்தை நடத்திவைக்க காரண கர்த்தாவாயிருந்தவரும் சேர்த்து ஆகிய ஆறு ஆசாமிகளும், அம்மாமிசத்தை பகிர்ந்து கொண்டார்களாம்! இம்மாமிச பக்ஷிணிகளா நமக்கு மோக்ஷ வழியைக் காட்டப்போகிறார்கள்? புரோகித தரகர்களை இன்றே ஒழியுங்கள். இந்து வேத புராணங்களை இன்றேவெறுத்துத் தள்ளுங்கள்.

பின்பு ஒரு பெரிய பார்ப்பன போஜனம் நடைபெற்றதாம். இந்த யாகத்தில் சம்பந்தப்பட்ட ஆறுபேர்களும் ஐயர்களாயிருந்தால் அன்றைய தினத்திலிருந்து அவர்களெல்லாம் தீக்ஷிதர்களாய் விட்டார்களாம். என்னே நாயை பன்றியாக்கும் வித்தை!

இந்த அனியாய அக்கிரமத்தைத் தடுக்க ஜீவகாருண்ய சபையார் தகுந்த முயற்சி எடுப்பார்களென்று நம்புகிறேன். மேலும் நம் காருண்ய கவர்ன்மெண்டாரும் இச்சித்திரவதைகள் இனிமேல் நடவாமல் தடுப்பார்களென்றுநம்புகிறேன். இன்னும் இத்தகையயாகம்ஒன்று கூடிய சீக்கிரத்தில் இவ்வூரிலேயேநடத்தப்போகிறார்களாம். இதைத்தடுக்க யாவரும் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். பார்ப்பன வேதம், புராணம், புரோகிதம், கடவுள் முதலியவைகள் இனிமேலாவது வேண்டாம் எனது சகோதர சகோதரிகளே!

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

பின் இனியாகிலும் உணருங்கள். சுயராச்சியம் என்பது கல்லா,மரமா. தங்கமா, வைடூரியமா, பார்சலில் அனுப்பப்படும் வஸ்துவா, படகிலேற்றிக் கொணரும் பொருளாயாதென உரைப்பீர்? அயல் நாடு கண்டு களிக்க நாம் ஒற்றுமைப்பட்டொழுகி சுயராஜ்யம் கேட்பின் கவர்ன்மெண்டாரும் இந்தியர்கள் தங்களைத் தாங்களே ஆளக்கூடிய நிலையில் வந்து விட்டனர். அவர்களை பரிசோதித்த காலம் போதும். பிள்ளை பெரியவனானால் பெட்டிச் சாவியைக் கையில் கொடுக்க வேண்டியது நியாயமே என்றெண்ணி சுய ஆட்சியை மகிழ்ச்சியுடன் அளிப்பர் என்பதற்கோர் ஐயமில்லை.

## செய்தித்திரள்

தென்மாப்பட்டு:-திரு: கருப்பையா அவர்கட்கும், செல்விவிசாலாட்சி அம்மைக்கும், ஆவணித் திங்கள் 22-ம் நாள் அதி விமரிசையாய் சுயமரியாதைத் திருமணம் நிகழ்ந்தது. அதுகாலை திருவாளர்கள் பூவாளூர் பொன்னம்பலனார், சிவானந்தம், அருப்புக்கோட்டை கருப்பையா, மதுரை அருணாசலம்முதலானவர்கள் மிகத் தெளிவாக சுயமரியாதைத் திருமண முறையை வலியுறுத்தி அறிவுரையாற்றினார்கள் என்றவைக்கம் வீரர் வாசகசாலைக் காரியதரிசி அ. சோமசுந்தரம்தெரிவிக்கின்றார்.

நாகை:—நாகப்பட்டினம் டவுன் கிராம பஞ்சாயத்துக் கோர்ட்டுத் தலைவராக இவ்வூர் சுயமரியாதைப் பற்றுடையவராகிய திரு: வீ. வீராச்சாமி அவர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளார்.

சீர்காழி:—புரட்டாசி 6ந் தேதியன்று திரு. நாராயணசாமி அவர்கள் தந்தையார், உயிர்நீத்ததை முன்னிட்டு 6-10-29ல் இறந்தவரின் ஞாபகார்த்தமாக ஏழைகட்கு அன்னம் அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

காஞ்சி:—இவ்வூர் திரு: நடேசன் அவர்கள் தன் தாயார் திதியை பார்ப்பனப் புரோகிதம் இன்றி ஏழைகட்கு அன்ன முதவி நடாத்தினார்.

மதுரை:—25-8-29ல் திருவாளர் சோமசுந்தரத்திற்கும் செல்வி தனபாக்கிய வதிக்கும் சிவராஜயோகி சொக்கலிங்க சுவாமிகளால் சுயமரியாதைத் திருமணம் நடாத்தி வைக்கப்பட்டது.

ஆத்தூர்:—திரு: எ. எல். எம். இராமலிங்கம் அவர்கட்கும், செல்வி பிச்சம்மைக்கும் 8-9-29ல் சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றது. இதுபற்றி குடியரசுக்கு ஒரு ரூபாய் நன்கொடையும் அளித்துள்ளனர்.

திருச்சி:—புரட்டாசி 23ம் நாள் செவ்வாயன்று திருச்சி நகர மன்றத்தில் யாதவ குல வாலிபர்சங்க ஆண்டு நிறைவுவிழா திரு. ஜே. சக்கிரபாணி நம்பியார் அவர்கள் தலைமையில் நடைபெறும்.


வெளியாகி விட்டது! வெளியாகி விட்டது!

# சாமிகளின் அடிமைகள்

சாமிகளின் அடிமைகள் என்னும் மொழி பெயர்ப்பு நூல் இப்பொழுது விற்பனைக்குத் தயாராய் உள்ளது. இதன் விலை 1-8-0 ரூபாய் என்று நாம் குறிப்பிட்டிருந்தோம். ஆனால் பலர் இவ்விலையைச் சிறிது குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதின் பேரில் நாம் பிரதி ஒன்றை 12 அணாவிற்கே கொடுப்பதாக உத்தேசித்துள்ளோம்.

விலை ரூபாய் 0—12—0.

திராவிடன் புத்தகாலயம்,

14, மௌண்ட் ரோட், சென்னை.

தனிப்பிரதி விரும்புவோர் 14-அணா கால்வண ஸ்டாம்பு அனுப்பவும்.


ரோஜா முத்தையா

# இந்த ஆஸ்திகத்தை நம்பாததுதானு நாஸ்திகம்?

[உறந்தை இராமலிங்கம்]

அனேக ஊர்களில் மருளாடி ஆடு முதலியவைகளினிரத்தங் குடித்துத் திரிகால வர்த்தமானங்களைத் தெரிவித்துக் கோரிய வரங்களையுங்குறைவின்றி கொடுக்கப் பெறுவதாயும்நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இதில் கற்றுணர்ந்த பார்ப்பனர்களுங்கலந்து குதுகலமாய்க் கொண்டாடி வருகின்றார்கள். அவர்களிடத்து இவ்வித சம்பவங்கள் சத்தியமாகவே சாத்தியமாவதுதானா? இதுவரையிலும் எத்தனை பேர்கள் தங்களது குறைகளை இங்ஙனம் நிவர்த்தித்துக்கொண்டிருக்கின்றார்கள்; இது நமது நாட்டின் முன்னேற்றத்திற்குத் தடையாயுள்ள மூடக் கொள்கையை அன்னிய மதஸ்தர்கள் எள்ளி நகையாடுவதுமதங்களுக்குத் தோற்றவில்லையா? கும்பலோடு நீங்களுங் கோவிந்தம் போடுகின்றீர்களே யெனக் கேட்பின் அதற்கவர்கள் கூறுவதாவது:—இதற்கு முன்னிருந்த வேதாகமாதிகளைக் கற்றுணர்ந்த பெரியோர்களெல்லாம் யாகாதிகளிடத்தும் இத்தெய்வங்களிடத்தும் அற்புத சக்திகளைக் காணுமலா இவைகளைக் கொண்டாடி வந்திருக்கின்றார்கள்? நாகரீகம் மிகுத்த கல்கத்தா முதலிய பட்டினங்களிலேயே தினம் ஒன்றுக்கு ஆயிரக்கணக்கான ஆடுமாடுகள் காளி சந்நிதியில் வெட்டுகின்றார்களாம்! விவேகாநந்த சுவாமிகளின் குருவாயுள்ள பரமஹம்ஸ இராமகிருஷ்ணர் அத்தகைய காளியையே பூசித்து அனேக அற்புத சக்திகளை வெளியாக்கி இருக்கின்றார்களாம்! அப்பெரியார்களுக்கெல்லாம் இதிலுள்ள தோஷங்களெல்லாம் தெரியாமலா போய் விட்டன? சுயமரியாதைக் கிளர்ச்சி யென்னும் நாஸ்திகப்பிரசாரந் தலைப்பட்டுத் தான்தோன்றித் தம்பிரானாய் எவ்வித கட்டுத் திட்டங்களுக்கும் கட்டுப்படாது தம் மனம் போன போக்கெல்லாம் வழியாகவேசென்று ஒவ்வொருவரும்சுதந்தர அரசனாகவே இருந்து பார்த்துத்தான் கெடுவதுமன்றி யேனையோரையும் கெடுக்கப் பார்க்கின்றார்கள். இது எம்மட்டும் சாத்தியமோ அனுபவத்திலன்றோ அறியவேண்டும். ஜாதி பேதமே கூடாதென்றும், சுயமரியாதைக்காரர்களெல்லாம் நாளைத் தோட்டிகளிடத்திலுங் கொள்வினை கொடுப்பினை செய்ய முன் வருவார்களார்க்கும்; இதுவரையிலும் யெத்தனை போவழிகள் அவ்விதம் செய்திருக்கின்றார்களோ? யெல்லாம் வாசா கைங்கர்யர்களாயிருந்து சிறிது நிலவிவரும் உயர்வு தாழ்வு மரியாதையையும் மண்ணாக்கவே இவ்வியக்கப் பிரசாரம் செய்கின்றார்கள்; இதுவும் கலியின் கொடுமையேயாம் என்று ஆத்திரப்படுகின்றார்கள். இத்தெய்வங்களின் அற்புத சக்திகளைப் பற்றிச் சிறிது விசாரிப்பாம் இப்பொழுது கண்கண்ட தெய்வமாக இரண்டாயிரம் மூவாயிரம் ஆடுகளை அறுத்து சட்டியில் வார்த்த இரத்தமெல்லாம் கொஞ்சமேனும் சட்டியிலொட்டாமல் வழித்துக் காண்பித்து நக்கிக் குடித்தும் திரிகால வர்த்தமானங்களைத் தெரிவித்தும், கோரிய வரங்களைக் குறைவின்றிக் கொடுப்பதாகப் பிரபல பிரஸ்தாபத்திலிருப்பவர் திருச்சி புத்தூர் குழுமியாயி மருளாடியேயாம். இவரிடத்தில் அத்தகைய அற்புத சக்திகளிருப்பதை அறிய விரும்புவோர்கள் நேரில் வந்து சுமார் 40ஆட்டிரத்தம் அனைத்தும் ஒரு பாத்திரத்திலிட்டு அதைக் கொஞ்சம் கொஞ்சமாக மொண்டு கொடுத்து அவ்வளவையும் குடிக்கச்செய்து பார்ப்பதோடு அவரவர்கள் மனதில் சங்கற்பித்துள்ளவைகளை யெழுதிவைத்துக் கொண்டும் கேட்டுப்பார்க்கின் யெல்லா அற்புத சக்திகளும் நன்கு விளங்கிவிடும். கற்றுணர்ந்து விசாரணை மிகுத்தோர்கள் மலிந்த இப்பிரதேசத்தில் நிகழும் மோசப்பிரசாரங்களைத் தடுக்கும் முயற்சியில் சிறிதும்மீடுபடாது அது செல்லுமாறேவிடுத்து தாங்களும் அதைக் கண்டுகளி கொண்டிருப்பதுதான் தேசாபிமானியின் பெருந்தன்மையாக்கும்; அல்லது இவ்விடத்தில் தான் ஆஸ்திகத்வ அற்புத சக்தியின் அபரிமிதமாய் விளங்குவதைக் கண்டு ஆனந்தசாகரத்திலமிழ்ந்திருக்கின்றார்களோ அறிகிலம். இவ்வூரில் மட்டும் இக்காட்சி இவ்வளவு பிரபலமாய் நடைபெறுதற்குக் காரணம் இப்பொழுதிருக்கும் மருளாடிக்குமுன் காலஞ்சென்ற இராமகிருஷ்ண மருளாடியும், கோயில் பூசைசெய்யும் பண்டாரமும் ஒரு கையிலிருந்து கொண்டு ஒரு சமிக்ஞையேற்படுத்திக் கொண்டார்கள். அஃதாவது:—கற்பூரஆராதனை செய்யும் தட்டை வலது கையால் தொடுவது ஒரு கேள்விக் குறியாகவும்; இடது கையால் தொடுவது ஒரு கேள்விக் குறியாகவும்; அவ்வாறே தட்டைப் பூசாரியின்சிரம் வலதுபுஜம், இடதுபுஜம், மார்பு, வயறு, வலது முழங்கை, இடது முழங்கை, முதலிய அவயவங்களில் வைத்துக் காண்பிப்பதினாலேயே நோய், பிள்ளைவரம், சிவில் கிரிமினல் வியாச்சியம், களவு போனவை முதலானவைகளைப்பற்றித் தெரிந்து கொள்ளுவதேயாம். பிரதி வெள்ளிக்கிழமைதோறும் பிரார்த்தனைக்காரர்கள் குழுமியாயி கோயிலுக்குக் காலையிலேயே வந்துவிடுவார்கள். அது சமயம் கோயில் பண்டாரம் அவர்களிடம் வந்து மெதுவாகக் கலந்து முதலில் அவர்களது ஊர் பேர் யோக க்ஷேமங்களையும் விசாரித்துக்கொண்டு பின்னர் அவர்களது கோரிக்கைகளையும் தந்திரமாய் விசாரித்துத் தெரிந்து கொண்டு, உலகெங்கும் பிரசித்து பெற்ற அதிஅற்புதசக்தி வாய்ந்த கண்கண்ட தெய்வமாய் விளங்கும் குழுமியாயி உமது கோரிக்கைகளெல்லாங் குறைவின்றி நிறைவேற்றி வைப்பதற்கு யாதொரு தடை இன்றெனத் தெரிவித்து, இன்னும் சிறிது நேரத்தில் இங்கு நிகழும் அற்புதங்களை நீங்களே கண்ணாரக் கண்டு களிக்கப்போகின்றீர்களென அவர்களுக்கு அதிக சிரத்தை யுண்டாகும்படிச் சொல்லிவிட்டுச் சென்று, அவரது பூசைக்குவேண்டியசாமக்கிரியைகளை தயாரித்துக் கொண்டு அம்மனுக்கு அபிஷேகம் அலங்காரம் முதலியன முடித்து தூப தீபங் கொடுக்குந்தருணத்தில்தான், வீட்டினின்று மருளாடி வந்து, அம்மன் சந்நிதியில் நின்று ஆயியென்று சத்தம்போடுவார். அதுசமயம் அவரது வாயினின்று இரத்தக்குறிபோல் தோன்றும். அப்பொழுது மருளோடிருப்பவரிடம் பிரார்த்தனைக்காரர்கள் வந்துசூழ்ந்து கேள்விகள் கேட்பார்கள். அது சமயம் கெர்ப்ப கிரகத்துள்ள அம்மனைக் கேட்டுச் சொல்வதுபோல பண்டாரத்தின் தட்டை நோக்கிப் பண்டாரம் தெரிவிக்குஞ் சமிக்ஞையைக் கண்டு நீங்கள் இன்ன காரியத்தைக் கோரி வந்தவர்களல்லவாவென்று தங்கு தடையின்றி முதலில் சொல்லி அவர்களுக்கு நம்பிக்கையும் சந்தோஷமுமுண்டாகும்படி செய்துகொண்டு பின்னர் நிகழ்வனவற்றையுந் தெரிவித்து அங்ஙனம் நடைபெறாத போதெல்லாம் அவரவர்கள் விதியின்படி நடைபெறுவதால் சுவாமி விதியைக் கூடவா தடுத்துவிடுமென்று சமாதானம் செய்துகொள்வது வழக்கம். இங்ஙனம் நிகழ்ந்து வருவனவற்றை நன்குணர்ந்த இருவர் மற்றவர்களைப் போலவே கோயிலுக்குச் சென்று கோருதலைக்காரர்களிடம் பண்டாரம் வந்து விசாரிப்பனவைகளையெல்லாந் தெரிந்துகொண்டு வழக்கப்படி மருளாடிவந்து ஆவேசங்கொண்டு தம்மிடம் வந்தவர்கட்கெல்லாம் குறிகள் சொல்லியபின்னர், இவர்கள் சென்று கேள்விகேட்கும்பொழுது பூசாரி முகத்தைப்பார்த்துப்பார்த்து யாதுந் தெரிந்துகொள்ள முடியாமல் விழித்து முடிவில் மிக்க ஆர்ப்பாட்டத்தோடு நீங்கள் நினைத்திருப்பதைச் சொன்னால் உங்களால் ஆயிக்கு யென்ன செய்துவைக்கக் கூடுமென்று கேட்க, அதற்கவர்கள் இந்த அம்மன் கோவில்முன் மண்டபத்தில் அழகான கோபுரம் கட்டிவைக்கிறோமென்று கூற, அதன் பின்னர் யாதுஞ் சொல்ல முடியாது 'இப்பொழுது கருப்பு மலையேறிவிட்டது; அடுத்தவாரம் நீங்கள் வந்தால் சொல்லக் கூடுமென்று சொல்லிவிட அவ்வாறே அடுத்த வாரமும் சென்று கேட்கும்போது யாதுஞ்சொல்ல முடியாமல் அவமானமடைந்தது தான் அங்கு நிகழ்ந்த அற்புத சக்தியாயிருந்ததாம். இவ்வித மாகவே யெந்த பிடாரி கோயில்களிலும் மருளாடிகளிடமும் நிகழும் அற்புதக் காட்சிகளாம். இன்னும் இந்த ஜில்லாவில் கள்ளை முதலிய கிராமாந்தரங்களில் ஆடுகோழிகளை வெட்டிக் காவு கொடுப்பதன்றி 300 400 எருமைக் கன்றுகளையும் வெட்டி விருதாவாக குழியிலிட்டு மூடி முதல் வருஷம் மூடிய குழியை மூன்றும் வருஷந்திறந்து அதிலுள்ள அஸ்தியாதிகளை அப்புறப்படுத்திவிட்டு அவ்வருஷத்தில் வெட்டியவைகளை அதிலிட்டுப் புதைக்கின்றார்கள் மூன்றும் வருஷத்தில் திறந்த குழியினின்றும் வரும் துர் நாற்றத்தைப் பார்ப்பனர்களும் புஷ்பவாடையைக் குறித்து யாதுங்குறை சொல்லக் கூடாதென்கிறார்கள். இந்த ஜில்லாவில் எருமைக்கடா வெட்டுவதில் பெயர்போனது தொட்டியமா யிருப்பினும் இப்பொழுதங்கு சிறிது நல்லுணர்வுண்டாகி, பிரார்த்தனைக்காக கொண்டு வருங்கடாக்களில் சிறிது புஷ்டியாயிருப்பவைகளை வெட்டாமல் வலத்தில்விட்டு வந்த தொகையை தேவஸ்தானத்திற்கு வரவு வைத்துக்கொண்டு அவைகளை உழவு முதலியவைகட்கு உபயோகிக்கின்றார்கள். மிகவும் துர்ப்பலமா யிருக்கும் 4-5 கிடாக்களை மட்டும் மாமூல் தவறாமல் வெட்டுகின்றார்கள். ஆடுகோழிபன்றியாதிகளை வெட்டுவோர்கள் அதைப் புசித்தாகிலும் பூரிக்கிறார்கள் இவர்கள் அவைகளை வெட்டி மண்ணிற் புதைத்து மகிழ்வதும் என்ன ஆஸ்திகத்வமோ அறிகிலம், இத்தகைய சாதனங்கள் நம்மவர்கட்கு இகபரத்தும் இன்றியமையாதவைகள் தானா? இதைச் சட்ட பூர்வமாய்த் தடுத்துவிட்டால் அக்கிராம தேவதைகள் அறவே நாசமாய் விடுமா? அல்லது பொதுமக்களை அறவே நாசமாக்கிவிடுமென்று அஞ்சவேண்டியதுதானா? இங்ஙனம் பலியிடாத ஜாதி ஜனங்களை இத்தெய்வங்களென்ன செய்துவிட்டன? இதுவரையில் எந்த ஜாதி ஜனங்களாகிலும் பலி கொடுத்து முன்னேற்றமடைந்திருக்கிறார்களா? சுமார் 35 வருடங்கட்குமுன் குழுமியாயி குப்புரத்தள்ளப்பட்டு அதற்கு ஸ்தாபித்திருந்த யந்திரத்தைப் பலி கொடுத்து பயந்திருந்த தெய்வத்திற்கு, இப்பொழுது யெவ்விதமாய் அற்புத சக்தி அதிசயமாய் வந்துவிட்டதோ! இத்தகைய அநாகரீக பலியிடும் மூடபக்தி மேல் தேசங்களில்கிறிஸ்துவ மதமாதிகளிலிருந்தவைகள் அவர்களது முன்னேற்றத்தின் முட்டுக்கட்டையெனக்கண்டு அதனை அறவே யொழித்ததுபோல இங்கும் யெவ்விதபிரயாசையுமின்றி வேண்டுவன வனைத்தும் துஷ்டபேய்களுக்கு ஆடுகோழியாதிகளைபலி கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாமென்று கொண்டுள்ள மடமை யகல்வதற்கு, ஆடுமாடாதிகளைப் பகிரங்கமாக அறுக்காமல் ஆட்டுமாட்டுத் தொட்டி

களிலறுக்க வேண்டுமென்றுள்ள சட்டத்தை ஆதாரவாகக் கொண்டு இதையும் சட்ட பூர்வமாகவே தடுக்க ஜஸ்டிஸ் தலைவர்கள் முன்வர வேண்டுமென்றால் மதிய ஹோட்டல்களில் மறைவாக மாட்டிறைச்சி ஆட்டு மாமிசங்களைப் புசித்து தமது வருணாசிரமத்திற்கு விதித்துள்ள எந்த சிறப்பு தர்மத்தையுமியற்றாது நகத்திலழுக்குப்படாது பணம் சம்பாதிப்பதே பாமார்த்த தர்மமென்று அதிலேயே இரவும் பகலும் கண்ணுங் கருத்துமாயிருப்பவர்கள் அங்ஙனம் சட்டமானால் இந்து மதமே எமலோகமேகி விடுமென்று மாயக்கண்ணீர் மாலை மாலையாய்ச் சொரிகின்றார்களே. அங்ஙனம் அழிந்துபோகும் இந்த மதமென்பது என்ன தானென்று எத்தனையோ முறை யெழுதிக் கேட்டும் இந்தக்கனவான்களுக்கும் சம்பந்தமான இந்துமதம் இதுதானென்று சொல்ல முன்வருவாரொருவரையுங்காணோமே. நமது நாட்டில் பிரபலமாயுள்ள திரிமதஸ்தர்களில் சைவனோ விஷ்ணுவின் நீலமேகத் திருமேனி சண்டாளமேனியாதலின் அதை தெரிசிப்பது தோஷம்; அந்த திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியன் எமது சிவபிரான் என்று இயம்புவனவனே "யானை விரட்டினும் மான்கோவில் புகாதே" ஏனெனில் அரனிருக்குங் கோயில் சுடுகாடு; அந்த இடுகாட்டிற்குள் செல்லுமெவரும் தீட்டுப் பெற்றமையால் அதைப் போக்கும் நிமித்தம் எந்த இந்துவும ஸ்நானம் செய்து தீர வேண்டுமென்பது கடமைப்பாடாயிருப்பதால், அரன் கோயிலைக் கண்டாலும் விசிறியாதிகளால் முகத்தை மறைத்துக் கொண்டுதான் போக வேண்டுமென்கிறான். சங்கரர் மதத்தைச் சார்ந்தவனோ உலகத்துள்ள எல்லா மதஸ்தர்களும் கடவுளொருவரே யன்றி இரண்டில்லை; அதுவோ பார்க்குமிடமெங்குமொரு நீக்கமற நிறைந்து பரிபூரணமா யிருக்கிறதென்று கூறுகின்றமையால், ஒரேகல்லில் சிவ விஷ்ணுவாதிய அனேக ஆதேயமாகிய ஆகாரங்கள் அமைந்திருப்பினும் அவைகட்கு ஆதாரமாயிருப்பது ஒரே கல்லேயாவது போல ஏகபரமாத்ம சொரூபத்தில் பக்தர்களது விருப்பத்திற்கியைய அனேக மூர்த்தங்கள் கற்பிக்கப்பெற்று பக்தி செய்வனவெல்லாம் அந்த யேகபரமாத்மாவையே சார்கின்றனவென்று சொன்னான்; பிரசன்ன பௌத்தனும், மாயாவாதியாயும், ஏகான்மவாதியாயும், யாங்களே கடவுளென்றிடும் பாதகனுமுங்கள் நீபா யெங்களுக்குச் சமரசம் சொல்லக்கூடியவனோ, என்று எறிந்து விழுகின்றார்களே! இவர்கள் மதங்களில் எந்த மதந்தான் இந்துமதமெனக் கூறலாகும்? இந்துக்களெல்லோருக்கும் சொந்த மதமாயிருப்பது இந்த மதந்தானென எல்லா இந்துக்களும் ஏற்கும் வண்ணம் சித்தாந்தப் படுத்தியவர்கள் இன்னார்தானென யெவரேனும் சொல்ல முன்வருவார்களா? இந்த நிலைமையில் இம்மூடக்கொள்கைகளை இந்த காலத்திற்கேற்க சட்ட பூர்வமாகத்தான் தடுக்கவேண்டுமென்று சொன்னால் அங்ஙனம் செய்தால் யெங்கள் மதம் போய்விடும் மதம் போய் விடுமென்று ஓலமிடுவது இந்துமதத்தை யெஃகிஷ்டையாடுவதா? அல்லது சுயப் பிரயோஜனர்த்தம் பார்ப்பனரல்லாதாரை ஏமாற்றுவதா?

மாட்டுச் சாணத்தை புருட்டி மகா கணபதியாக்கிக்கொண்டு சால்டாங்கம் அஷ்டாங்க நமஸ்காரம் செய்துபிரார்த்தித்து அதனிடமாக அனேகவரங்களைப்பெறலாகு மென்னும் ஆஸ்திக வைதிக சைவசித்தாந்தப் பண்டிதர்காள்! அந்த மலத்தை தெய்வமாக்கிய மனிதன் பௌத்த முத்தியீரிடத்தும் பரதந்திரப் பசுவாகவே இருக்க வேண்டுமென்னும் பக்திநெறியில் நிற்போர்கள் இப்பொழுது எந்த சித்தாந்தத்தால் சுதந்தரர்களாய் அரசாளப் பார்க்கின்றீர்கள். பூனைக் குட்டியை பூனை பலவிடங்களில் வைத்துத் தூக்கி பந்தோபஸ்தான விடத்தில் வைப்பதுபோல தங்கள் பரிபக்குவத்திற்குத் தக்க பலனைக் கொடுக்கும் பரமசிவனை மறந்து நினைக்கவும் சுதந்தர சக்தியில்லாதவர்கள் சுயமரியாதையோடு வாழப் பார்ப்பதும் சைவ சித்தாந்த சம்மதந்தானா?

இதுகாறும் மதத்தின் பேரால் வருணாச்சிரம தர்மங்களை வகுத்துக் கொண்டு தாங்கள்தான் கல்விக்கர்த்தாக்கள் பார்ப்பனரல்லாதாராகிய நீங்கள் யெங்கள் யேவல் பணிவிடைக்காகவே இறைவனால் சிருஷ்டிக்கப் பட்டிருப்பதால் யெங்களது தர்மத்தை நீங்களேற்றால் சண்டாளர்களாய் அதோகதி யடைவீர்களென பார்ப்பனரல்லாதாரை படிக்கவிடாமலும் பாழ்படுத்திப் பார்ப்பனர்களே பல துறைகளிலும் மேற்பாடுபெற்று இந்திரபோக மனுபவித்துக்கொண்டிருப்பது மெவருக்குந்தெரியாமலாவிருக்கின்றது. தெய்வ கதியாகவந்த ஆங்கில அரசாக்ஷியில் பார்ப்பனரல்லாதாருக்குச் சிறிது கிடைத்த கல்வியினால் இவர்களோடு சமானமாயிருந்து வேலை பார்க்கவந்தால் யெவ்வளவோ அருவருத்துப் பொறாமை கொண்டு அவர்களை யகற்றும் வழியையே தேடிக்கொண்டிருக்கின்றார்கள். போதாக்குறைக்கு ஏழைபஞ்சியாதிகள் நடமாடுந் தெருக்களிலும் ஆதித்திராவிட மக்களை நடமாடாதிருக்கவும் சட்ட பூர்வமாய் உத்திரவும் பெற்றுக் கொண்டார்களே! அதோடு தமது வருணாச்சிரம தர்மங்களைப் பலப்படுத்த நூதன சங்கங்களேற்படுத்திக் கொண்டு அந்த வருணாச்சிரம தர்மங்கட்குக் கட்டுப்படாத பார்ப்பனர்களை ஜாதிப் பிரஷ்டம் செய்வதாக பயமுறுத்திக் கொண்டிருக்கும் புண்ணியோத்தமர்கள்தானா சுயராஜ்ஜியம் பெற்று எல்லோரையும் சமமாய் வைத்து ஆதரிக்கப் போகின்றார்கள். வகுப்புவாரி பிரதிநிதித்வங் கிடைக்கும்படி செய்த வள்ளலுக்கு நாம் எத்தனையோ கோடி வந்தனஞ் செய்ய வேண்டியதிருக்க அது வேண்டியதில்லையென்று வாக்கு வல்லபம் பேச எந்த விதத்தில் பண்டிதர்களுக்கு மனோதிடமேற்பட்டதோ! 1-3 மணிக்கு தங்களுக்குச் சுயராச்சியங் கிடைத்தாலும் பலஜாதி மக்கள் மலிந்துள்ள இத்தென் இந்தியாவில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கிடைத்தால் யெவ்வித கஷ்டமேற்பட்டுவிடுமென்று எதிர்கால சம்பவத்தை எந்த திவ்ய திருஷ்டியால் தெரிந்து கொண்டார்களோ? ஜீவகாருண்ய விரதசீல பார்ப்பனர்களே! வைதீக சைவ சித்தாந்த பண்டித சிகாமணிகளே! இனியாகிலும் இப்பலியை சட்ட பூர்வகமாய்த் தடுக்க முன் வருவீர்களாக.

---


ஒரே மணி நேரத்தில்

ஆச்சரிய குணமுண்டு

## மன்மத ஸ்தம்பன குளிகை.

இந்த குளிகையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப் போன்ற பலமும், முக தேஜஸும் அழகும், தைரியமும் உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தும். ஒரு குளிகையை அருந்தி மணவாழ்க்கையில் புகுந்தால் நீடித்த இன்பம் உண்டாகும்.

டப்பி 1 ரூபாய் 2—0—0

ஸ்ரீதனம் அண்டு கம்பெனி,

(3) தபால்பெட்டி 119, மதராஸ்


## தேவை

கீழ்காணும் உத்தியோகங்களுக்கு 10-10-29ம் தேதிக்குள்ளாக கோயமுத்தூர் மதுவிலக்கு பிரசாரக் கமிட்டியின் சேர்மன் அவர்களுக்கு விண்ணப்பஞ் செய்து கொள்ளலாம்

1. செகரிடெரி - ரூ. 60-5-75

குறிப்பு:—விண்ணப்பதாரி கோயமுத்தூர் ஜில்லா வாசியாயும் ஆங்கில பாஷை நன்றாய் எழுதப் படிக்கவும் பேச சக்தி உள்ளவராயும் தமிழ் கன்னடம் முதலிய பாஷைகளில் நன்றாய் பழக்கமுள்ளவராயும் உத்தியோகம் கிடைக்கும் பட்சத்தில் கோயமுத்தூரிலேயே வசிப்பவராயுமிருக்க வேண்டும்.

2. பிரசாரகர்கள் - ரூ 40-15

நிலையான பிரயாண வர்த்தனை

குறிப்பு:—விண்ணப்பதாரி தமிழ் கன்னடம் முதலிய பாஷைகளில் நன்றாய் பழக்கமுடையவராயும் சுறுசுறுப்புந் தெளிவாய் மனதிற்கு படும்படியாகப் பேசுபவராயும் மீட்டிங்குகள், சிறு கூட்டங்கள், அசோசியேஷன்கள் முதலியவை ஏற்படுத்தவும் படக் காட்சி (மாஜிக் லாண்டர்ன்) கொண்டு நன்றாய் விளக்கச் சொல்லும் சக்தி உடையவராகவும் இருக்கவேண்டும்.

(மேலே சொன்ன உத்தியோகங்களுக்கு ஊக்கமாய் வேலை செய்பவர்களாய் இருக்க வேண்டும்)

கோயமுத்தூர் சேர்மன்

29-9 29 கோயமுத்தூர் மதுவிலக்கு பிரசாரக் கமிட்டி

---


## கைத்தொழில் முறைகள்

திருத்தப்பட்ட இரண்டாம் பதிப்பு

மாதம் 100 ரூபாய் முதல் 500 ரூபாய் வரை சம்பாதிக்கத்தக்க அரிய போதனைக ளடங்கியது.

முதற்பதிப்பு வெளியான மூன்று மாதத்திலேயே செலவழிந்து விட்டது. ஆயிரத்துக்கு மேற்கொண்ட இரகசிய முறைகளடங்கியது. கூந்தல் தைலங்கள், பாணவேடிக்கை மருந்துகள், இங்கி முறைகள், சோப்புகள், நாற்கால் பிராணிகளுக்குள்ள சிகிச்சைகள், ஜான் டானிக் பஸ்பங்கள், விஷக்கடிகளுக்குச் சிகிச்சை, வார்னிஷ்கள், பென்சில்கள், தீக்குச்சிகள், மெழுகுவர்த்திகள் இன்னும் பலவிதமுறைகளுடனும், இப்பதிப்பில் புதிதாக அதிர்ஷ்ட நாட்கள், வாரங்கள், மாதங்கள், வருடங்கள், மேல்நாட்டுச் சகுனங்கள், வீடுகட்டு முறையும் விரிவாய் குறிப்பிட்டிருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டமுள்ள இக்காலத்தில் ஒவ்வொரு இந்திய மக்களிடமும் இந்நூல் இருக்கவேண்டிய தவசியம். 300 பக்கங்கொண்ட ஏரோப்ளேன் டிரேட் மார்க் உள்ளது, தனிப்பிரதி ரூபா 1—8—0 தான். தபால்செலவு அணா 5. உள்நாட்டிலிருந்து ஒரே தடவையில் 2 பிரதிகளுக்கு ஆர்டர் செய்வோருக்கு தபால் செலவு இனாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| இல்வாழ்க்கையின் இரகசியங்கள் | ரூ. | 2 | 0 | 0 |
| கர்ப்பாட்சி அல்லது சுவாதீன கர்ப்பம் | | 0 | 8 | 0 |
| ஸ்ரீவீராசகவர், கனகவல்லியின் மணக்கோலம் | | 0 | 8 | 0 |
| மாயாமேயோ அல்லது மேயோவுக்கு சவுக்கடி | | 2 | 0 | 0 |
| முத்துமாமா 4-ம் பதிப்பு | | 0 | 4 | 0 |
| விகடவிநோத கொத்துகள் | | 0 | 10 | 0 |
| காலத்தின் கோலம் | | 0 | 4 | 0 |
| ஆனந்தவிகடன் அநுபந்தம் | | 0 | 4 | 0 |

வில்லிபாரத வசனம் அல்லது மகாபாரத வசன சங்கிரகம் 750 பக்கங்கள் கிளேஸ் காகிதத்தில் அச்சடிக்கப்பட்டு கண்ணைக் கவரத்தக்க ஆப்டோன் படங்கள் கலிகோ பயிண்டுடன் கூடியது. இதன் விலை ரூ. 3 0 0.

வாஸன் புஸ்தகசாலை, 244 தங்கசாலைவீதி, மதராஸ்.

(4-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஆராய்வான். ஆனல் இவைகளுள்ளும் அதரத்தைத் தேன் ததும்புவதென்றும்; வாய் அமுதத்தினும் தேனினும் இனிய இரசமுடையதென்றும் கூறுகின்ருர். இவைகளை நுகர்ந்தாலன்றி அறிவதெங்ஙனம்? இவைகளை ஆராயும்படி அனுமானிடம் இராமன் சொல்லியதாகக் கூறும் கம்பருடைய நோக்கம் யாதாமோ?

மேலும் கண்ணுக்குத் தெரியாமல் ஆடையுள் மறைந்திருக்கும் உறுப்புக்களாகிய தொடை, பெண் குறி, இடை, வயிறு, நாபி, நாபிக்கு மேல் வயிற்றிலுள்ள மயிரொழுக்கு, வயிற்றிரேகை, கொங்கைகள் இவைகளையெல்லாம்விவரித்து அனுமானை ஆராய்ந்தறியுமாறு இராமன் கூறினதாகக் கம்பர் கூறுகிருர். இவைகளை ஆராய்வது எங்ஙனம்? விலைமாதும் இவ்வாறு ஆராய்வதற்கு இடங்கொடுக்க மாட்டாளே! அவ்வாருக உலகமாதாவாகிய சீதாப் பிராட்டியாரின் இவ்வங்கங்களைச் சின்னத் திருவடியாகிய அனுமான் ஆராயுமாறு உலக நாயகனுகிய திருமாலில் தோற்றமான இராமபிரான் வேண்டிக் கொண்டனனென்று கம்பநாட்டாழ்வார் கூறுவது வியப்பாகவே உள்ளது! சீதையின் பெண் குறியைப் பற்றிக் கம்பர்.

"வாராழிக் கலசக் கொங்கை
வஞ்சிபோல் மருங்குலாள் ன்
தாராழிக் கலைசார் அல்குல் தடங்
கடற்கு உவமை தக்கோய்!
பாராழி பிடரில் தங்கும் பாந்தளும்
பனிவென்ருேங்கும்
ஓராழித் தேரும் கண்ட உனக்கு
நான் உரைப்பதென்னே?"
(நாட விட்ட படலம் பாடல் 37ல்)

என இராமன் வாக்கால் கூறினுர். இதில் அவர் தாம் விரும்பி அடிக்கடி கூறும் கொங்கையினையும் மறந்தாரல்லர். இதை அவர் இம் மூப்பத்தினுங்கு பாடல்களுள் நான்கு இடங்களில் கூறுகிருர். இடையின் தன்மை கூறும்போது 'கையில் தொட்ட எற்குணரலாம்' என்று இராமன் கூறியதாகக் கூறுகிருர்.

சீதை திருமகளினும்அழகி என்று கூறுமிடத்தும் அவளுடைய சொல்லை விவரிக்குமிடத்தும் புகழ்ந்து மகிழ்ந்த அவளுடைய கொங்கையைப் பற்றிக் கம்பர்

(நாடவிட்டபடலம் 43)

"செப்பென்பன் கலசம் என்பன்
செவ் இளநீரும் தேர்வன்
துப்பொன்று திரள்சூதென்பன்
சொல்லுவன் தும்பிக் கொம்பை
தப்பின்றிப் பகலின் வந்த சக்கர
வாகம் என்பன்
ஒப்பொன்றும் உலகில் காணேன்
பலநினைந்து உலைவன் இன்னும்"

என இராமன் வாக்கால் கூறி தமது உண்மைஇயல்பு வெளிப்படுகின்ருர். "உலகில் ஒப்பொன்றும் காணுது இன்னும் பல நினைந்து உலைவேன" என்று கம்பர் கூறுகின்ருர்.

"மேலே விவரித்தபடி அங்கங்களையெல்லாம் ஆராய்ந்து சீதை இவளே என அறிந்து அவளிடம் இன்னின்ன செய்திகளைக் கூற வேண்டும்" என இராமன்அனுமானை நோக்கிக் கூறியதாக ஆறு பாடல்கள் கம்பர் பாடுகிருர். அவற்றுள் ஒன்றில் (நாடவிட்ட படலம் 68ல்)கூட "மூலைக்கிரிசுமந்த இளங்கொடி" எனச் சீதையைப் புகழ்ந்து ஒப்புவமைஆராய்கிருர். இவைகளையெல்லாம் அறிஞர் ஆராய்ந்து சிந்தித்துக் கம்ப நாட்டாழ்வாரது திருவுளப் பாங்கைக் கணித்தறிய வேண்டுகின்ருேம்!! இனிமேற் செல்லுதும்.


## ஆனந்தபோதினி

இனிய தமிழில் வெளிவரும் மாதப் பத்திரிகை; தமிழ் நாட்டில் வெளிவரும் மாதச் சஞ்சிகைகளில் முதன்மை பெற்றது; 40,000சந்தாதாரர்களையுடையது; கல்வியிற் சிறந்தோர் பலரால் எழுதப்பட்டு வரும் உயர்ந்த வியாசங்களைக் கொண்டு வெளிவருவது; எம்மதத்தார்க்கும் சம்மதமான பொது நன்மைகளைப் போதிப்பது; 64-பக்கங்கொண்டது; முகப்பு ஆப்டோன் படத்துடனும், வயன் பிளாக்குகளுடனும் மாதந்தோறும் குறித்த தேதி தவருமல் வெளியாகிப் பலர்க்கும் ஆனந்தத்தை யூட்டி வருவது; மிகக் குறைந்த சந்தாத் தொகையுள்ளது.

மாதிரி காபி இனும்.

வருட சந்தா தபால்கூலி யுள்பட
உள்நாடுகளுக்கு ரூபா 1—0—0
வெளிநாடுகளுக்கு ,, 1—4—0

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.
(5)


வேற்றுமை விருக்ஷம்
வேரோடு வீழ்க!


அதி நூதனம்! மிக ஆச்சரியம்!!

மாதம் 100 ரூபா முதல்
500 ரூபா வரை
சம்பாதிக்கக்கூடிய

## சிறிய சைஸ் தையல் இயந்திரம்



இது சாதாரண மெஷின்களைப் போலவே மேஜையின் பேரில் முடுக்கி, தையல் வேலை செய்பவர்களும், பெண்களும், குழந்தைகளும், எல்லா தையல் வேலையும், சட்டைகள், கோட்டுகள், துணிகள் முதலியவைகளைத் தைக்கலாம் இதைச்சேர்ந்த சாமான்களுடன் இதற்குரிய பெட்டியில் பாக்கிங் செய்தனுப்பப்படும்.

5 வருட காரண்டியுள்ளது.
விலை ரு. 3—14—0.

பினங், சிங்கப்பூர் முதலிய மலாய் நாடுகளுக்கு பாக்கிங் ரூ. 5—4—0. உள்பட முன் பணம் அனுப்பவேண்டும்.

லக்ஷ்மி டிரேட்ஸ் கம்பெனி,
தங்கசாலை, மதராஸ்.



ஏழு தலைமுறை பாரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழனி சித்தவைத்திய சங்க அமைச்சர்!! தமிழ் சித்த வைத்திய கான்பரன்ஸ்களில் முதல்தர தேவ ஔஷதங்களென முதல்தர தங்கமெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர் !!! மூப்பு சேர்ந்த மருந்துகள்.

நீங்கள் என்று மழியாத இளமைப்பருவந்த அடையவேண்டுமானல் பழனி சி. எம். சாமி

மகா வீரிய **தங்க பஸ்பம்** சாப்பிடுங்கள்

தாதுபுஷ்டியில் மன்மதனுக்கோப்பாவீர்கள். பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

தாது புஷ்டியில் நிகரற்றது. மகான் அருளால் கிடைக்கப்பட்டது. வெள்ளை, வெட்டை, கடுப்பு, பவுத்திரம், மூலம், நீரழிவு, க்ஷயம், இருமல், கபக்கட்டு, குன்மம், சூலை முதலிய வியாதிகளும் நீங்கும். அழிந்துபோன ஆண்மையையும் இழந்த பலத்தையும் இல்லற வாழ்வில் இன்பத்தையும் கொடுத்து, வசீகரத்தையும் உற்சாகத்தையும் தந்து தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வயோதிகனை வாலிபனுக்கி சதா பரமானந்தத்தைக் கொடுக்கக்கூடிய அபூர்வ சக்தி இதற்கிருப்பதால் இதன் அரிய குணத்தைக் கண்டு ஆச்சரியப்படாதவர்கள் ஒருவருமில்லை. ஒரு முறை உபயோகித்தால் உண்மை விளங்கும்.

48 நாள் பஸ்பம் ரூபா 20—0—0. 24 நாள் பஸ்பம் ரூபா 10—0—0.

### குரு அப்ரேக் செந்தூரம்-நீரழிவுக்கு.

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேக வெளுப்பை மாற்றி ரத்த விர்த்தியையும், தேக புஷ்டியையும் தரும். சகல மேகமும் க்ஷய ரோகமும் நீங்கும். தளுக்கற்றது. 24 நாள் புட்டி 1-க்கு ரூ.15.

### குருதாளக பஸ்பம்-இருமலுக்கு

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி, 8-வித காசமும் அவசியம் தீரும். அனுபவத்தில் கைகண்டது. 24 நாள் புட்டி 1-க்கு ரூ. 8.

ஏராளமான நற்சாட்சிகளைக் கேட்லாக்கில் பார்க்கலாம்.

அந்நிய தேச வாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மகுடியப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழநி, S. I.

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ழுப்பாளிகளாகவே யிருக்கவேண்டும். வித்வப்பெரியார்களென்றால் அறிவில் உயர்ந்தவர்களென்பதல்லவா பொருள். ஆகமப் பார்ப்பான் எழுதும் புத்தகங்களில் சுமார்த்தப் பார்ப்பார்களை சூத்திரனிலும்கடையனாக ஒதுக்கிவிட்டேன் என்று எழுதுவதும், சுமார்த்தப்பார்ப்பான் எழுதும் புத்தகங்களில் ஆகமப்பார்ப்பானை சூத்திரனாக்கி விட்டோமென்றெழுதுவதும், அந்த சூத்திரன் யார் என்றால் நமது நாட்டு மக்களும் நம் வித்வப் பெரியவர்களுமாம். பிர்மா நான்கு முகத்திலிருந்து சுமார்த்தப் பார்ப்பானுக்கு உபதேசித்த வேத சுருதியும், சிவபெருமான் பஞ்சமுகத்தின் ஊர்த்துவ முகத்திலிருந்து உபதேசித்த வேத ஆகமமும் இவைதானா உபதேசித்தது? இதுதானா வேதம்? அனாதி நித்தியமென்று சொல்லுவதற்குப் பிரமாணம் இதைத்தான் எங்கள் பண்டிதர்களை ஆலோசித்துப் பார்க்கும்படியாகக் கேட்கிறோம் நாங்கள் கேட்பதில் எந்த விதமான நியாயமாவது இருக்கிறதா என்பதை சனசமூகம் கவனித்துப் பார்க்கட்டும்.

உலகத்தில் 3065 பாஷைகளும், 1008 மதங்களுமிருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். இதில் எந்தமதத்தையாவது சுயமரியாதைச் சங்கம் ஆட்சேபிக்க வந்ததன்று. வடமொழி தென்மொழி இரண்டு பாஷையே கடவுளுக்கு இரு கண்களா என்பதை பண்டிதர்கள் போல் ஆராய்ச்சி செய்யவந்தவர்களுமன்று. கடவுளைப் பல்லோர் பல பெயரிட்டழைத்தாலும் உற்றுப் பார்ப்பவருக்கு இப்பெயர்களெல்லாம் அந்த ஒரே தெய்வத்தின் பெயர் ஆகாதென்றோ? எங்கள் தெய்வமே முழுத்தெய்வமென்றும் மற்றவர்கள் தெய்வங்கள் கால், அரை முக்கால் தெய்வங்களென்றும் வாதித்து அதற்கு இலக்கணமெழுத நாங்கள் வந்தவர்களுமல்ல. அத்தெய்வத்தால் படைக்கப் பட்ட மானிடர் யாவரும் சாதிபேதம் சமயத்தில் கீழ் மேல் வித்தியாசமற்றுச் சகலரும் சகோதர வாஞ்சையுடன் சமரசமாய் வாழ வேண்டுமென்று பெரிய மதங்களெல்லாம் கோஷிக்கிறது போலவே இந்து மதமும் கோஷிக்கிறது. அப்படியல்லாத இந்து மதமெல்லாம் அழிந்து போக வேண்டுமென்றே சொல்லுகிறோம்.

'வேதம்' என்றபெயருடன் விளங்கும் நூற்றிரட்டு யாதொரு புருஷராலும் செய்யப்பட்டதன்று. ஆகவே அபௌருஷேயம் என்ற பெயர் அதற்குண்டாயிருக்கிறது; அதன் கால நிர்ணயம் இதுகாறும் ஏற்படவில்லை. வேதம் நித்தியமென்பதே கொள்கை. அது நித்தியமான பிரம ஞான ஸ்வரூபமானதால்தனக்குத்தானே பிரமாணமாயுள்ளதென்றும் அது எப்போதும் எழுதப்பட்டதன்று; சொல்லப்பட்டதன்று; சிருஷ்டிக்கப்பட்டதன்று; எக்காலமும் இருந்துகொண்டேயிருக்கிறது; எப்படி சிருஷ்டியானது, அடிமுடியற்று அனாதி நித்தியமாய் விளங்குகின்றதோ அப்படியே பிரமஞானமும் அனாதி நித்தியமாகவிருக்கிறது. இத்தகைய பிரமஞானத்திற்குத்தான் வேதமென்று பெயர். வேதமென்னும் ஞானத்திரட்டு ரிஷிகளென்ற சில புருஷர்களால் காணப்பட்ட உண்மைகளாம். ரிஷியென்றால் கருத்தைக் கண்டறிவோனென்பது பொருள் எற்கனவே உலகத்தில் நித்தியமாகவிருந்த உண்மையை அவர் கண்டறிந்தாரென்பதே அதன் பொருள். இப்படிக்கண்டறிந்ததொகுதிகளே வேதம் என்று நமது நாட்டில்கீர்த்திபெற்றதத்துவ ஆராய்ச்சிப் பெரியவர்கள் சொல்லுகிறார்கள். இதுவேதர்க்கத்திற்குநிற்கக் கூடியதுமாகும். இதையே சுவாமி விவேகானந்தரும் 1008 மதப்பிரிவையுடைய சபைத்தலைவர்கள் அமெரிக்கா நாட்டில் நிறைந்த சபையில் சொல்லி இந்துமதத்திற்கு ஒரு சிறப்பையும் உண்டு பண்ணினார். பிர்மாவின் முகத்திலிருந்து வேதம் பார்ப்பானுக்குக் கொடுக்கப்பட்டதென்றும் சிவபெருமானின் திருச்செவியிலிருந்து சிவத்வஜான் கேட்டதென்றும் சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் சொல்லியிருப்பாரானால் அந்நாட்டார் அதே கப்பலில் சுவாமிகளை நமது வித்வப் பெரியவர்களிடம் ஆராய்ச்சி பண்ணிக்கொண்டிருக்க அனுப்பியிருப்பார்கள். எற்கனவே உலகத்தில் நித்தியமாக விருக்கும் ஞான உண்மைகளை ஜாதி, பாஷை, நாடு இதிலுள்ள யாரேனும் கண்டிருக்கப்படாதோ?

பிர்மா நான்கு முகத்திலிருந்தநாலு வேதங்களை உண்டுபண்ணி பிராமணன் கையில் வைத்துக்காப்பாற்றச் சொன்னதாக சொல்லப்படுகிறது. வேதத்திற்கு விஷ்ணுவே கர்த்தாவென்றும் சொல்லப்படுகிறது. உலகத்தைப் பெறுகிறவன் சூரியனானபடியால் அவனே பரமேச்சுவரன் எனப்படுவான். ஆனதால் சூரியனே வேதத்தின் அதிகாரி யென்றும் சொல்லப்படுகிறது. இந்திரனே யென்றும் கேட்கிறோம். சிவனுக்கு ஐந்து முகங்களென்றதில் ஊர்த்துவ முகத்தால் வேத ஆகமங்கள் வந்ததென்றும் மற்ற நாலு முகங்களில் வேத சுருதிகள் வந்ததென்றும் சொல்லுகிறார்கள். இத்தனைக்கும் இந்தமத சாஸ்திரங்களே பிரமாணம். இதற்கு மத்தியில் சடைமுடியோடு பலவித ஆபரணங்களையணிந்து ஒரு கையில் அக்கினிச்சட்டியும், ஒரு கையில் உடுக்கையும், சிம்மவாகனமும், ஒரு ராக்ஷதனைக் காலில் மிதித்துக்கொண்டு சிவன் தக்ஷிணாமூர்த்தியாய் வந்து ஆலமரத்திற்கு அடியில் நால்வருக்கு நான்மறை உபதேசம் செய்ததில் வித்வப் பெரியவர்கள் தர்க்கம் வந்திருக்கிறது. இதற்கு முன் பலவித மாதிரியாக வந்த நான்மறையிலிருக்கும் பாகங்களுக்கெல்லாம் வித்வப் பெரியார்களின் அபிப்பிராயம் முடிந்துவிட்டதுபோதும். இதையும் இதன் தொடர்ச்சியையும் வித்வப் பெரியார்கள் படிக்காவிட்டாலும் இதைப் படிப்பவர்கள் அவர்களுக்குப் படித்துக் காட்டுங்கள். (தொடரும்)

இதுவரையில் வெளிவராத தமிழ் புஸ்தகம்
"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப் பயிற்சிமுறையும்"

விலை ரூபா 1—8—0
(தபால் சார்ஜ் வேறு)
(1916-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது)
அன்னிய நாட்டார் முன் பணம் அனுப்பவேண்டும். தவிர, 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிஸம் கற்றுக் கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக் கொடுக்கப்படும்.
தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,
(11) மைலாப்பூர், சென்னை.

குடி அரசு புத்தகாலயம்
வேதப்புரட்டை வெளியாக்கும்
ஞானசூரியன் 2-ம் பதிப்பு ... 0—8—0
இராமாயணத்தின் ஆபாசம் பாலகாண்டம் 0—4—0
சுயமரியாதைப் பாடல்கள். ... 0—2—0
இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. ... 0—2—0
சுயமரியாதைத் தாலாட்டு ... 0—2—0
சோதிடப்புரட்டு ... 0—2—0
சாமிகளின் அடிமைகள் ... 0-12—0
8 அணாவுக்கு குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. 5 ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணமனுப்பவேண்டும்.
விலாசம்:—
மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
(எப்) 14, மவுண்ட்ரோட், மதராஸ்

நான் யார் தெரியுமா?
ஒரு வருஷத்திற்குள் 8000 பிள்ளைகளைப் பெற்றவன் நான்!

என்னைப்பற்றி எந்த ஊரிலே வேண்டுமானாலும் கேளுங்கள். எங்கப்பன் மாதா மாதம் வந்து எங்களைக் குதூகலப்படுத்தி விட்டுப் போகிறானென்று பெருமையோடு சொல்லிக் கொள்வார்கள். தினசரி முப்பது அல்லது நாற்பது புதிய பிள்ளைகளைப் பெற்று வருகிறேன். இன்னும் சலிக்காமல் இருக்கிறேன். குறைந்த பட்சம் 30,000 பிள்ளைகளையாவது பெற வேண்டுமென்பது நோக்கம். ஆனால், அப்பனைப் பார்க்கவேண்டுமானால் காசு கொடுத்துத்தான் பார்க்கவேண்டும். வருஷா வருஷம் 1 ரூபாய் கொடுத்தால் என்னை வருஷத்திற்குப் பன்னிரண்டு முறை பார்க்கலாம். ஒரு தடவை மாதிரியாகப் பார்க்கவேண்டுமானால் அரையணா செலவு செய்து ஒரு கார்டு எழுதுங்கள். மறுநாளே உங்கள் இருப்பிடம் தேடி வந்து குதித்திடுவேன். என் பெயர் [illegible] படத்தில் பாருங்கள். என் இருப்பிடம்,
(3) 244, தங்கசாலை வீதி, சென்னை.

சாதிப் பிரிவினில் தீ மூட்டுவோம்

ஜனங்களுக்குச் சந்தோஷத்தைத் தரும்

## ஜனோபகாரி தைலம்.

இத்தைலமானது 27 வகை வன மூலிகைகளால் செய்யப்பட்டது. அநேக நற்சாட்சிகள் பெற்றது.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"
நல்ல குளிர்ந்த வாசனையுள்ள தைலம்.

இத்தைலத்தால் தீரும் வியாதிகள்:—தீராத தலைக்கனம், ஓயாத மண்டையிடி, ஒருதலைக்குத்து, தலையரிப்பு, முடிகழிதல் இவைகளை நீக்கிக் கூந்தலை வளரச்செய்யும் காதிரைச்சல், காதடைப்பு, குத்தல், கண்வலி, எரிவு, கூச்சம், நீர்வடிதல், சிகப்பு விழுதல், நாசியிலிருந்து மஞ்சள்நிறத் தண்ணீர் வடிதல், ஓயாத் தும்மல், சிராபோல் விழுதல், வாய்க்கசப்பு, புளிம்பு, தூக்கந்த மடித்தல் முதலிய வியாதிகள்நீங்கி தேகத்திற்குச்சுகம்உண்டாகும். கண்டத்துக்குமேல் ஏற்படக்கூடிய 96 வியாதிகளும் தீரும்.

பெரிய டின் ரூ. 1—12—0 } தபால் சார்ஜ் வேறு.
சிறிய டின் ரூ. 1—0—0 }

## பார்ச வாய்வு மருந்து.

விதை வாய்வு, நரம்புத்தடிப்பு, வலி, வீக்கம் முதலிய விதை சம்மந்தமான சகல வியாதிகளுக்கும் இந்த மருந்தை உபயோகியுங்கள். பத்தியம் கிடையாது. பெண்கள் அண்டவாய்வுக்கும் உபயோகிக்கலாம்.

14 வேளை மருந்து ரூபா 1—0—0. தபால் சார்ஜ் வேறு.

சிங்கப்பூர், பினாங்கு முதலிய வெளிநாட்டு நேயர்கள் வி. பி. செலவு சேர்த்து முன்பணம் அனுப்பவேண்டும். நீங்கள் கடிதம் எழுதும்போது தெளிவாய் அச்செழுத்தைப்போல இங்கிலீஷிலோ, தமிழிலோ எழுதவேண்டும். சோல் ஏஜண்டுகள் தேவை விவரம் நேரில் எழுதி தெரிந்துகொள்ளவும்.

உ. கா. நாகூர்மீரா அன் பிரதர்,
7-வது தெரு, ஏர்வாடி போஸ்டு,
திருநெல்வேலி ஜில்லா (தென்னிந்தியா.)

(41)

## நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

(1919-ல் பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டது)

சேர்மன்:—

### சர்: டோராப் ஜே. டாட்டா Kt.

மூலதனம்:

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் | ... ரூ. | 6,00,00,000. |
| பதிவு செய்யப்பெற்ற ,, | ... ரூ. | 3,56,05,275. |
| வசூலான ,, | ... ரூ. | 71,21,055. |

இதைப்பற்றி 1929 ஜூன் மாதம் வெளிவந்த "இந்தியன் இன்ஷியூரன்ஸ்" பத்திரிகை பின் வருமாறு கூறுகிறது: "நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி இந்தியாவிலே மிகவும் பெரிய ஜெனரல் இன்ஷியூரன்ஸ் கம்பெனியென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மூலதனத்தைக் கவனித்தால் அது உலகத்திலுள்ள பெரிய இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளில் ஒன்றென்று கூறிக்கொள்ள அதற்கு உரிமையுண்டு."

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் உயிர், நெருப்பு, மேரைன், மோட்டார்கார், விபத்து முதலிய பலவித அஷ்யூரன்ஸ்களுக்கும் ஏஜென்சிகள் கிடைக்கும்.

பிராஞ்சு மானேஜர்,
4, முதல் லேன்பீச், சென்னை.

(28)

பார்க்கப் பவுன் மோதிரம் தோற்கும்படியான
ஜ்வலிப்புள்ள அற்புத

## எலெக்டிரிக் மோதிரம்

அமெரிக்கா தேசத்தில் ஓர் மின்சார நிபுணரால் இப்பொழுது நூதனமாய்க் கண்டு பிடிக்கப்பெற்றது !



இம்மோதிரத்தை பாலர் முதல் விருத்தர்வரை ஆண் பெண் இருதரத்தார்களும் உபயோகப்படுத்தலாம். இம்மோதிரத்திற்குள்ளிருக்கும் எலக்டிரிக் பவர் குறையாமல் எக்காலமும் நீடித்திருக்கும். தாங்கள் நோய்வராமல் தடுத்துக் கொள்வதற்கும், இருக்கும் நோயை குணப்படுத்திக் கொள்வதற்கும் இம்மோதிரத்தை உபயோகியுங்கள் !

இம்மோதிரமானது 8-வித லோகங்களைக் கொண்டு வெகு அழகாகவும், பார்வையாகவும் செய்யப்பெற்றிருக்கின்றது. இதை விரலில் போட்ட மாத்திரத்தில் அதினின்றும் எலெக்டிரிக் பவர் மின்சார சக்தி வெளியாகி விரல் மூலம் அது தேகமெங்கும் பரவி பலத்தைக் கொடுப்பதோடு காய்ச்சல், வாந்திபேதி, தொத்து வியாதிகள், வைசூரி, இன்புளூவன்சா, க்ஷயம், குஷ்டம், பிளேக், தலைவலி, அஜீர்ணம், மூலம், அன்னத்துவேஷம், மலச்சிக்கல், வாதம் சூலை வெட்டை முதலிய ஸ்திரீ கொரோமான வியாதிகள் எதுவுமே அணுகாது. நற்சாட்சிப் பத்திரங்கள் பிரதிதினமும் வந்துகொண்டிருக்கின்றன.

மோதிரம் 1-க்கு விலை ரூபா 1 8 0
மோதிரம் 3-க்கு விலை ரூபா 3 12 0

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
தபால் பெட்டி 119, மதராஸ்.

(3)

ரூ. 2-15-0  ரூ. 2-15-0

## பௌண்டன் பேனா

நீங்கள் கனவிலும் நினைக்கமுடியாத குறைந்த விலை!

இங்கிலாந்தில் செய்து மாட்சிமை தங்கிய 5-ம் ஜார்ஜ் சக்கரவர்த்தியால் புகழ்ப்பெற்றுப் பிரக்யாதியடைந்த ரிஜிஸ்டர்டு W. B. பவுண்டன் பேனா, தங்கப்ளேட் நிப்பு போட்டது. இதை வாங்குபவர்களுக்கு எக்காலமும் ஓடக்கூடிய மூன்று வருஷம் உத்தரவாதமுள்ள லீவர் பாக்கெட் வாட்சு இனமாய் அனுப்பப்படும். சென்னை இராஜதானியில் இந்தப் பவுண்டன் பேனாவைப் பிரபலப்படுத்துவதற்காக லீவர் பாக்கெட் வாட்சுகளை ஏராளமாகத் தருவித்து ஒவ்வொருவருக்கும் இனமாக அனுப்பிக்கொண்டு வருகிறோம். ஸ்கூல் உபாத்தியாயர்கள், வக்கீல்கள், வக்கீல் குமாஸ்தாக்கள், இன்னும் ஏனைய உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் எழுதப்பேனாவும், மணி பார்க்கக் கடியாரமும் இந்த சொற்ப விலையில் கிடைக்கிறது ஆச்சரியமல்லவா?



W. B. பவுண்டன் பென் விலை ரூ. 2-15-0. இதற்கு மேற்சொல்லிய பாக்கெட் வாட்சு இனம். ஒரே காலத்தில் இரண்டு பேனாக்களுக்கு ஆர்டர் கொடுத்தால், பாக்கெட் வாட்சுக்குப் பதிலாக ரோல்டு கோல்டு ரிஸ்டு வாட்சு எந்த ஷேப் வேண்டுமோ இனம்.

முக்கிய குறிப்பு:—எங்களிடமிருந்து $\frac{1}{2}$ டஜன், $\frac{1}{4}$ டஜன் இப்படிப் பவுண்டன் பேனாக்களைத் தருவித்துப் பிறகு, பேனாக்களையும், கடியாரங்களையும் தனித்தனியாக அதிக விலைக்கு விற்று லாபம் சம்பாதிக்கவும் வழியுள்ள இத்தருணத்தைக் கைவிடாதீர்கள்.

(30) The Laxmi Trades Co., Sowcarpet, Madras.

## Beauty For Ladies!
## பெண்களுக்கு

அழகான புடவை! உயர்ந்த மல்லில் பச்சை, புளூ, வயலெட், கருப்பு, செம்பு, ஆரஞ்சி, ரோஸ், ஸ்கப் கலர்கள். கரைக்கும் முந்திக்கும் பூவேலையினமுள்ள நூதனமான புடவை.

18 முழம் × 2½ அகலம் ரூ. 4- 6.
15 முழம் × 2½ அகலம் ரூ. 3-12.

The Madura Oriental Trading Co.,
Laxmi, Cloth Store, MADURA.
(34)

---

## எங்கு சரசமான விலே? நயம் சரக்கு?

அயல் நாட்டிலிருந்து இவண் வந்து விற்பதற்கு சரியான பெங்கால். கலர், சில்வர், மேச்சஸ்கள், மாவலிக்வயர் அடியித் கண்டவர்களிடம் தேவையானது கிடைக்கும்.

காரியஸ்தர், தீப்பெட்டிகம்பெனி,
(37) பாலக்காடு, (தென்மலபார்.)

---

## குமரன்

காரைக்குடி தனவணிக நாட்டில் பிராமணரல்லாதார் முன்னேற்றத்துக்காக உழைக்கும் சிறந்த செந்தமிழ்ப்பத்திரிகை,

அடிமை வாழ்வைப் போக்கிக் குருட்டு நம்பிக்கையை நீக்கி, அறிவுச் சுடர் கொளுத்தும், கட்டுரைகளைத் தாங்கி வெளிவருகின்றது.

வருடச் சந்தா விவரம்:—

வாரப்பதிப்பு ரூ. 5—0—0
மாதப்பதிப்பு ரூ. 1—8—0

மானேஜர் குமரன், காரைக்குடி.
எப்)

---

## முன்னேற்றம்

இஃது

சுயமரியாதைக் கொள்கையை ஆயுதமாகக் கொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப் பத்திரிகை.

இதன் ஆசிரியர்-வே.சி.நாராயணசாமி
இதன் சந்தா ரூ. 4-0-0 அல்லது $ 2—25.

விலாசம்:—மானேஜர்,
"முன்னேற்றம்"
(எப்) 155, சிலிகிரோட், சிங்கப்பூர்

---

## திருப்பூர் ஜவுளி தினுசுகள்

அழகான பலரகம் அச்சுவேஷ்டிகள், சால்வை ரகங்கள், துண்டு மடிகள், ஷர்ட்டிங் பீஸ்கள் மிக நயமானதாகவே தயார் செய்யப்படுகிறது. வேண்டியவர்கள் நேரே எங்கட்கு ஆர்டர் செய்யவும். விலை விவரஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

M. V. Karuppanna Chettiar,
Khaddar Merchant
Tirupur, (S. India).
(47)

---

## A GOLD PLATED *LEVER* WRIST WATCH FOR. Rs. 6—14—0.



எங்கள் ரிஜிஸ்டர்டு ரோல்டு கோல்டு "பிடோ" லீவர் கைக்கடியாரம் பார்வைக்கு அழகாயிருக்கும், சரியான டைம் காட்டும். ஸிலிண்டர் கடியாரங்களைப்போல் கொஞ்ச நாளைக்குள் நின்று போவதல்ல. 5 வருஷமல்ல, 10 வருஷங்கள்கூட ரிப்பேர் இல்லாமல் போகக்கூடிய கடியாரம். இதை வாங்குவோருக்கு ரோல்டு கோல்டு கைச்சங்கிலி இனமாகச் சேர்த்து அனுப்பப்படும். வீணிலே ஸிலிண்டர் கடியாரங்களில் பணத்தை யிழக்காமல் எங்களை நம்பி எக்காலத்தும் உழைக்கக்கூடிய லீவர் கடியாரத்தை வரவழைத்துக் கொள்ளுங்கள். வாங்கிக்கொண்ட ஒருவாரம் வரை சரியாக ஓடவில்லையென்றால் வாபஸ் ஒப்புக் கொள்ளப்படும். 5 வருடம் காரண்டியுள்ளது. இனம் சங்கிலியுடன் கடியாரம் விலை ரூ. 6-14-0. ஸ்டாக் கொஞ்சம். உடனே எழுதுங்கள்.

Fancy Watch House,
(3) 119, G. P. O. MADRAS.

---

நிமிஷக்கணக்கில் குணமடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறாய்?
அபூர்வ சிகிச்சை! இதை—சாதனைசெய் ஆச்சரிய நிவர்த்தி!!

## சுவாச காச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும் கெட்டியான கபத்தை இளகச்செய்தும் கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப்பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது.

48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக்கூடிய டின் 1க்கு ரூ. 1—4.
தபால் கூலி அணா. 4. ஒரு டஜன் டின் விலை ரூ. 9.
6 டின் விலை ரூ. 5-4. 3 டின் விலை ரூ. 3
F, M. S. முதலிய ஊர்களுக்கு முன் பணம் ரூ. 2-8. அனுப்பவேண்டும்.
முன் பணம் இல்லாத ஆர்டர்களை கவனிக்கப்படமாட்டாது.

புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு வைத்யசாலை,
அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். S. I.

---

முந்துங்கள்! முந்துங்கள்!

## விலை ரூபா 2—12—0 தான்



### 130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி சாமான்கள் விவரம்.

. . 14 காரட் ரோல்டுகோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனா; ரோல்டுகோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; டை ஷர்ட்டு பொத்தான்கள் செட் 12; டை கல்லிழைத்த புரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; நேர்த்தியான முகம் பார்க்கும் கண்ணாடி 1, அழகிய தந்தச் சீப்பு 1, நேர்த்தியான கத்தி 1; காமிநேஷன் நூதனசாவி விளையாடும் செயின் 1; உயர்ந்த பென்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1; பலரக பென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12; மணிபார்ஸ் 1; ஜெர்மன் இங்கிபுட்டி 1; இங்கி மாத்திரைகள் 12; சென்ட் புட்டி 1; தேசிய டிரான்ஸ்பர் படங்கள் 34; அழகிய பலரக சேப்டி பின்கள் 24; ஆக 130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன்பெட்டி 1-க்கு 2-12-0.

கி. கிருஷ்ணா ஏஜன்ஸி,
(3) தபால்பெட்டி 119, மதராஸ்

---

ஒரே மாதம் வரையில் ரூ. 5-14

## ஒரு உண்மையான கிராமபோன்

என்ன விலைக்குக் கிடைக்கிறது பாருங்கள்.

பிக்மி போன் என்று சொல்லப்படும் சிறிய சைஸ் கிராமபோன் இது 200, 300 விலையுள்ள பெரிய கிராமபோன்களுக்கு இணையாக வாசிக்கக்கூடியது.



இதன் இயந்திர அமைப்பு பெரிய கிராமபோனைப்போலவே உள்ளது. இந்த கிராமபோன் பெட்டியில் சவுண்டு பாக்ஸ், ஆரன், இரண்டு டஜன் கொண்ட ஊசிப்பெட்டி எல்லாம் உண்டு. இரண்டு பக்கமும் வாசிக்கக்கூடிய ஒரு ரிக்கார்டும் இனமாகச் சேர்த்தனுப்பப்படும். இங்கிலீஷ் பாண்டுகள், சிரித்தல், விகடம் பேசுதல் முதலிய ரிக்கார்டுகள் தயாராயுள்ளன.

தனி ரிக்கார்டு 1-க்கு ரூ. 1.
ஒரு ரிக்கார்டுடன் கிராமபோன் பெட்டி 1-க்கு ரூ. 5-14.
தபால் செலவு ரூ 1-5.
உடனே எழுதுங்கள்.

Sole distributors,—
CANADIAN WATCH PEOPLE,
(3) G. P. O. MADRAS.

---

## படக்காட்சி

ரூ 20 ஆகயிருந்தது ரூ. 5-0-0 தான்

## அமெரிக்கன் சிறிய சினிமா மெஷின்

வெகு நூதனமான இந்த மெஷினினால் பொதுப் படக்காட்சிச் சாலையில் அனுபவிக்கும் ஆனந்தத்தை உங்கள் வீட்டிலேயே அடையலாம்.



நர்த்தனமாடுவது, தீச்செயல், கள் மோட்டார், ரயில், ஏரோப்ளேன் விபத்துகள், பாரிஸ் மாதர் லீலைகள், மலைகள், ஆறுகள் முதலிய காக்ஷிகள் ஓடுவதும் அசைவதும் மிகத் தெளிவாகத் தெரியும். பிலிம் டேப் ஒரு கஜம்கூட அனுப்பப்படும். உபயோகிக்கும் முறையும் மெஷினுடன் உண்டு.

மெஷின் குறைந்த (அசல்)
விலை ரூ. 5 0 0
தனி பிலிம் டேப் 1 கஜம் 0 6 0
3 கஜங்கள் 1 0 0

முந்துங்கள்!
லக்ஷ்மி ட்ரேட்ஸ் கம்பெனி,
173, தங்கசாலை வீதி, சென்னை.
(30)

திரு. ஜே. எஸ். கண்ணப்பர் அவர்களால் சென்னை "திராவிடன்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.